மீண்டும் பிடித்தார் ஆட்சியை கமரூன்




பக்கம் 13

உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 கதிர் 163 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 26, சனிக்கிழமை 09.05.2015

# பொலிஸாரின் அதிரடியில் சிக்கியது 19 கிலோ கஞ்சா



" இதுவரை வட மராட்சியில் 7க்கும் அதிகமான கடத்தல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அதற்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டனர். பொதுமக்களின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

*உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர்*

வடமராட்சி, மே 9

பருத்தித்துறை – வல்வெட்டித்துறை பொலிஸார் இணைந்து முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையில் சுமார் 19 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறை கடற்கரையோரம் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பக்.02

# தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி சம்பூர் விடுவிப்பு



## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

"திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பகுதியில் கடந்த அரசால் முதலீட்டு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணியை தற்போதைய அரசு மீளக் கையளித்துள்ளமையை வரவேற்கின்றோம். இது தமிழ் மக்களின் போராட்டத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்." – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த சொந்த மண்ணில் மீள் குடியமர்ந்து – தொழில் செய்து – சுதந்திரமாக வாழவேண்டும் என்ற தமிழ் மக்களின் இலட்சியக் கனவு நனவாகி வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பகுதியில் பக்.02

# நாவற்குழியில் குடியேறிய சிங்கள மக்கள் நலனை கவனிக்குக

*வடக்கு ஆளுநர் அரச அதிபருக்கு பணிப்பு*

யாழ்ப்பாணம், மே 9

நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்களுக்கான உதவிகள் வழங்கப்படாமை தொடர்பில் ஆராயுமாறு, வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்கார, யாழ். மாவட்ட அரச அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அரச அதிபரும் தென்மராட்சி பிரதேச செயலாளரை குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளார்.

நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்கள், தங்களுக்கு அரச உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை என்று – வடக்கு மாகாண ஆளுநர் பளிக்காரவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அதையடுத்து இது தொடர்பில் வடக்கு மாகாண பக்.02

# யாழ்ப்பாணத்து மக்கள் எப்படியோ ராணுவத்துடனேயே வாழ வேண்டுமாம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.நகரப் பகுதியில் இராணுவத்தினருக்கு அருகில் மக்கள் குடியமர்ந்துள்ளனர். அதைப்போன்று மீள்குடியேற்ற பிரதேசங்களிலும் மக்கள் இராணுவ முகாம்களுக்கு அருகில் குடியமரத்தான் வேண்டும். இராணுவ முகாம்களை அகற்ற முடியாது. – இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை கூறினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் பக்.02



# ஆட்சி மாறியுள்ள போதும் பொறுப்புக்கூறல் அவசியம்

*ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட் டெலி வலியுறுத்துகிறார்*



கொழும்பு, மே 9

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் அத்தியாவசியமானது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி வலியுறுத்தினார். இலங்கையில் ஆட்சிமாற்றம் இடம்பெற்றுள்ள போதிலும் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என அவர் தெரிவித்தார்.

இன்று ஐரோப்பிய ஒன்றிய தினம் கொண்டாடப்படும் நிலையில், எமக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

கடந்த கால போரின்போது இடம்பெற்ற பக்.02

# வலி.வடக்கில் மேலதிக விடுவிப்பு உடனில்லை

*பாதுகாப்பு அமைச்சின் தாமதத்தால்*

யாழ்ப்பாணம், மே 9

வலி.வடக்கில் புதிதாக காணிகள் விடுவிப்பது தொடர்பில், பாதுகாப்பு அமைச்சால் எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை. அதனால் வலி.வடக்கில் அடுத்த கட்ட மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இப்போது சாத்தியமில்லை என்று தெரியவருகின்றது. மீள்குடியேற்ற அமைச்சு, அடுத்த கட்ட மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கக் கூடிய பிரதேசங்கள் பக்.02



# "எங்கிருந்தும் இராணுவம் அகற்றப்படாது"

*பிரதமர் ரணில் திட்டவட்டம்*

கொழும்பு, மே 9

நாட்டின் எந்தப் பிரதேசத்தில் இருந்தும் இராணுவத்தினர் அகற்றப்படமாட்டார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கடந்த காலங்களைப் போலன்றி எதிர்காலத்தில் இராணுவத்தினர் கௌரவமாக நடத்தப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

"இலங்கையில் 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற போரை முடிவுக்கு கொண்டு வந்ததில் இராணுவத்தினருக்கு பக்.02

# எரிபொருள் விலைகளை அதிகரிக்கும் திட்டமில்லை

*நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க திட்டவட்டமாகத் தெரிவிப்பு*



கொழும்பு, மே 9

எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கும் திட்டம் எதுவுமில்லை என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகளை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் என்பன கோரிக்கை விடுத்திருந்த நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு பக்.02

# இதுவரையில் 9 பேர் மின்னல் தாக்கிச் சாவு

*நேற்றுமுன்தினமும் ஒருவர் சாவு*

யாழ்ப்பாணம், மே 9

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மின்னல் தாக்கத்தால் 9 பேர் உயிரிழந்துள்ளனர். நிலவுகின்ற உள்ளக பருவப் பெயர்ச்சியால் மழையுடனான காலநிலையுடன் அதிகளவில் மின்னல் தாக்கங்கள் ஏற்படலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. இந்த நிலைமை இந்த மாதம் இறுதிவரை நீடிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கம் பக்.02

# அதிகாரியைச் சுட்டுக்கொன்ற சிப்பாய்க்கு சாவுத் தண்டனை

*யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று விதித்தது*

யாழ்ப்பாணம், மே 9

போரின்போது இராணுவத்தினர் முதுகில் காவிக்கொண்டு திரியும் வானொலி தொலைத் தொடர்பு கருவி ஒன்று பழுதடைந்ததையடுத்து எழுந்த சிக்கலால், லெப்டினன்ட் தர அதிகாரியைச் சுட்டுக் கொன்ற சிப்பாய்க்கு யாழ்.மேல்நீதிமன்று சாவுத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்தது. குறித்த சம்பவம் நடைபெற்று 14 பக்.02

## இதுவரையில்

காரணமாக நேற்றுமுன்தினமும் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

மன்னார், மறிச்சுக்கட்டி, கத்தாங்கண்டல் பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கத்துக்கு இலக்கான ஒருவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் உயிரிழந்தார். 38 வயதான ஒருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

லிந்துலை மெலகுசேனை தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் 7 வயது சிறுமி ஒருவர் உட்பட மூவர் பலத்த காயங்களுடன் லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீட்டில் இருந்தபோதே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர்.

எம்பிலிபிட்டிய, கொலன்ன ஹேய்ஸ் தோட்டத்தின் மேற்பிரிவில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் 2 பெண்கள் காயமடைந்து கொலன்ன வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டுள்ளனர். தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 27 மற்றும் 28 வயதுடைய இரண்டு பெண்களே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர்.

தற்போது நிலவும் காலநிலையைக் கருத்தில் கொண்டு மின்னல் தாக்கங்களில் இருந்து தப்பிப்பதற்கு ஏற்றவாறு முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ற-4)

## வலி.வடக்கில்

தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியிருந்தது. ஆயினும் பாதுகாப்பு அமைச்சு இன்னமும் அதற்குப் பதில் வழங்கவில்லை.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில் கருத்துத் தெரிவித்த, யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஆகியோர், இன்றைய (நேற்றைய) கலந்துரையாடலில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மாத்திரமே கலந்துரையாடப்பட்டது என்று தெரிவித்தனர்.

"புதிதாகக் காணிகள் விடுவிப்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. ஆயிரத்து 13 ஏக்கர் நிலப்பரப்பு முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது."– என்று அவர்கள் தெரிவித்தனர்.

"அடுத்த கட்ட மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கக்கூடிய இடங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சிடம் தகவல் கோரப்பட்டுள்ளது. ஆயினும் பாதுகாப்பு அமைச்சு இதுவரை அவற்றை வழங்கவில்லை."– என்று கூறினார் மீள்குடியேற்ற அமைச்சரின் செயலாளர். "அடுத்த கட்ட மீள்குடியமர்வு தொடர்பில் மேல்மட்டத்தினரே தீர்மானிப்பர்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவும் கலந்து கொண்டார். "அடுத்தகட்ட மீள்குடியமர்வு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் பேசவுள்ளோம்."– என்று கூறினார். (ற-5)

## எரிபொருள்

தெரிவித்துள்ளார். கடந்த அரசின் மோசடியாலேயே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைந்துள்ளது. அவ்வாறில்லாவிட்டால் எரிபொருள் விலையை இன்னமும் குறைத்திருக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். எரிபொருள்கள் விலைகளை அதிகரிக்க அனுமதிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

"திறைசேரி பிணைப்பத்திர விநியோகம் தொடர்பில் நாடாளுமன்றில் சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தை எதிர்க்கட்சிகள் தோற்கடித்தன. அந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் சிறந்த முகாமைத்துவம் காரணமாக நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாதக நிலைமை ஏற்படவில்லை. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு தற்போது உரிய இடத்தை வழங்கத் தொடங்கியுள்ளது. கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான ஓர் நிலைமை காணப்படவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த கூட்டம் இலங்கையில் நடைபெறவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியால்வழங்கப்படும் உதவுதொகையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்தாலும் உள்நாட்டில் எரிபொருள்களின் விலை மட்டங்களை அதிகரிக்க வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க அறிவுறுத்தியுள்ளார். (ற-10)

## பொலிஸாரின்

நிலையில் அவை கைப்பற்றப்பட்டன. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர், "சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒருவர் தப்பியோடியுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது."– என்று தெரிவித்தார்.

பருத்தித்துறைக் கடலூடாக கடத்தல் முயற்சி ஒன்று நடைபெறுகின்றது என்று நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு தீவிர தேடுதலை மேற்கொண்டது. விசேட பொலிஸ் குழுவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வழிநடத்த, பொலிஸ் பரிசோதகர் இம்மானுவேல் தலைமை தாங்கினார், அவர்கள் கடற்கரையோரமாகத் தமது தேடுதலைத் தீவிரப்படுத்தியிருந்த நிலையில் இரவு 9.30 மணியளவில் இன்பர்சிட்டிக் கடற்கரையோரமாக சந்தேகத்துக்கிடமான வீடொன்றைச் சோதனையிட்டனர். அங்கு 19 கிலோவுக்கும் அதிக நிறையுடைய கஞ்சா பொதிகளாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

வீட்டுக்குள் பதுங்கியிருந்த தங்கவடிவேல் சுப்பிரமணியம் என்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர் சுப்பர்மடத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவருடன் தங்கியிருந்த மதிரூபராஜா என்பவர் தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினார்கள்.

மீட்கப்பட்ட கஞ்சாவுடன் வடமராட்சிப் பகுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைப்பற்றிய கஞ்சாவின் அளவு 260 கிலோவைத் தாண்டியுள்ளது. இதுவரை 7 க்கும் அதிகமான கடத்தல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

தமது இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயற்பட்டனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். எதிர்கால சந்ததியினரின் வளமான வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு போதைப் பொருள் தொடர்பான தகவல்களைத் தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தகவல் வழங்குபவர்களின் விவரம் மிக ரகசியமாகப் பேணப்படும் என்று தெரிவித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தகவல்களைத் தமக்கு நேரடியாகவோ தொலைபேசி வாயிலாகவோ அறியத்தரமுடியும் என்றும் கூறினார். (ற)

## யாழ்ப்பாணத்து

இவ்வாறு கூறினார்.

"மீளக்குடியமர்ந்த பகுதிகளில் எந்தவொரு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. அரைநிரந்தர வீடுகள் கிடைக்கப் பெற வேண்டுமாக இருந்தால், மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகின்றது. பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் எவ்வாறு, இராணுவ முகாம்களுக்கு அருகில் குடியமர முடியும்?."– என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"அதற்கு ஒன்றுமே செய்ய முடியாது."– என்றார் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர். "யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் எப்படியோ இராணுவத்துக்குப் பக்கத்தில்தான் இருக்க வேண்டும். இராணுவத்தை நாங்கள் இங்கிருந்து எழுப்ப முடியாதுதானே?. யாழ்.நகரில் இராணுவ முகாம்களுக்குப் பக்கத்தில்தானே மக்கள் இருக்கின்றார்கள்?."– என்று பதில் கேள்வி எழுப்பினர் அவர்.

"அடிப்படை வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்காது அவ்வாறு வசிக்கச் சொல்வது சரியாகுமா?"– என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"அடிப்படை வசதிகளை ஒரே தடவையில் செய்து கொடுக்க முடியாது."– என்று பதிலளித்தார் அமைச்சின் செயலாளர். "படிப்படியாகச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்."– என்றும் கூறினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் "எத்தனைபேர் அங்கு தங்கப் போகின்றார்கள் என்ற விவரத்தைப் பெற்று அவர்களுக்கே அரை நிரந்தர வீடுகளை நாங்கள் வழங்கப் போகின்றோம்."– என்று கூறினார். "அங்கு தங்கிருந்தால்தான் அவை வழங்கப்படும் என்று இல்லை. ஆனாலும் அங்கு மீள்குடிமர்வோம் என்று பதிந்தால் மாத்திரமே அரை நிரந்தர வீடு வழங்கப்படும்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அரை நிரந்தர வீடுகளைப் பெற்று விட்டு அவர்கள் அங்கு வந்து குடிய மராவிட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்?."– என்று அவர் கேள்வி எழுப்பினார். "அதனால்தான் அங்கு குடியமர விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு மாத்திரம் அரை நிரந்தவீடுகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்."– என்று அரச அதிபர் தெரிவித்தார். (ற-5)

## தமிழ்

முதலீட்டு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் 818 ஏக்கர் காணி மீளக் கையளிக்கப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

"கிழக்கில் போர் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து சம்பூரில் இருந்தும் மக்கள் பலர் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறினர். இதனையடுத்து அந்தப் பகுதியில் 818 ஏக்கர் காணி முதலீட்டு வலயத்துக்காகவும், 237 ஏக்கர் காணி கடற்படை முகாமுக்காகவும், 540 ஏக்கர் காணி அனல் மின் நிலையத்துக்காகவும், 40 ஏக்கர் காணி மின்சார சபைக் காகவும் கடந்த அரசால் சுவீகரிக்கப் பட்டிருந்தது.

இந்தக் காணிகளை விடுவிக்கு மாறு நாம் கடந்த அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததுடன், மக்களும் போராட்டங்களை நடத்திவந்தனர். ஆனால், குறித்த காணிகளை விடுவித்து மக்களை விரைவில் குடியேற்றுவோம் என்று கடந்த அரசு வாக்குறுதிகளை வழங்கிவந்தபோதிலும் இறுதிவரைக்கும் அதனை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், இடம்பெயர்ந்த சம்பூர் மக்கள் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற வேண்டும் என்பதில் உறுதியாக – விடாப்பிடியாக இருந்துவந்தனர். மக்களின் இந்த விடாப்பிடி தற்போது புதிய அரசில் வெற்றியளித்துள்ளது."– என்று அவர் குறிப்பிட்டார்.

"சம்பூர் பகுதியில் முதலீட்டு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட மக்களின் 818 ஏக்கர் காணி மீளக் கையளிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேவேளை, சம்பூர் பகுதியில் கடற்படை முகாமுக்காக சுவீகரிக்கப்பட்ட 237 ஏக்கர் காணியும் விரைவில் விடுவிக்கப்படும் என்று மைத்திரி அரசு எமக்கு உத்தரவாதம் வழங்கியுள் ளது. புதிய அரசு சம்பூரில் மக் களின் காணிகளை விடுவிப்பதற்கு முன்வந்துள்ளமைக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக, இதற்காகப் பாடுபட்டுவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், கடந்த பத்து வருடங்களாக வேறு இடங்களில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் சம்பூர் மக்கள் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், மைத்திரி அரசின் இந்த நல்லெண்ண நடவடிக்கைக்கு எதிராக எவரும் செயற்படவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, சம்பூரில் மீள்குடியேறவுள்ள மக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குமாறு நாம் அரசை வேண்டிக்கொள்கின்றோம்" – என்றார். (ற-சி)

## ஆட்சி

சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் ஏன் அவசியமானது என அவர் விவரித்தார்.

"கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து ஆராய்வது மிகவும் கடினமானதொரு விடயமாக அமைந்தபோதிலும் கடந்த காலத்தில் என்ன நடைபெற்றதென ஆராயாமல் – அதனைப் புரிந்துகொள்ள முற்படாமல் விடுமிடத்து அந்த விடயம் வெறுமனே மறக்கப் பட்டதாகக் கைவிடப்பட மாட்டாது. அது தொடர்ந்துமே நிலைகொண்டிருப்பதுடன், வேறு வித்தியாசமான வடிவில் மீண்டும் வெளிப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகமாகும்"–எனக் குறிப்பிட்டார்.

புதிய அரசு பதவிக்கு வந்ததுடன் வழங்கிய உறுதிப்பாடுகளை தாம் வரவேற்பதாக குறிப்பிட்ட இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டெலி, இலங்கை அரசு உறுதியளித்த பல விடயங்களில் காத்திரமான முன்னேற்றத்தை காண்பித்துள்ளதாகச் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, மிகவும் முக்கியமிக்கதான மோதலின் பின்னரான நல்லிணக்க விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நல்லிணக்கத்தை வலியுறுத்துகின்ற பல கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளதுடன், அந்தத் திசையை நோக்கியதாக பல காத்திரமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இராணுவ ஆளுநர்களுக்குப் பதிலாக வடக்கு, கிழக்கில் சிவில் ஆளுநர்களை நியமித்தமை நல்லிணக்கத்திற்கு உதவக் கூடிய நல்லதொரு உதாரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு சலுகையாக வழங்கப்பட்டு தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளஐரோப்பிய ஒன்றியத்தின்ஜிஎஸ்பி பிளஸ் வர்த்தகச் சலுகையானது இங்குள்ள மனித உரிமை நிலைவரம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றுடன் தொடர்புடையதெனக் குறிப்பிட்ட தூதுவர், காண்பிக்கப்படும் முன்னேற்றத்தை அடியொற்றியே இதனை மீள வழங்குவது குறித்து தீர்மானிக்கப் படும் எனச் சுட்டிக்காட்டினார். (ற-சி)

## நாவற்குழியில்

ஆளுநர் அரச நிர்வாகத்துக்கு உட்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

அதையடுத்து யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், தென்மராட்சி பிரதேச செயலாளரை அழைத்து நேற்று விளக்கம் கோரியுள்ளார். இது தொடர்பில் உடனடியாக குறித்த பகுதிக்குச் சென்று நிலைமையை ஆராயுமாறும் அரச அதிபர் பணித்துள்ளார்.

நாவற்குழியில் 72 சிங்களக் குடும்பங்கள் வரையில் பதிவு செய்துள்ளனர். ஆனால் அவர்களில் 5 குடும்பங்கள் மாத்திரமே, தமது குடும்ப அட்டைப் பதிவுகளை இங்கு மேற்கொண்டுள்ளன. குடும்ப அட்டைப்பதிவு மேற்கொள்வதாயின், முன்னர் வசித்த பிரதேசத்திலிருந்து சகல பதிவுகளையும் உத்தியோகபூர்வமாக நீக்க வேண்டும். நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்கள், தாம் முன்னர் வசித்த பிரதேசத்திலிருந்தும் பதிவுகளை நீக்கவில்லை. குடும்ப அட்டைப் பதிவுகள் மேற்கொண்டு மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு மாத்திரமே உதவிகள் வழங்க முடியும் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-5)

## எங்கிருந்தும்

பெரும் பங்கு உள்ளது. ஆனால் கடந்த அரசு இராணுவத்தினரை உரிய முறையில் நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலமையை, மைத்திரி அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தில் இல்லாது ஒழிப்போம் என்று உறுதி அளித்தோம். அதே போல் இராணுவத்தினருக்கான உரிய மரியாதையை இனி வரும் காலங்களில் சரியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்குரிய வேலைகள் பகிர்ந்தளிக்கப்படும்."– என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த வாரம் நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை விமானப் படையினூடாக இராணுவத்தினர் மீட்புப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். அங்கு எமது இராணுவத்தினர் நேபாள படையினருடன் இணைந்து மிகச் சிறப்பாகச் செயற்பட்டனர்."– என்றும் அவர் புகழாரம் சூட்டியுள்ளார். (ற-5)

## அதிகாரியை

வருடங்களின் பின்னர் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் அம்மன் கோயிலடியை அண்மித்து 2001ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அங்குள்ள கஜபா படையணியின் எஸ்.ஓ.பி. படையணிக்குக் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றிய லெப்டினன்ட் ஹேரத் முதியான்சலாகே துஷார மனோஜ் விக்கிரமசிங்க என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். ரி–56 ரகத் துப்பாக்கியால் சுட்டு அவர் கொல்லப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே படையணியில் சிப்பாயாக இருந்தவரும் புத்தளத்தைச் சேர்ந்தவருமான திசாநாயக்க முதியான்சலாகே பிலியந்த திசாநாயக்க என்பவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டு யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அது தொடர்பான விசாரணை யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் கனகா சிவபாதசுந்தரம் முன்னிலையில் நடைபெற்று வந்தது. விசாரணையில் சாட்சியமளித்த ஒரு வர், வானொலி தொலைத் தொடர்பு கருவி ஒன்று பழுதடைந்தமைக்கு அதனை வைத்திருந்தவரான எதிரியே காரணம் என்று லெப்டினன்ட் குற்றம் சுமத்தியதோடு அது தொடர்பில் குறித்த சிப்பாயிடம் எழுத்துமூல விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு சிப்பாய் ஒரு எழுத்துமூல விளக்கம் எழுதிக் கொடுத்திருந்தார். அது தெளிவில்லாமல் இருந்ததால் மீண்டும் எழுதித் தருமாறு லெப்டினன்ட் கோரியிருந்தார். – என்று தெரிவித்திருந்தார். அதனால் சினங்கொண்டு ஆத்திரமுற்று அவ்வாறு செய்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

கொல்லப்பட்ட லெப்டினன்ட்டின் உடலிலுள்ள காயங்கள் உடனடியாக சாவை ஏற்படுத்தும் காயங்கள் என்பதனை சட்டவைத்திய அதிகாரி நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் கூறியிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் மேல்நீதிமன்ற ஆணையாளர் வழக்கின் தீர்ப்பை அறிவித்தார். அதற்கு முன்னதாக, திறந்த நீதிமன்றில் அனைவரையும் எழுந்து நிற்குமாறு கூறினார். மின்விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டன. ஆணையாளர் எழுந்து நின்று தீர்ப்பை வாசித்தார்.

கண்கண்ட சாட்சியங்களின் வாக்குமூலங்களையும் ஆதாரமாகக் கொண்டு எதிரி மீதான கொலைக் குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதனால் உமக்கு சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிப்பதாக எதிரிக்குக் கூறினார். பின்னர் தீர்ப்பின் ஆவணத்தில் கையொப்பமிட்டு பேனாவை உடைத்து எறிகிறார். அத்துடன் நீதிமன்று கலைந்தது. (ற-4,101)

## சுகாதார வசதி இல்லாத உணவகங்கள் மீது வழக்கு

யாழ்ப்பாணம், மே 9

அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி யாழ்.நகரில் இயங்கி வந்த நான்கு உணவகங்கள் மீது பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கடந்த புதன்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி மற்றும் நவீன சந்தைப்பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள் மீதே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உணவின் மூலம் நோய் தொற்று ஏற்படும் விதமாக உணவுப்பொருள்களை வைத்திருந்தமை, வெற்றுக் கைகளால் உணவு பரிமாறியமை, உணவுபரிமாறுபவர்கள் மருத்துவ சான்றிதழை பெற்றுக்கொள்ளாமல் இருந்தமை மற்றும் சீருடை யின்றி உணவுபரிமாறியமைபோன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு ஒவ்வொரு உணவக உரிமையாளரையும் தலா பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். அத்துடன் ஆகக்குறைந்த சுகாதார வசதிகளைக் கொண்டிராத இரண்டு உணவகங்களை தற்காலிகமாக மூடுமாறும் மேற்குறித்த குறைபாடுகளை சீர் செய்தவுடன் நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை மீளத் திறக்குமாறும் நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.(ற-103)

# வடக்கின் மேம்பாட்டுக்கு இந்தியா உதவ வேண்டும்

### பாரதிய ஜனதாக் கட்சி மூத்த தலைவர் இல. கணேசனிடம் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 9

வடக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கு இந்திய அரசு தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான இல. கணேசனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த, பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத்தின் மூத்த தலைவர்களுள் ஒருவரான இல.கணேசனை, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.



வடக்கு மாகாணத்தின் பொருளாதார கட்டுமானங்களை மேம்படுத்தல், போரால் பாதிக்கப்பட்ட கணவனை இழந்த பெண்கள் மற்றும் பொது மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களுக்கு இந்திய அரசு, உதவி செய்ய வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட இல. கணேசன், இந்தியா திரும்பியதும், இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அமைச்சர்களுடன் கலந்துரையாடி நல்லதொரு பதிலை பெற்றுத்தருவதாக பதிலளித்துள்ளார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ளவர்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதற்காக பலாலி, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து இந்தியாவுக்கு விமான சேவைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும், வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக காங்கேசன்துறை.துறைமுகத்தை வர்த்தக துறைமுகமாக செயற்படுத்த வேண்டுமெனவும், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டுமெனவும் மேற்கொள்ளப்பட்ட வடக்கு மாகாண சபைத் தீர்மானத்தை நடைமுறைபடுத்த இந்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்றும் இல. கணேசனிடம் அவைத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-5)

## 993 குடும்பங்கள் பதிவு: 70 குடும்பங்களுக்கே முதலில் அரை நிரந்தர வீடுகள் அமைக்கப்படும்

### வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கு மீள்குடியமர்வு நடவடிக்கை தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் கருத்து

யாழ்ப்பாணம், மே 9

மீள்குடியமர்வுக்காக 993 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் முதல் கட்டமாக 70 குடும்பங்களுக்கே அரைநிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன் அரசிடம் போதிய நிதி இல்லாமையாலேயே, மக்களுக்கான உதவித் திட்டம் வழங்கல் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தலில் தாமதம் நிலவுகின்றது– இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை தெரிவித்தார்.

மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜ பிள்ளை, அரச அதிபர் நா.வேதநாயகன், வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலாளர்கள், இராணுவ, கடற்படை அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில், உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த ஒரு தொகுதி நிலங்கள் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டன. ஆயிரத்து 13 ஏக்கர் நிலப்பரப்பு இது வரையில் இவ்வாறு மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மீள்குடியமர்வதற்காக 993 குடும்பங்கள் வரையில் பதிவு செய்துள்ளன. இவ்வாறு மீளக்குடியமரும் மக்களில் 70 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. மேலும், அதனுடன் இணைந்ததாக நிரந்தர மலசலகூடமும் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளது. அரை நிரந்தர வீடுகள் ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியானவை.

மேலும், உள்ளக வீதிகள் புனரமைப்பு உள்ளிட்ட ஏனைய அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு, போதிய நிதி இல்லை. மேலும் நடப்பாண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டம் கடந்த ஆண்டே தயாரிக்கப்பட்டுள்ளதால், புதிய திட்டங்களுக்குரிய நிதிகளைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கான உதவிகளை, விசேட தேவையாக கணித்துச் செயற்படுத்த வேண்டும் என்று மேல்மட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

## காரைநகரில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு அனுமதி கிடைத்தது

### காணித் தெரிவு நடைபெறுவதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

காரைநகரில் நிரந்தர பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், அதற்குரிய காணியை கண்டறிவதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க தெரிவித்தார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸ் நிலையம் அமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. பொலிஸ் நிலையம் அமைக்கப்படாவிட்டாலும், 'பொலிஸ் போஸ்ட்' அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தாலும், அது நடைமுறைப்படுத்தப் படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், காரைநகருக்கு தனியான பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அதற்குரிய காணியை அடையாளம் காணும் வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாவட்டச் செயலக கலந்துரையாடலில் தெரிவித்தார்.

அதேவேளை, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்கள் தனித் தீவுகளாக இருப்பதால் அங்கு தனியான பொலிஸ் போஸ்ட் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரினால் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், அதற்குரிய நடவடிக்கைகளை ஆராய்வதாகத் தெரிவித்தார். அத்துடன், உடனடியாக அந்தப் பிரதேசத்துக்கு வாரத்தின் இறுதி நாள்களில் நடமாடும் பொலிஸ் சேவையை விஸ்தரிப்பதாகத் தெரிவித்தார். (ற-5)

## அதிபர் தரம் 1 நியமனக் கடிதம் வழங்கலில் புறக்கணிப்பு

### கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட அதிபர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

அதிபர் தரம் 1 நியமனக் கடிதங்கள் வழங்கலில் அரசால் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட அதிபர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் உள்ள மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், துணுக்காய், மடு ஆகிய வலயங்களைச் சேர்ந்த 30 அதிபர்களே இவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

போர் இடம்பெற்றபோது அதாவது 2009ஆம் ஆண்டு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையிலே சித்தி அடைந்த அதிபர்களுக்கான நியமனக்கடிதங்களே வழங்கப்பட்டுள்ளன. அந்தக் காலங்களில் நாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தாலும் அந்த பரீட்சையை எழுத முடியாத ஒரு சூழ் நிலையிலே காணப்பட்டது. இது எங்களுடைய தவறு அல்ல. போர் எங்களுக்கு பரீட்சை எழுதுவதற்கானகளத்தைஅமைத்துத் தரவில்லை எனவே அதன் பின்னர் நாங்கள் முகாம்களில் இருக்கும் போதும்மீள் குடியேற்றத்தின்போதும் அதிபர் தரம் 1 க்கான வினைத்திறன் தடைதாண்டல்பரீட்சை எழுதி அதிலே சித்தி அடைந்துள்ளோம். – என்று பாதிக்கப்பட்ட அதிபர்கள் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல் வேறுபட்ட பாதிப்புக்களுக்கு உள்ளான போதும் அந்தப் பரீட்சையை எழுதிச் சித்தி அடைந்த எமக்கு இன்று வரை அதிபர் தரம் 1க்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு பரீட்சை எழுதியவர்களுக்கே இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. நாங்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள். முல்லைத்தீவு வலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் ஒருவர் தனது இரு கால்களையும் இழந்தவர். அது மட்டுமல்லாமல் கிளிநொச்சி வலயத்திலே ஒரு அதிபர் தனது கணவனை இழந்தவர். ஆனாலும் சோர்ந்து போகாது நாங்கள் மீண்டும் பரீட்சை எழுதி அதில் சித்தி அடைந்துள்ளோம். எங்களுக்கான நியமனக்கடிதங்களை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் – என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-21)



cmyk

# பொதுவான அபிவிருத்தியே எமக்கு தேவை

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மே 9
எங்களுக்குத் தேவை பொதுவான அபிவிருத்தியே தவிர தனிப்பட்ட அபிவிருத்தி அல்ல. அதைக் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். - இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இ.போ.ச. மற்றும் தனியார் போக்குவரத்து சங்கத்தினருக்கிடையிலான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாக பஸ் நிலையம் இல்லாதமை ஒரு பிரச்சினையாக உள்ளது. அதனால் தனியார் போக்குவரத்து சங்கத்தினருக்கும், இ.போ.ச வுக்கும் இடையிலான முரண்பாடுகள் அடிக்கடி இடம்பெறுகின்றன. அவற்றைக் கருத்தில் கொண்டு பொன்நகரில் 4 ஏக்கர் காணியில் டிப்போ அமைக்க முடியும் என்று இ.போ.ச. முகாமையாளர்களுக்கு கூறப்பட்டது. ஆயினும் அந்த இடம் நகரில் இருந்து தூரத்தில் உள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். - என்று அவர் அங்கு தெரிவித்தார்.

இதை நாங்கள் தனிப்பட்ட முறையில் சிந்திக்கின்றோம். அவ்வாறு இல்லாது பொதுவான முறையில் சிந்திக்க வேண்டும். அந்த இடம் டிப்போ அமைப்பதற்குப் பொருத்தமான இடமாக அமையும். தற்போதைய பஸ் நிலையம் உள்ள இடத்தைப் பார்த்தேன். மோசமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. மிகவும் கவலையாக இருந்தது. தனியார் பஸ்களுக்கான நிலையம் அமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இ.போ.ச. பஸ் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையையும் நாம் மேற்கொண்டுள்ளோம். உங்களுக்குத் தெரியும் பொதுவாக பஸ் நிலையத்துடன் டிப்போ இணைந்திருப்பதில்லை. அதனாலேயே பொன்நகரில் டிப்போ அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டது.- என்றும் அவர் தெரிவித்தார். (ற-21)

## கர்ப்பிணியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, மே 9
கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் அதே பகுதியைச் சேர்ந்த நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-9)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 9
ஒருகிலோகிராம் கஞ்சாவுடன் உருத்திரபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த நபரொருவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வைத்து பொலிஸார் கைதுசெய்து யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும் 21 ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார்.

குறித்த சந்தேக நபர் பண்டத்தரிப்பு பகுதியிலிருந்து கஞ்சாப் பொதியை கொடிகாமத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-103)

## கோரக்கன்கட்டுக்கு இதுவரை மின் இல்லை

### கிராம மக்கள் கவலை

கிளிநொச்சி, மே 9
கிளிநொச்சி கோரக்கன்கட்டு கிராமத்துக்கு இதுவரை மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் உள்ள கோரக்கன்கட்டு கிராமத்தில் வை. எம். சி.ஏ வீதியில் உள்ள சுமார் 50 வீடுகளுக்கே மின்சார வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"போரால் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமமாக இருக்கும் எங்களுடைய கிராமத்திற்கு இன்றுவரை மின்சார வசதிகள் எவையும் செய்து தரப்படவில்லை. எங்களுடைய பிள்ளைகள் இன்றுவரை குப்பி விளக்கிலேயே கல்வி கற்கின்றார்கள். எங்களை அண்டியுள்ள கிராமங்களுக்கு செய்து கொடுக்கப்பட்ட மின்சார வசதி எமக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பலரிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். எந்த பயனும் இல்லை. வடக்கின் வசந்தத்தினூடாக செய்து தரப்படும் என்று கூறப்பட்டபோதும், இதுவரை அவை எவையும் மேற்கொள்ளப்படவில்லை."- என்று அந்தக் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பில் கவனமெடுத்து தமது கிராமத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-21)

## பகுப்பாய்வு அறிக்கை இல்லாத குற்றப்பத்திரங்கள் நிராகரிப்பு

### பொலிஸாரிடம் விளக்கம் கோரியது நீதிமன்று

யாழ்ப்பாணம், மே 9
ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர்கள் தொடர்பான இரு வழக்குகளில் அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெறாமல் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரங்களை யாழ். நீதிவான் நீதிமன்றம் நிராகரித்ததுடன் குறித்த செயற்பாடு தொடர்பாக விளக்கமளிப்பதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகரை எதிர்வரும் இருபதாம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் கட்டளையிட்டது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் பழைய பஸ் நிலையப் பகுதியில் ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் சிங்கள இளைஞர் ஒருவர் உட்பட மூவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் ஹெரோயின்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட வேண்டுமென விண்ணப்பித்ததுடன் அதற்காக சாட்சியங்களையும் நெறிப்படுத்தி கைப்பற்றப்பட்ட ஹெரோயினை அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி இருந்தனர்.

அதற்கான அறிக்கைகள் கிடைக்கப்பெறாத நிலையில் கடந்தபுதன்கிழமை இவ்வழக்குகள் அழைக்கப்பட்டபோது பொலிஸார் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர். அதையடுத்தே நீதிவான் பெ. சிவகுமார் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (ற-103)

## பாடசாலை செல்லாத சிறுவர்கள் 9 பேர் கோப்பாயில் கண்டுபிடிப்பு

### மீளவும் சேர்ப்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 9
கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத 9 சிறுவர்கள் நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களை மீளவும் பாடசாலைக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகள் கோப்பாய் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலைக்கான இரண்டாம் தவணை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லாத நிலையில் சிறுவர்கள் இருக்கின்றனரா என்பது தொடர்பில், பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டுள்ளது. இதன் போது, புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 9 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் ஒளிந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சிறுவர்களை மீட்ட, கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், அவர்கள் பாடசாலைக்குச் செல்லாத காரணங்களைக் கேட்டறிந்தனர். இதன் போது அவர்கள் வறுமை மற்றும் அக்கறையின்மை காரணமாகவே பாடசாலைக்குச் செல்லவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அதையடுத்து, சிறுவர்களுக்கு கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியதுடன் அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்டவர்கள் அனைவரும் தரம் 9 இற்கு கீழே கல்வி கற்பவர்கள். எனவே அவர்கள் கட்டாயம் கல்வி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதுடன், அவர்களை மீளவும் பாடசாலையில் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-5)

## முழங்காவிலில் விரைவில் வசதிகளுடன் பஸ் நிலையம்

### அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி

கிளிநொச்சி, மே 9
முழங்காவில் பிரதேசத்திற்குரிய பஸ் நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இ.போ.சவினருக்கும், தனியார் பஸ் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏ-32 வீதியில் உள்ள முழங்காவில் பகுதியில் இதுவரை காலமும் பஸ் தரிப்பிடங்கள் எவையும் இல்லை எனவும் முழங்காவில் பிள்ளையார் கோவிலின் முன்றிலில் நின்றே மக்கள் பஸ்ஸில் பயணிக்கும் நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு தேவையான மலசல கூட வசதிகள் எவையும் இல்லை. மலசலகூட வசதிகளை யாவது செய்து தரவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தினர் வடக்கு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனைக் கருத்தில் கொண்ட அமைச்சர் இந்தவருடம் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பஸ் நிலையம் கட்டித் தருவதாக உறுதியளித்தார். ஆனால் பஸ் நிலையத்துக்கான காணி அரச காணியாக இருப்பதால் காணியை பெறுவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலருடன் இணைந்து மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார். (ற-21)

## பயணிகளுக்காக வீதியில் காத்திருக்கும் பஸ்களின் சாரதிகள் கைதாவர்

### கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 9
கிளிநொச்சியூடாக ஏ-9 வீதியில் பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்கள் பயணிகளுக்காக வீதிகளில் காத்திருப்பது அவதானிக்கப்பட்டால் அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்கிளிநொச்சிமாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இ.போ.ச. [illegible] சங்கத்தினர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார், இ.போ.ச பஸ்களுக்கிடையிலான போட்டி காரணமாக அவர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டு பயணிகளை ஏற்றிச் செல்கின்றனர். பஸ்கள் விபத்துக்குள்ளாகின்றன. பயணிகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் பஸ்ஸுக்காக குறித்த நேரத்துக்கு வரும் பயணிகளை ஏற்றாது [illegible] முன்பே போய் விடுகின்றார்கள். அல்லது அதற்கு முன்னர் வந்து பயணிகள் வரும்வரையும் காத்து நிற்கின்றார்கள். அதனால் பின்னால் வரும் பஸ்கள் வெறுமனே செல்லும் நிலை காணப்படுகின்றது. அல்லாவிடில் இரு பஸ்களும் போட்டி போட்டுக் கொண்டு செல்கின்றன.

இந்த பிரச்சினையை இலகுவாக தீர்ப்பதற்காக இனி வரும் காலங்களில் வீதிகளில் பயணிகளுக்காகக் காத்திருக்கும் பஸ்கள் அவதானிக்கப்பட்டால் அதனுடைய சாரதிகள் [illegible] நிறுத்தப்படுவார்கள். காலையில் வேலைக்கு செல்பவர்கள் , பாடசாலை செல்பவர்கள், தொழில் நுட்பக் கல்லூரிகளுக்குச் செல்பவர்கள், பல்கலைக்கழகம் செல்பவர்களுக்காக இந்த பஸ்கள் வீதிகளில் தரித்து வைக்கப்படுகின்றன. இது போன்று மாலையிலும் இவர்கள் திரும்பி வரும் வரைக்கும் பஸ்கள் காத்திருக்கின்றன. இதை அவதானிப்பதற்காக விசேட போக்குவரத்து பிரிவினர் ஒழுங்கமைக்கப்பட்டு ரோந்து நடவடிக்கைகளுக்காக நியமிக்கப் [illegible]



தயாரிக்கப்படும் நேர சூசி பொலிஸாரின் கைகளில் கிடைத்ததன் பின்னர் உடனடியாகவே மேற்கொள்ளப் [illegible]

# நாட்டின் பாதுகாப்பே தற்போதையை தேவை

## அரசியல் கட்சிகளை ஒன்றுபட அழைக்கிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மே 09
அரசியல் பலத்தைப் பாதுகாப்பதை விட நாட்டைப் பாதுகாப்பதே தற்போதைய தேவை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இதற்காகச் செய்ய வேண்டிய ஒரே விடயம் அரசியல் கட்சிகள் பேதங்களைக் கைவிட்டுவிட்டு ஐக்கியப்படுவதாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.
மாகம்புர ருகுணு உரிமைகள் அருங்காட்சியகத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
இந்த அருங்காட்சியகத்தில், அம்பாந்தோட்டை மாவட்ட அரச அதிபராகப் பணி யாற்றிய ஆங்கிலேயரான லெனாட் வூல் காலம் முதல் சேகரிக்கப்பட்ட அரும் பொருள்கள் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.
இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,
சர்வகட்சி, தேசிய அல்லது கூட்டணி



என்று எந்தப் பெயரில் இருந்தாலும் சகல கட்சிகளும் ஒன்றிணைந்த அரசே இலங்கைக்குத் தற்பொழுது தேவைப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, இந்தத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, நிரூபமா ராஜபக்ஷ ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்களில் எவரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லைஎனத்தெரியவருகின்றது. (த)

## புதிய கட்சிக்கு கோத்தாவை அழைக்கின்றது பலசேனா

கொழும்பு, மே 09
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவை தனது அமைப்பின் புதிய அரசியல் கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு பொதுபலசேனா அழைப்பு விடுத்துள்ளது.
இந்த அழைப்பை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், ஏற்றுக் கொண்ட போதும் பொதுபலசேனா அமைப்புடன் இணைந்து அரசியல் நடத்துவது குறித்து அவர் இது வரையிலும் எவ்வித தீர்மானமும் மேற் கொள்ளவில்லை என அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரந்தெனிய நந்ததேரர் தெரிவித்துள்ளார்.
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட பலர் உள்ள நிலையில், அவர்களுடனும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கட்சியைப் பதிவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தேர்தல் கள் ஆணையாளர் நாயகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தீர்மானங்கள் மற்றும் கோரிக்கைகள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திடம் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலும் தமது கட்சியின் வேட்பாளர்களை விரைவில் முன்னிலைபடுத்துவதாகவும்தேரர்தெரிவித்துள்ளார்.
கட்சியின் சின்னம் மற்றும் பெயர் தொடர்பில் கலந்துரையாடுவதுடன், கட்சியாகப் பதிவு செய்தல் தொடர்பிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வித்தாரந்தெனிய நந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மாற்றுக் கட்சியில் களமிறங்கும் பந்துல

கொழும்பு, மே 09
எதிர்வரும் பொதுத் தேர்தலில் மாற்றுக் கட்சியில் களமிறங்கப் போவதாக பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். எனசிங்களஊடகமொன்று தெரிவித்துள்ளது.
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தான் உட்பட பலர் தொடர்ந்தும் முயற்சிப்பதாகவும், அந்த முயற்சி தோல்வியடைந்தால், இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதேவேளை, பொது மக்களின் நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து செயற்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## அஸ்கிரிய பீடாதிபதியாக அத்ததர்ஸி தேரர் தெரிவு

கொழும்பு, மே 09
அஸ்கிரிய பீடத்தின் புதிய மஹாநாயக்கராக வண. கலகம ஸ்ரீ அத்ததர்ஸி தேரர் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்க தேரர் வண. உடுகம ஸ்ரீ புத்தரக்ஹித்த தேரரின் மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
நேற்றுக் கூடிய அஸ்கிரிய பீடத்தின் தேரர்கள் அடங்கிய நிறைவேற்றுக் குழுவே இவரைத் தெரிவு செய்தது.
இந்தக் கூட்டத்துக்கு, நிர்வாகக் குழுவைச் சேர்ந்த தேரர்களைத்



தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அஸ்கிரிய பீடம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## நாட்டில் உள்ள சட்டங்கள் சகலருக்கும் பொதுவானவை

### சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு, மே 09
நாட்டில் ஆட்சியாளர் மட்டுமன்றி, ஆட்சியாளரின் அப்பாவாக இருந்தாலும் சட்டத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என ஜனநாயக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
ஹோமகமப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
ஏதாவது குற்றம் தொடர்பாக ஆட்சியாளர்களிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றத்துக்கோ அல்லது குற்றப் புலனாய்வ விசாரணைப் பிரிவுக்கோ அழைக்கப்பட்டால், அங்கு செல்ல வேண்டியது அவர்களின் கட்டாய கடமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நாட்டின் சட்டத்துக்குத் தலை குனியப் பழகிக்கொள்ள வேண்டியதே நல்லாட்சிக்கான இலட்சணம் என அவர் குறிப்பிட்டுள் ளார்.
முன்னாள் அரசின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் இது குறித்து இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (த)

## கோட்டை மேயர் கைது

கொழும்பு, மே 09
கோட்டை மாநகர சபையின் மேயர் ஜானக்க ரணவக்க கைது செய்யப்பட்டுள்ளார்.
கோட்டை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சுகத் அப்புஹாமி மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
எதிர்க்கட்சித் தலைவர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் மேயர், களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை, தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் சுகத் அப்புஹாமி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)



## ஞானசாரதேரர் கைதாவார்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றில் முன்னிலையாகத் தவறியமைக்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அண்மையில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவுக்கு முன்னால் நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பில், நீதிமன்றில் முன்னிலையாகுமாறு ஞானசார தேரருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் நேற்றைய தினம் ஞானசாரதேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.
இதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்யுமாறு நீதிவான் பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார். (த)

## 15 எம்.பிக்களை சிறை வைக்க நிதி மோசடி விசாரணைப் பிரிவு

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 09
எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் 10 முதல் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சிறையில் அடைக்கும் நோக்கத்திலேயே நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
அரசியல் தேவைக்காக இந்த விசாரணைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டதாகவும் அடக்குமுறை மாத்திரமே அதில் முழுமையாக மேற்கொள்ளப்படுவதாகவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலைப்படுத்த வேண்டுமாயின், நாடு பெருந் தொகை



பணத்தை இழக்கக் காரணமாக இருந்த இலங்கைமத்தியவங்கியின் ஆளுநரையே முதலில் முன்னிலைப்படுத்த வேண்டும். எனினும் அவர் எந்தப் பிரச்சினையுமில்லாமல் இருந்து வருகிறார்.
அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான இணையத் தளங்கள் அடுத்தது யார் கைது செய்யப்பட உள்ளனர் என்பது பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்றன எனவும் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.
அதேவேளை அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரியின் இலங்கைப் பயணம் பற்றி கருத்துவெளியிட்டுள்ள வீரவன்ஸ, 2001 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பயன்படுத்திச் செய்து கொள்ள முடியாததை அமெரிக்கா மீண்டும் செய்து கொள்ள முயற்சித்து வருவதாகக் கூறியுள்ளார்.
இலங்கை மக்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடிய நாள்களில் ஜோன் கெரி இலங்கைக்கு பயணம் செய்ததால், மக்களுக்கு அது பற்றி சிந்தனை இருக்கவில்லை என்பதால், அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்த முடியாமல் போனது. அதேபோல் பாடசாலை அதிபரும் மாணவர்களும் நலமாக இருக்கின்றனரா என்று பார்ப்பதற்காகவே ஜோன் கெரி இலங்கை வந்தார் எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (த)

## மதவாச்சி விபத்தில் 6 மாணவர் காயம்

கொழும்பு, மே 09
மதவாச்சி புனேவ பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற பஸ், வென்னப்புவ நைனாமடு பிரதேசத்தில் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 6 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.
காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கல்விச் சுற்றுலாவுக்கு சென்ற மாணவர்கள் பயணித்த பஸ்ஸே, நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அலைச் சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகு முறையால் தீர்வு காண்பீர்கள். தொழில், உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**இடபம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். குடும்பத்தில் பல விடயங்களையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். புவியாபாரத்தில் வாடிக்கை யாளர்களிடம் கனிவாக பழகுங்கள்.

**மிதுனம்:** உங்களின் பலம் பலவீனத்தை உணரு வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்:** பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப் பார்கள்.

**சிங்கம்:** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங் களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**துலாம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டுக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.


**தனுசு:** நினைத்த வேகத் தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். உறவினர், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்துபோகும். அசதி, சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்.

**கும்பம்:** எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப் பீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**மீனம்:** சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். விசேஷங்களை முன்னின்று நடத்து வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

# ரிலாக்ஸா வாசியுங்க...



**ஆண்கள் நல்லவர்கள் தான்!!! யார் இல்லை என்று சொன்னது?**

***ஏனென்றால்....***

1) ஆயாவாக இருந்தாலும், அன்ரியாக இருந்தாலும், எத்தனை பேர் வந்து 'லவ் சொன்னாலும்' சட்டென்று கோபப்படாமல், செருப்பை கழற்றாமல், பிடிக்கலை என்றா பிடிக்கலை என்றே பொறுமையாக சொல்லிடுவோம்...!

2) பஸ்ஸில ஆண்கள் சீட்டில, பொண்ணுங்கள் உட்கார்ந்தா, நடத்துநர் கிட்ட கொம்பிளைன் பண்ண மாட்டோம்..!

3) மனைவி எப்பிடி அடிச்சாலும்.. எந்த ஒரு ஆணும் வெளியே காட்டிக்க மாட்டான்..!

4) லிப்ட் கேட்கிற பொண்ணுங்களை நாங்கள் திட்டினதே கிடையாது..!

5) எந்த ஓர் அப்பனும், மகனை தனியாக அழைத்து 'மருமகள் உன்னை நல்லா பாத்துகிறாளாப்பா..' என்று சந்தேகமாய் கேட்டதில்லை..!

6) படித்து முடித்தவுடன், வெளிநாட்டு வாழ் பெண்களை மணமுடிக்க தேடுவதில்லை..!

7) சாப்பிட்டு கொண்டு இருக்கும் போது, அடுத்த தோசைக்கு சீரியல் முடியும் வரை பொறுமையாக காத்திருப்போம்..!

8) தன் மொபைலுக்கு, தானே ரீலோட் செய்து கொள்வான்..!

9) முக்கியமா.. எங்களிட்ட இருக்கும் எல்லா கெட்ட பழக்கங்களையும்.. ஒருத்திக்காக நிப்பாட்டி விடுவோம்..!

10) பெண்கள் மிஸ்ட் கோல் கொடுத்தவுடன மனேஜர் கிட்ட... திட்டு வாங்கினாலும் பரவாயில்லை என்று.. எந்த ஒரு வேலையாய் இருந்தாலும்.. உடனே போன் பண்ணி விடுவோம்..!

11) பெண்கள் சீரியல் பார்கிறதுக்காக இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தை கூட பார்க்காமல்.. விட்டுக்கொடுத்து விடுவோம்..!

ஆண்களில் நல்லவன், கெட்டவன் எல்லாம் கிடையாது... ஆண்கள் என்றாலே..... நல்லவங்கதான்..



# இளவரசி 10 வயதில் எப்படியிருப்பார் ?

பிரிட்டன் இளவரசர் வில்லியம் மற்றும் கத்தரீன் தம்பதிக்கு புதிதாக பிறந்த குழந்தையான இளவரசி சார்லொட் எலிஸபெத் டயானா, தனது 10 ஆவது வயதில் எவ்வாறு இருப்பார் என்பதை வெளிப்படுத்தும் உருவப்படமொன்றை அமெரிக்க ஓவிய நிபுணரான ஜோ முல்லின்ஸ் பிந்திய கணினி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கி வெளியிட்டுள்ளார்.

இளவரசர் வில்லியம் மற்றும் கத்தரீனது ஒளிப்படங்களை தீவிர ஆராய்ச்சிக்குட்படுத்திய பின்னரே புதிய இளவரசியின் உருவப்படத்தை ஜோ முல்லின்ஸ் வரைந்துள்ளார்.

பிறந்து நான்கு நாள்களேயான இளவரசி தனது 10 ஆவது வயதில் தனது தாயாரான கத்தரீனுக்குரியதை ஒத்த கேசம் மற்றும் மூக்குடன் இந்த உருவப்படத்தில் காணப்படுகிறார்.

அத்துடன் புதிய இளவரசி தனது தந்தையினதும் தாயினதும் கண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பச்சை நீல நிற கண்களைக் கொண்டிருப்பார் என எதிர்வு கூறியுள்ள ஓவிய நிபுணர், சிறுமியான இளவரசி அவரது தந்தை வில்லியத்தினுடையதையொத்த உதட்டைக் கொண்டிருப்பார் எனத் தெரிவிக்கிறார்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....



"காட்டு மிருகங்கள் ராம நாராயணன் ஆபீஸை முற்றுகை இட்டிருக்குதே ஏன்?"

"மிருகங்கள் மனம் புண்படும்படி படம் எடுத்தாராம்!"




நல்ல மதிப்பெண்கள் பல தொழிலாளிகளை உருவாக்குகிறது. மோசமான மதிப்பெண்கள் சில முதலாளிகளை உருவாக்குகிறது...!

# ரஜினிக்கு அடுத்த பேரன்



நடிகர் ரஜினியின் இரண்டாவது மகளான சௌந்தர்யா, ஆண் குழந்தையொன்றை பெற்றுள்ளார். கடந்த புதன்கிழமை இரவு இந்தக் குழந்தை பிறந்துள்ளது.

மகளுக்கு குழந்தை பிறந்த தகவல் அறிந்ததும் ரஜினி மகிழ்ச்சி அடைந்ததுடன் வைத்தியசாலைக்கு சென்று பேரக் குழந்தையை பார்த்து சந்தோஷப்பட்டதுடன் வைத்திய சாலை ஊழியர்களுக்கு இனிப்பு வழங்கினார். குழந்தை பிறந்ததையடுத்து திரையுலகினர் பலர் ரஜினிக்கும் சௌந்தர்யாவுக்கும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

சௌந்தர்யாவுக்கும் தொழிலதிபர் அஸ்வின்ராம் குமாருக்கும் 2010 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. படையப்பா, பாபா, சண்டக்கோழி, சந்திரமுகி, சிவகாசி உள்ளிட்ட திரைப்படங்களில் சௌந்தர்யா, கிரபிக் டிசைனராக பணியாற்றியுள்ளதுடன் கடந்த வருடம் ரஜினி நடித்த கோச்சடையான் என்ற அனிமேஷன் திரைப்படத்தை இயக்கி வெளியிட்டார்.

அதன் பிறகு அவர் கர்ப்பமானதால் திரைப்படவேலைகளில் ஈடுபடாமல் ஓய்வெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# நலமடைந்து வருகிறார் மன்னார் மாவட்ட ஆயர்

## மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

கொழும்பு தேசிய மருத்துவம னையில் தங்கிச் சிகிச்சைபெற்று வரும், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை உடல் நலம் தேறியுள்ளதாக, மருத்துவ மனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சிறில் டி சில்வா தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்தி ருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியைச் சந்திப் பதற்காக மன்னார் ஆயர் கொழும்புக்குச் சென்றிருந்தார். கடந்தசனிக்கிழமைமுன்னிரவில், திடீரென ஆயர் மயங்கி வீழ்ந்ததையடுத்து உடனடியாககொழும்பு தேசிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு பக்க வாதம் ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். அத்துடன், ஆயரைப் பார்வையிடுவதற்கு எவரையும் அனுமதிக்கவுமில்லை.

தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவரது உடல் நலம் முன்னேற்றம் அடைந்துள்ள தாக, மருத்துவ மனையின் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அவர் நல்ல நிலையில் இருப்பினும், தொடர்ந் தும் மருத்துவர்களின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் மருத்து வமனையில் இருந்து வெளி யேறுவார்என்றும்அவர்மேலும்குறிப்பிட்டுள்ளார். (வ–5)

# சிறைச்சாலைக் கைதிகள் கூரை மீதேறி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு சிறைச்சாலைக் கைதிகள் இருவர், சிறைச்சாலைக் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிறைச்சாலைகள்திணைக்களத்தின் ஆணையாளர் அல்லது மாவட்ட நீதிபதி தம்மை நேரில் வந்து சந்திக்கும்வரை தாங்கள் கூரையைவிட்டுகீழிறங்கப்போவதில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்தமை மற்றும் பயமுறுத்திக் கப்பம் பெற்றமை தொடர் பாகக் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ள 30 வயதான கந்தசாமி புஸ்பராஜா மற்றும் ஆயததாரிகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 26 வயதான கதிர்வேல் கபிலன் ஆகியோரே சிறைச்சாலைக் கூரைமீது ஏறியமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களாவர்.

தொடர்ந்து சிறைச்சாலைப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆர்ப்பாட்டம் நடத் தும் கைதிகளைக் கூரையிலிருந்து கீழிறக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ–10)

# சுகாதார விதிகளை மீறிய எண்மருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 9

சுகாதார விதிமுறைகளை மீறி, உணவு கையாளும் நிலை யங்களில் செயற்பட்ட எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதிமன் றில் கடந்த புதன்கிழமை 57 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின்போது உணவு கையாளும் நிலையங்களில் முகச்சவரம் செய்யாமலும், தனிநபர் சுகாதாரம் பேணாத நிலையிலும் பணியாற்றிய நால்வருக்கு எதிராக அந்தப் பகுதி பொது சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய் யப்பட்ட வழக்குகள் கடந்த புதன் கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நால்வ ருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப் பட்டது.

கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு பொதுச்சுகாதாரப் பரி சோதகர்களால் சாவகச்சேரி நகரப் பகுதி உணவு கையாளும் நிலையங்களில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பழுதடைந்த உருளைக் கிழங்கை உணவு தயாரிப்பதற்கு வைத் திருந்த வர்த்தகர் மற்றும் திகதி காலா வதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர், மருத்துவ சான் றிதழ் இன்றி நிலையத்தில் பணிபுரிந்தவர் மற்றும் தனிநபர் சுகாதாரம் பேணாத பணியாளர் ஆகிய நால்வருக்கு எதிராக சாவகச்சேரி நகர பொது சுகாதார பரிசோதக ரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த புதன்கிழமை விசாரணைக்குஎடுக்கப்பட்டன. அவர்களில் திகதி காலாவதியான பொருள்கள் வைத்திருந்த வர்த்தகர் மற்றும் தனி நபர் சுகாதாரம் பேணாத பணியாளருக்கு 18 ஆயிரம் ரூபாவும் ஏனைய மூவருக்கு தலா 9 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப் பட்டது. (வ–9)

### பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் இருவரும் தோல்வி

யாழ்ப்பாணம், மே 9

பிரிட்டனில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழர்கள் இருவரும் தோல்வியடைந்துள் ளனர். அத்துடன் இலங்கைச் சிங்களவர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

பிரிட்டனின் நாடாளுமன்றத் தேர்தல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிலையில் தேர்தல் முடிவுகள் நேற்று வெளி யிடப்பட்டன.

ஹரோ கிழக்குத் தொகுதியில், தொழிற்கட்சி சார்பில் போட்டி யிட்ட இலங்கைத் தமிழரான உமா குமரன் 19 ஆயிரத்து 911 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார். அதே தொகுதியில் போட்டியிட்ட ஆளும் கொன்சர் வேட்டிவ் கட்சி வேட்பாளர் பொப் பிளக்மன் 24 ஆயிரத்து 668 வாக் குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

மற்றொரு இலங்கைத்தமிழரான சொக்கலிங்கம் யோக லிங்கம் தேசிய லிபரல் கட்சி சார்பில் ஈசிலிப்பில் தொகு தியில் போட்டியிட்டிருந்தார். அவர் வெறும் 166 வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தார். அந்தத் தொகுதியில் போட்டியிட்ட ஆளும் கொன் சர் வேட்டிவ் கட்சி வேட்பாளர் 30 ஆயிரத்து 520 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

மேலும், ஆளும் கொன்சர் வேட்டிவ் கட்சியின் சார்பில், வடகிழக்கு ஹம்ப் செயர் தொகுதியில் போட்டி யிட்ட இலங் கைச் சிங்களவரான ரணில் ஜெயவர்த்தன 35 ஆயிரத்து 573 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். (வ–5)

# 'நினைவு கூரலுக்கான உரிமை' கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், மே 9

தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில், நினைவு கூரலுக்கான உரிமை' என்ற தலைப்பிலான கலந்துரையாடலொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, யாழ்.பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையின் இதயநோய் சிகிச்சை நிபுணர் மருத்துவ கலாநிதி பூ.லக்ஸ்மன் தலைமையில் இந்நிகழ்வுஇடம்பெறவுள்ளது. நடைபெறவுள்ள நிகழ்வில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும், சட்டத்தரணியுமான பவானி பொன்சேகா, கிழக்குப் பல்கலைக்கழக அரசியல்துறைவருகை விரிவுரையாளர் எழில்ராஜன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரி வுரையாளர் கு.குருபரன் ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (வ–5)

# அதிபர்கள் சங்கமம் நாளை

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் 'அதிபர்கள் சங்கமம் – 2015' நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ரில்கோ விருந்தினர் விடுதியில் மு.ப 9.30 மணிக்கு நடை பெறும் மேற்படி நிகழ்வுக்கு வட மாகாண அதிபர்கள் சங்கத் தலை வரும் மானிப்பாய் இந் துக் கல் லூரி அதிபருமான ச.சிவ நேஸ் வரன் தலைமை வகிக்கவுள் ளது டன் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலு வல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசாவும் கௌரவ விருந்தினராக கல்வி, பண்பாட்டலு வல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (வ–10)


**வேலைவாய்ப்பு- சாரதி**

துறைமுகம், விமான நிலையத்துக்கு மென்ரக/கனரக சாரதிகள்/ஹண்டேனர் சாரதிகள்/ சாரதி உதவியாளர்கள் நாடு முழுவதிலும் வேலைக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் தேவை.
35000-45000 உயர்ந்த சம்பளம்.
(OT உட்பட விசேட சலுகைகள்)
(59576)(4.3.7) தொடர்பு: 077 292 6732

**வேலைவாய்ப்பு**

கப்பலில், விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? துறைமுகம் விமான நிலைய வேலைக்கு ஆண்/பெண் உடனடியாகத் தேவை. உயர் சம்பளத்துடன் (பின்னர் வெளிநாட்டு துறைமுகம்/விமான நிலையங்களில் தேவை.)
இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு: 077 292 6935 (59575)(4.3.7)

**வீடு வாடகைக்கு**

கடந்த ஐந்து வருடங்களாக வங்கி ஒன்றின் முகாமையாளர் விடுதியாகப் பயன்படுத் தப்பட்ட சகல வசதிகளும் கொண்ட பொஸ்கோ பாடசாலை, இந்தியதுணைத் தூதுவர் இல்லம் ஆகியவற்றுக்கு அருகில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(59578) (45.3) தொடர்பு: 077 903 4050

**வீடு வளவு விற்பனைக்கு**

இலக்கம் 485, மானிப்பாய் வீதியில் நில.பர.1குழி 16.17 அளவு கொண்ட வீடும், வளவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 490 0443
075 546 4387
(59587)(3.9)

**வேலையாள்கள் தேவை**

பிரபல பழரச நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதி (ஆண்) விற்பனை உதவியாளர் (ஆண்) மற்றும் உற்பத்திப் பிரிவு மேலாளர் (பெண்) உற்பத்தி உதவியாளர் (பெண்) உடன் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: 021 221 3788 (59,580) (45.3.7)




**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

நல்லின Lion German Shepherd நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 321 1913 (59581)(8.9)

**வேலைவாய்ப்பு**

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ரிஸ்பரி, ஏமாஸ் தொழிற்சாலைகளுக்கு ஆண்/பெண் தேவை. 18-35, 35000/= உயர் சம்பளம். இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு: 077 292 6468
(59573)(4.3.7)

**வீடு வாடகைக்குத் தேவை**

குடும்பம் ஒன்றுக்கு மல்லாகத்துக்கும் கோண்டாவிலுக்கும் இடைப்பட்ட கே.கே.எஸ். வீதியை அண்மித்த பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 182 1433, 077 996 7716
(59572)(4.3.7)

**வெல்டிங் வேலையாள், தச்சுவேலையாள், மேசன் வேலையாள் - தேவை**

எமது நிறுவன வேலைத்தளங்களில் தங்கி நின்று வேலைசெய்வதற்கு மேற்கூறிய வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 407 1537, 077 314 0306 (5709) (45.8)

**கணிதம் / விஞ்ஞானம் O/L**

6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.
R.Balasubramaniyam B.Sc
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
பெற்றோர் மட்டும்.
தொடர்பு: 077 242 3400, 077 887 1217, 077 517 8727 (58570)(4.3.7)

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி- மாலை 6.00 மணி வரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)

**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்**

வசிகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம். கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.
இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 595 0463 (59478) (45.3.7)

**மணமகள்கள் தேவை**

- 80 ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாத 20½ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 84ஆம் ஆண்டு செவ்வாய் பாவமோடு 73 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 14½ பாவமுடைய தாரம் இழந்த சட்ட வைத்திய அதிகாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85ஆம் ஆண்டு 11இல் சூரியனும் செவ்வாயும் 45½ பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
- 83ஆம் ஆண்டு செவ்வாய் பாவத்தோடு 64 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
- 80ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 24பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 80ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 41 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 47 பாவமுடைய MSc அரசசேவையர் மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.
- 81ஆம் ஆண்டு 12இல் சூரியனும் செவ்வாயும் 43 பாவமுடைய BBA முடித்து வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 85இல் பிறந்த 8இல் செவ்வாய் 73 பாவமுடைய BBA,M.com மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83ஆம் ஆண்டு 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 79ஆம் ஆண்டு செவ்வாய் பாவமில்லாமல் 45 பாவமுடைய சொந்தமாக தனியார் நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க் கப்படமாட்டாது.)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.02, இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலையடி, முடமாவடி.
077 607 0862

## வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்க கலந்துரையாடல்

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

அமரர் **சின்னையா நல்லதம்பி**



தோற்றம் 24 ★ 07 ★ 1930

மறைவு 10 ★ 04 ★ 2015

கடந்த 10.04.2015 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னையா நல்லதம்பி அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி பதாகைகள் துண்டுப்பிரசுரங்கள், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ராணி இல்லம்,
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

(55496)(7.4.3)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



விண்ணகத்தில் 14.05.2009



மண்ணில் 04.03.1953
செல்வராசா மங்களேஸ்வரி
(ராணி)

மண்ணில் 04.04.1981
செல்வராசா ஜெயாபரன்
(அகிலன்)

அன்பிற்கும் பண்பிற்கும் எடுத்துக்காட்டாக எம்முடன் வாழ்ந்து சென்ற எமது குலவிளக்குகளே ! அன்புத்தெய்வங்களே ! நீங்கள் எங்களுடன் வாழ்ந்த காலங்களை எம்மால் மறக்க முடியவில்லை. எம் வாழ்வில் அக்காலம் பொற்காலம். நீங்கள் ஒரே நாளில் எம்மை விட்டு நீங்கிப் போனாலும் எம் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளீர்கள். மனதை விட்டு அகலாத நினைவுகளுடன் நாம் இருக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

307, ஊற்றுப்புலம், கிளிநொச்சி,
077 237 6787

குடும்பத்தினர்.
செல்வராசா (ஜெயம்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பாலசுந்தரம் தவமணி (மணி)**

தோற்றம் 28.02.1948

மறைவு 19.05.2014

எம் ஈரவிழிகள் காயுமுன்பே ஓராண்டு ஆனதுவோ?
உயிர்தான் மறைந்தது
உங்களின் நினைவுகள் என்றும் மறைந்திடுமோ?
போகும் எத் திசையிலும்
உங்களின் உருவங்கள் தோன்றி மறைகின்றன
என்றென்றும் உங்களின் நினைவுகள்
எம் சிந்தனையில் வாழ்ந்திடும்.

51, இராமநாதன் வீதி,
கலட்டி. (59528)(3.7.4)

குடும்பத்தினர்.

# சிதம்பரபுரம் பூந்தோட்ட நலன்புரி மக்களின் அகதிவாழ்வுக்கு தீர்வு கிடைத்தது மகிழ்ச்சியே

## வட மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, மே 09

வவுனியா, சிதம்பரபுரம் பூந்தோட்ட நலன்புரி மக்களின் இருபது வருட அகதி வாழ்க்கைக்குத் தீர்வு கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமே என்று வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"1994 ஆம் ஆண்டு உள்ளக இடப்பெயர்வு மற்றும் இந்தியாவுக்கு இடப்பெயர்ந்தவர்கள். பின்பு வவுனியாவில் முகாம்களில் வாழ்ந்தவர்கள் பெருமளவானவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். எனினும் வவுனியா பூந்தோட்டம் சிதம்பரபுரம் முகாம்கள் இதுவரை மூடப்படவில்லை. இவ்விடயம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. எனினும் கடந்த அரசில் அங்கம் வகித்தவர்கள் அரசின் கைக்கூலிகளாக இருந்து கொண்டு அவர்களுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லை, எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அவ்வப்போது தேர்தல் வாக்குறுதிகளை மட்டும் மக்களுக்கு வழங்கி விட்டு பின்னர் முடிவு எதுவும் இன்றி அந்த மக்கள் அநாதரவாக விடப்பட்டனர். எமக்கான மாகாணசபை நிறுவப்பட்ட பின்னர் இந்த மக்களை அதே இடத்தில் குடியேற்றவேண்டும் என்ற தீர்மானம் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடம் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் என்னால் இவ்விடயம் முன்மொழியப்பட்டது. எனினும் கடந்த அரசால் எதுவித முன்னேற்றமும் கிடைக்கவில்லை.

அதன்பின்னர் வடமாகாண முதலமைச்சரால் மத்திய மீள் குடியேற்ற அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் மீள்குடியேற்ற அமைச்சுக்கும் வவுனியா மாவட்ட அரச அதிபருக்கும் இடையிலான சந்திப்பு வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சிதம்பரபுரம் மக்களை அதே இடத்தில் வீடு கட்டி குடியேற்றவும் பூந்தோட்ட மக்களை சின்னடம்பன் பகுதியில் காணிகளில் வீடுகட்டிக்கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. வீடுகளை லைக்கா ஞானம் நிறுவனம் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய வடமாகாண முதலமைச்சர், மத்திய மீள் குடியேற்ற அமைச்சர், வவுனியா மாவட்டச் செயலகத்தினர், லைக்கா ஞானம் நிறுவனத்தினர், ஊடகவியலாளர்கள் உட்பட பலருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்– என்றார். (வ-402)

# லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு பிணை

கொழும்பு, மே 9

நீதிமன்ற உத்தரவை மீறி லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிக்குமார் உள்ளிட்ட 27 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் நேற்று அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அனைவரையும் தலா ஒரு லட்சம் ரூபா தனிநபர் பிணையில் செல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்திருந்தது. இந்த விடயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய அழைப்பு விடுத்திருந்தனர். இது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்த பொலிஸார் குறித்த ஆர்ப்பாட்டத் துக்கு தடை உத்தரவு பெற்று அதனை உரியவர்களுக்கு அறிவித்தனர். எனினும் நீதிமன்ற தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதால் பொலிஸார் அது தொடர்பில் நீதி மன்றத்துக்கு அறிவித்ததையடுத்து, 27 பேருக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்தது.

அதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, ஜானக பிரியந்த பண்டார, சரத் வீரசேகர, ரொஷான் ரணசிங்க, ஜயந்த கெட்டகொட, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன, எஸ்.எம்.சந்திரசேன, வீரகுமார திஸாநாயக்க, உதித்த லொக்குபண்டார ஆகியோருக்கும் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மாகாண சபை உறுப்பினர்களான உதய கம்மன்பில, ரொஜர் செனவிரத்ன ஆகியோர் உள்ளிட்ட 27 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வட்டினாபா சோமானந்த, முருந்தெட்டுவே ஆனந்த, மெதகொட அபேதிஸ்ஸ, இத்தேகந்தே சத்தாதிஸ், கலகொட அத்தே ஞானசார ஆகிய தேரர்களுக்கும் நீதிமன்றம் அழைப் பாணை விடுத்தது. நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையான அவர்கள் தனிநபர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். (வ-10)

## நூல் அறிமுக நிகழ்வு

திருகோணமலை, மே 9

மருத்துவ கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமாரின் 'கொட்டியாபுரத்து சிங்கம்' என்னும் வரலாற்று நூல் அறிமுக விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தி.மூ.அந்–நஹார் மகளிர் கல்லூரி மண்டப அரங்கில் இடம்பெறவுள்ளது. மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மூதூர் முகைதீன் தலைமை வகிக்க ஏ.எஸ்.உபைத்துல்லா, க.தேவ கடாட்சம், கலாநிதி கே.எம்.எம்.இக்பால் மற்றும் கே.எம். அமிர்தீன் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். (வ)

# புதிய மதுபானச்சாலைகள் திறக்க மட்டக்களப்பில் அனுமதி இல்லை

## நிறைவேற்றப்பட்டது தீர்மானம்

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக மதுபானச்சாலை எதனையும் திறப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டத்தில் புதிதாக மதுபானச்சாலை எதனையும் திறப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்பதுடன் வேறு மாவட்டங்களிலுள்ள மதுபானச்சாலைகளை இடமாற்றிக் கொண்டு வந்து இந்த மாவட்டத்தில் திறப்பதற்கும் அனுமதி வழங்கக் கூடாது என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இதுதொடர்பில் மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கு அறிவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள அதே வேளை மட்டக் களப்பு மாவட்டத்திலுள்ள வறுமை நிலைமை மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதியமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபாவனைக்கு எதிராக மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை நடத்தவுள்ளதுடன் இதற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வைத்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். (வ-10)

## ஒன்பதாம் ஆண்டு நினைவில்

அமரர்
**நவரத்தினம் பிரகாஸ்**
(மு/மல்லாவி மத்திய கல்லூரி
கணிதப்பிரிவு மாணவன்)



மண்ணில் 24.02.1988

விண்ணில் 19.04.2006

திதி: 10.05.2015


ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறவில்லை உம் பிரிவு

வாகையடிச் சந்தி,
மட்டுவில் தெற்கு.

குடும்பத்தினர்.

(59519)(45.7.3)

# கனகராயன்குளத்தில் தொழில்நுட்ப ஆய்வுகூட வேலைகள் மந்த கதியில்



கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு வரும் தொழில் நுட்ப ஆய்வு கூடம் நிர்மாண வேலைகள் மிகவும் மந்த கதியில் நடைபெறுவதால் அதனைத் துரிதப்படுத்துமாறு அனைத் துத் தரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2014 இல் இதற்கான அனுமதி வழங்கப்பட்டு அத்திபாரத்துக்கான வேலைகள் நடைபெறும்போது வெடிக்காத நிலையில் ஷெல் கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் வேலைகள் தாமத மாகி இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 2014.07.10 அன்று நடைபெற்றது. பத்து மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் வேலைகள் பூர்த்தியடையாததையிட்டு அனைத்துத் தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர். ஏனைய பாட சாலைகளில் அமைக்கப்பட்ட குறித்த ஆய்வு கூட வேலைகள் சுமார் 6 மாதங்களில் நிறைவடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ச.நித்தியானத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இடைநிலைப் பிரிவினருக்கான ஆய்வு கூடமாகவே இது அமைக்கப்பட்டு வருகின்றது. இது மொழி ஆய்வு கூடமாகவும் கணினிக்கான ஆய்வுகூடமாகவும் அமைக்கப்பட்டவுள்ளது. இதன் வேலைகள் மந்த கதியில் நடைபெறுவதாக வட மாகாண கல்வித்திணைக் களத்துக்கு பல தட வைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆய்வு கூடத்துக்கான உப கரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலத்திரனியல் உபகரணங்களுக்கு முடிவுத் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டட வேலைகள் நீடிக்கப்படுமானால் உபகரணங்களது பாவனைகள் நடைபெறாமலேயே நிறை வடைந்து விடும். அத்துடன் எமது பாடசாலை தற்போது 1ஏபி தர பாட சாலையாக தரமுயர்த் தப்பட்டுள்ளது. இங்கு கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, தொழில் நுட்பப் பிரிவு, வாத்தகப் பிரிவு, கலைப் பிரிவுகள் நடைபெற்று வருகின்றன.

எனவே எமது பாடசாலைக்கு இவ் ஆய்வுகூடமானது மிகவும் அவசியமாகின்றது. எனவே உரியவர்கள் மேலதிக கவனம் செலுத்தி, துரித கதியில் பூரணப் படுத்தித் தருமாறும் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (வ-422)

## இத்தாவில் புனித பார்பரா அன்னை' ஆலயத்திருவிழா

மேற்படி திருவிழா நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு திருச்செபமாலையோடு ஆரம்பமாகும். அன்னையின் பரிந்துரை பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இத்தாவில்,
பளை. (59566) (45.3.7)

பங்குத்தந்தையும்
பங்குமக்களும்.

## விசேட பொதுக்கூட்டம்
## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பொன் விழாவிற்கான) விழாக்குழு தெரிவு

மேற்படி விடயம் தொடர்பாக நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருவதோடு சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(சி.15779) (45.3.7) இணைச் செயலாளர்

## விற்பனை முகாமையாளர் வெற்றிடம்

இலங்கையில் முதல்தர காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமைகள்:**

* க.பொ.த. (உ/த) சித்தி
* வயது 25-45 வரை (ஆண், பெண்)
* அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை (விற்பனைத்துறையில்)

**கொடுப்பனவு:**

* சம்பளம்
* மேலதிக படிகள்
* கொமிஷன்
* வெளிநாட்டுச் சுற்றுப்பயணம்
* மாதாந்த வெகுமதிகள்
* உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள்
* மேலதிக கொமிஷன்

விண்ணப்பங்களை 16.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல.5059, C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (59562)(4.3.7)

(பி-ம)

## கலாசார விழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலாசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயக முத்துக்குமார சுவாமி ஆலயத்தின் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், செயற்றிறன் அரங்க இயக்கம் தயாரித்து வழங்கும் ஒரு நாள் அரங்க ஆற்றுகையும் இடம் பெறவுள்ளன. (வ-14)

## புதிய வீடு வாடகைக்கு

வவுனியா, வேப்பங்குளம் றோட், பட்டானிச்சூர், பட்டக்காடு எனும் இடத்தில் நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நிறுவன ஊழியர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 747 4741 (59560)
வீட்டைப் பார்வையிடுவதற்கு (45.3.7)
Facebook Id: Kirushnasamy Jeyakumar

## துன்பம் தீர அருள்வாக்கு



குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத் தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள் வாக்குக்கூறப்படும்.

வெள்ளவத்தை பெர்னாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானேஸ்வரிஅம்மன் அவர்கள் 09/10/ 11-05-2015 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

பூசை நேரம்:
முற்பகல் 10.30 மணி, மாலை 4 மணி

* கலாசார உடையுடன் வருகைதரவும்.

T.P: 021 221 9127
(58340)(4.3.7)

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## விலைக்கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கான இருமாடிக்கட்டட (80'X25') கீழ்த்தளம் அமைத்தல் வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் **11.05.2015** தொடக்கம் **காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை** நேரத்தில் அலுவலக நேரங்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் **(தொலைபேசி இல.021 222 2427)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **11.05.2015 முதல் 27.05.2015 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00** வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா.1000/= கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. குறியீடு செய்து பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **28.05.2015 ஆம் திகதியன்று பி.ப 2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ மூலப்பிரதி தனியாகவும், நகல் தனியாகவும் இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் **28.05.2015 ஆம் திகதி பி.ப 3.00** மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து **90 நாள்களுக்கு** செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு **120 நாள்கள்** இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான இக்ராட் தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| JF/DPS/Edu./JM VV/San./2015 | யா/ மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கான இருமாடிக் கட்டட (80'X25') கீழ்த்தளம் அமைத்தல் | 5.86 | 3 | C7 | 58,600.00 |

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/15785)(4.3.7)

# 'மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

தென்மராட்சி, மே 9

மிருசுவில் தமிழ்தாசனின் 'மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளை யார் ஆலய முன்றிலில் நடை பெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக எழுத்தாளரும், ஆய்வாளருமான தேவி பரமலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும், எழுத்தாளருமான கே.ஆர்.டேவிட் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நூலை கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் வெளியிட, சாவகச்சேரி அபிஷா ரெக்ஸ் உரிமையாளர் இ.கோகிலன் பெற்றுக் கொள்வார். (வ-9)

## மரண அறிவித்தல்

### செல்லையா யோகராசா

( இளைப்பாறிய உத்தியோகத்தர் - மதுவரித் திணைக்களம் )



பிறப்பு: 17.06.1924
இறப்பு: 07.05.2015

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட செல்லையா யோகராசா 07.05.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தம்மா தம்பதியரின் மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தயானந்தன், உஷாகாந்தி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - தங்கலெச்சுமி, லிங்கசாமி, சேனாதிராசா, பரஞ்சோதி - கமலாம்பிகை மற்றும் ரட்னாயக்கா இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் சதானந்தன் - கமலாவதி ஆகியோரின் சகோதரரும், யசோ ராணி, இரத்தினசிங்கம் ஆகியோரின் மாமனும், தருமலிங்கம் - கனகாம்பிகை, கதிர்காமநாதன், நல்லதம்பி - பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அமலதாஸ், தர்மதாஸ், பிரதாஸ், மதுரா, ராகுலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக் கிழமை அவாது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31, கனகரட்ணம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(69574)
(45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
16 . 08 . 1927



ஆண்டவன் அடியில்
05 . 05 . 2015

### வள்ளிநாயகி அரியரத்தினம்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை
வண்/நாவலர் மகா வித்தியாலயம்)

யாழ்.வண்ணார்பண்ணை, 62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி அரியரத்தினம் 05.05.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்), அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, வைத்தீஸ்வரன், சர்வலோகநாயகி மற்றும் நீலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராஜா காலஞ்சென்றவர்களான தங்கராணி, பினாகபாணி ஆகியோரின் மைத்துனியும், அரியகுமார், காலஞ்சென்ற அசோகமலர் மற்றும் வசந்தமாலா காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் வசந்தகுமாரி, முரளீதரன், சிறீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலராஜன், மஞ்சுளா, கௌசலாதேவி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், பகீரதி, கணேசராஜா, லிங்கேஸ்வரிரேணுகா, காண்டீபன், பவானி, சேய்மணி, ராஜ்குமார், ராஜராஜன், பூங்கோதை, குகேந்திரன், வருணா, மஞ்சுளா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமியும், கார்த்திக், காயத்திரி, கிரிஷாந்த், நிஷானி, இந்துஜா, கிரிஷாந்த், ஜனுஜா, ராதா, ரொஸ், ஆஷ்லி, றோஜனா, தர்வீன்குமார், பாரதிநேயன், சிவபைரவி, அபிராமி, மதுரா, லக்க்ஷமி, தர்ஷன், கஜோஷன், சௌமியா, அக்ஷயா, ஆராதனா, சுலக்ஷனா, ஹம்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அலெக்ஸாண்டர் அருச்சுனாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் (Ground Floor Hall.A) வைக்கப்பட்டு பி.ப. 1.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 3.30 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
011 236 1861, 021 222 8694

(சி/16701)
(4.3.7)

# கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இசை நிகழ்ச்சி

வவுனியா, மே 9

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவாலயத்தின் திருவிழா நிறைவாக நன்றி உணர்வோடு பங்கின் அனைத்து பாடகர்களும் இணைந்து பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் பங்கு சமூகத்தின் ஒத்துழைப்புடனும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலய வளாகத்தில் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அருட்பணி நெவின் யோகராஜ் கலந்துகொள்வார். நிகழ்வுகள் கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு இயக்குநர் தலைமையில் இடம் பெற உள்ளதாக வேப்பங்குளம் தூய சூசையப்பர் தேவாலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி லக்ஸ்ரன் டிசில்வா மேலும் தெரிவித்தார்.(வ)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 9

வாழும்கலைஸ்ரீதாபகர்பூஜ்யஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 59ஆவது பிறந்து தினத்தை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை காலை சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்கத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வாழும் கலை அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (வ-10)

# சிரமதானம்

யாழ்ப்பாணம், மே 9

இருபாலை, கோப்பாய் 'நொச்சிக்காடு' இந்து மயான சிரமதானம் நாளை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளதாக மயான அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இயலுமானவர்களை சிரமதானத்துக்குரிய பொருள்களோடுகலந்து கொள்ளுமாறு சபைத் தலைவர் செ.செல்வரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். (வ-10)

# வவுனியாவில் நூல் வெளியீடு

மூத்த காந்தீயவாதியும் சமூகத் தொண்டருமாகிய திருமதி பார்வதி நல்லதம்பி அவர்களின் அனுபவத்தின் ஆதங்கம் கவிதை நூல் வெளியீடு, நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க, கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், வவுனியாவின் முன்னாள் அரச அதிபருமாகிய உடுவை சி. தில்லை நடராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா சுத் தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர், மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராஜா, ஓய்வுநிலை ஆசிரியை பண்டிதை செல்வி யோகா சோமசுந்தரம், வவுனியா வடக்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி தேவிகா உமாதேவன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா இந்து மாமன்றத்தின் தலைவர், இறைபணிச் செம்மல் வை.செ.தேவராஜா, ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்களான எஸ்.பூபால சிங்கம், க.நடராஜா, ஓய்வுநிலை ஆசிரியர் த.முத்துலிங்கம் ஆகியோரும்கலந்துகொள்கிறார்கள்.

நிகழ்வொழுங்கில் அறிமுகவுரையையும் வெளியீட்டுரையையும் ஓய்வுநிலை அதிபரும் சமூக ஆர்வலருமாகிய சி. வையாபுரிநாதன் நிகழ்த்துவார். நூல்வெளியீட்டைத் தொடர்ந்து விசேடபிரதிகளை நூலாசிரியரின் முன்பள்ளியின் ஆரம்பகால மாணவர்கள் பெறுவார்கள்.

நூல் நயவுரையை வவுனியா தெற்கு கல்விவலய, தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கவியெழில் திருமதி த.நிறைமதியும் கவியால் கவிநயப்பினை குரும்பையூர் த. ஐங்கரனும் நிகழ்த்துவர். சிறப்புவிருந்தினர்கள், பிரதம விருந்தினர் உரைகளைத் தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியரும் நன்றியுரையை வட மாகாண, நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள ஆணை யாளர் தி. விஸ்வரூபனும் வழங்குவர். (ஒ)

# மட்டு. மேற்கு கல்வி வலயத்தில் கணினி வள நிலையம் திறப்பு



மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் கணினி வள நிலைய திறப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறிஞ்சாமுனை அ.த.க பாடசாலையின் தற்காலிக கட்டடத்தில் இந்த நிலையத்தை திறந்துவைத்தார்.

திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் வலய தகவல் தொழில் நுட்ப இணைப்பாளருமாகிய எஸ்.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்கே.சத்தியநாதன் பிரதம அதிதியாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) எஸ்.மகேந்திரகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) க.ஹரிகரராஜ், கணினி வள அலுவலர் ஜெகதரன் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பா ளர்கள், உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், ஆசிரிய ஆலோ சகர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், அலுவலக உத்தி யோகத்தர்கள், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர். (வ-10)

# வரவேற்பு விழா

வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜாவுக்குதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத் தும் வரவேற்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா நகர சபை மண்ட பத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந் தன் தலைமையில் நடை பெறவுள் ளது.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை உறுப்பி னரான த.சித்தார்த்தன், ஜனநாயக மக்கள் முன்னணி யின் ஊடக செயலாளரும், கொழும்பு மாநாகர சபை உறுப்பினருமாகிய சி.பாஸ்கரா ஆகியோரும்- விசேட விருந்தினர்களாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய பிரதித்தூதுவர் டி.மூர்த்தி உட்பட பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ-402)

# 10பேர் சேர்ந்து தாக்கியதில் தந்தையும் மகனும் காயம்

யாழ்ப்பாணம், மே 9

பத்துப்பேர் கொண்ட கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டு தந்தை யும் மகனும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கைதடி தெற்கில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் கைதடி தெற்கு கமநலசேவை நிலையத் தடியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெயராஜா (வயது-40) என்பவர் கண்ணில் படுகாயமடைந்த நிலையில், அவரது மகனான ஜெயராஜா டனீஸ் (வயது-17) என்ற உயர்தர வகுப்பு மாணவன் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வர்களாவர்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் யாவ ரும் தினமும்அந்தப் பகுதியில் மது போதையில் நின்று தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவரும் மாணவிகளை ஏளனம் செய்வதுடன் இது தொடர்பாக நியாயம் கேட்கச் செல்வோரோடு சண்டைக்கு வருவதாகவும் பாதிக்கப்பட்ட வர்களால் கவலை தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, அண்மையிலும் அந்தக் கும்பல் அந்தப் பகுதி யைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒரு வரைத் தாக்கிய சம்பவத்தில் சாவகச்சேரி பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட் டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக சாவகச் சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் 119 இலக்க தொலைபேசியூடாகவும் அறிவிக்கப் பட்டு பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கைதடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ-288)

# சீனா - இலங்கை உறவில் தேவையற்ற இடையூறு

## சீனா கருத்து

கொழும்பு, மே 09

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் தேவையற்ற இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

பீஜிங்கில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே, சீனாவின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் குறித்த சர்ச்சை மற்றும், இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தினால், சீன- இலங்கை உறவுகளிலும், அபிவிருத்தித் திட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துமா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங், சீனாவும், இலங்கையும் ஒன்றை ஒன்று மதிக்கின்ற நட்பு நாடுகள். கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் உள்ளிட்ட, பெருமளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் உள்ளூர் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

தாம் செயற்படும் நாடுகளின் சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் மதித்து நடக்கும் படி, சீன நிறுவனங்களிடம், சீன அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

சந்தை விதிமுறைகளைப் பின்பற்றும் அத்தகைய ஒத்துழைப்பு, இரு தரப்புக்கும் நன்மைகளை அளிக்கும் என்று நம்புகிறோம்.

சில கூட்டுறவுத் திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசு மீளாய்வு செய்யும் உள்நாட்டு நடைமுறைகளை பின்பற்றுகிறது. அது இலங்கையின் உள்நாட்டு விவகாரம். அதனை நாம் மதிக்கிறோம்.

சீனாவுடனான அண்மைய உயர் மட்டக் கலந்துரையாடலின்போது, சீனாவுடன் உறவுகளையும் ஒத்துழைப்புகளையும் வலுப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்திருப்பதாக, இலங்கை தெளிவாக கூறியிருக்கிறது.

துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது, உறுதியான முன்னேற்றம், பொருளாதார ஊக்குவிப்புக்கு உதவுதல், இலங்கையின் சமூக அபிவிருத்தி மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நட் புறவுக்கு தேவையற்ற இடையூறை ஏற்படுத்தி விட்டது என்று நம்புகிறோம். என்று தெரிவித்துள்ளார். (த)

## ஜோனுக்கு எதிரான பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில்

கொழும்பு, மே 9


சட்டம் ஒழுங்கு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விடயம் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

சிங்கள செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில் பெரும்பாலும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வத்தளை பிரதேச சபையில் கடந்த பெப்ரவரி மாதம் 30ஆம் திகதி நால்வர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாகவே அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## நோர்வேயின் சமாதான முயற்சிகளை விளக்கும் நூல் செப்ரெம்பர் வெளியீடு




கொழும்பு, மே 9

இலங்கையில் நோர்வேயின் சமாதான முயற்சிகளை விவரிக்கும் நூல் ஒன்று வரும் செப்ரெம்பர் மாதம் வெளிவரவிருப்பதாகத் தகவல் வெளியிட்டுள்ளார் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

எரிக் சொல்ஹெய்ம், தனது டுவிட்டர் பக்கத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ரூ எண்ட் ஏ சிவில் வோர் என்ற தலைப்பில், இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட நோர்வேயின் சமாதான முயற்சிகளை இந்த நூல் விவரிக்கிறது.

மார்க் சோல்ட்டர் என்ற ஆய்வாளர் இந்த நூலை எழுதியுள்ளார். (த)

## கேரளா- இலங்கை இடையே சுற்றுலாக் கப்பல் சேவைகள்

கொழும்பு, மே 9

இந்தியாவின் கேரள மாநிலத்துக்கும், இலங்கைக்கும் இடையில் சுற்றுலாப் பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த மாதம், கேரளாவில் இருந்து வந்த குழுவினருடன், இது குறித்து முதல்சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும் ஒரு மாத இடைவெளிக்குள், கேரளாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சுற்றுலாப் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்த விவரங்கள் அனைத்தும் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் சேவை நேரம் சுமார் 16 மணித்தியாலங்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, திருவனந்தபுரத்தில், நேற்றுக் கேரள முதல்வர் உம்மன் சாண்டியைச் சந்தித்த அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா, அவரை இலங்கைக்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார். (த)


மாகாண மட்ட மாபெரும் மாணவர் கலை இலக்கியத் தேர்வு - பரிசு வழங்கல்

தமிழ் வளர்ப்போம்; தமிழால் இணைவோம்

ஓவியங்கள் வரையும் ஓவியங்கள்



மாகாணமட்ட மாபெரும் மாணவர் கலை இலக்கியத் தேர்வுப் பெறுபேறுகள், ஏற்கனவே உங்கள் உதயன் நாளேட்டில்,

| | | | |
|---|---|---|---|
| கட்டுரை பி பிரிவு | - 2015.04.15 | ஓவியம் ஏ பிரிவு | - 2015.04.18 |
| ஓவியம் சி பிரிவு | - 2015.04.16 | கவிதை ஏ பிரிவு | - 2015.04.20 |
| ஓவியம் பி பிரிவு | - 2015.04.17 | கட்டுரை ஏ பிரிவு | - 2015.04.21 |

சிறுகதை ஏ பிரிவு - 2015.04.23 தினங்களில் வெளியாகியிருந்தன.

பரிசு மற்றும் சான்றிதழ் பெறுவோர் விவரம் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பரிசு வழங்கல் தினம் 2015.05.10 ஞாயிறு 09.20 மணி முதல் 12.30 மணிவரை

இடம்: சபாலிங்கம் அரங்கு, யா/ இந்துக் கல்லூரி.

30 அகவையில் உதயன்

எதிர்கால ஓவிய மற்றும் இலக்கிய சிற்பிகளை வாழ்த்த, பாராட்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுச் செயற்குழு.

# யேமன் நாட்டில் போர் நிறுத்தம்



ரியாத்,மே09

அரபு நாடான யேமனில் ஷியா பிரிவைச்சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சி படையினர் போரிட்டு வருகின்றனர். அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா ஹவுத்தி படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. அந்தப் போரில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து அமெரிக்கா பொது மக்கள்பாதிப்படைவதைத்தடுக்கவும், அவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவும், காயம் அடைந்த வர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் சில நாள்கள் போர் நிறுத்தம் செய்யும்படி சவுதி அரேபியாவைக் கேட்டு கொண்டது. அதேபோன்று ஹவுத்திகிளர்ச்சிப்படையினருக்கும் வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட சவுதி அரேபியா 5 நாள் போர் நிறுத்தம் செய்ய சம்மதம் தெரிவித்துள்ளது. அதேபோன்று கிளர்ச்சிப் படையினரும் போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். இதையடுத்து போர் பாதிக்கப்பட்ட பகுதியில் நிவாரண நடவடிக்கைகள் தீவிரமாக நடந்து வருகின்றன.(14)

## மீண்டும் நடுங்கியது நேபாளம்



காத்மண்டு,மே09

நேபாளத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி மிகக்கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. அதில் பல்லாயிரக் கணக்கான வீடுகள் இடிந்து நொறுங்கின. சுமார் 80 லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட 13 நாடுகள் மீட்புப் பணிகளை மேற்கொண்டன. வெளிநாட்டு மீட்புக் குழுக்கள் நேபாளத்தில் இருந்து வெளியேறி விட்ட நிலையில் சீரமைப்புப் பணிகளை நேபாள நாட்டு மக்களே செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களை அடிக்கடி நில அதிர்வு பயமுறுத்தி வருகிறது. நேற்றுக் காலை நேபாள நாட்டில் மையப்பகுதியில் 2 இடங்களில் கடும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அந்த நில அதிர்வு 4 ரிக்டர் அளவு கோலாக பதிவாகி இருந்தது.

டோலகா மாவட்டத்தில் ஏற்பட்ட நில அதிர்வு 5 ரிக்டர் அளவு கோலாக இருந்தது. இந்த இரு நில அதிர்வுகளும் நேபாள நாட்டு மக்களிடம் கடும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. (14)

## எபோலா நோயால் சாவு தாண்டியது 11 ஆயிரத்தை

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

ஜெனிவா,மே09

எபோலா வைரஸ் நோயின் தாக்குதலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மேற்கு கினியாவில் தொடங்கிய இந்த நோய் லைபீரியா, சியாராலியோன் ஆகிய நாடுகளுக்கும் வேகமாக பரவி மக்களின் உயிரைப் பறித்து வருகிறது.

இந்தக் கொடிய வைரஸ் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்பட்ட கினியா, லைபீரியா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுகளில் மட்டும் 11 ஆயிரத்து 5 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்தமாக 26 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லைபீரியாவில் எபோலா நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. அந்த நாட்டில் மட்டும் 4 ஆயிரத்து 716 பேர் உயிரிழந்துள்ளனர். தற் போது புதிதாக யாரும் அந்த நாட் டில் எபோலாவால் பாதிக்கப்படாததால், லைபீரியாவில் எபோலா நோயின் தாக்கம் முடிவுக்கு வந்து விட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று கினியா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுகளிலும் இந்த நோயின் தாக்கம் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)



இரண்டாம் உலகப் போரில் ரஷ்யா பெற்ற வெற்றியை கொண்டாடும் வகையில் 70 ஆவது ஆண்டு வெற்றி விழா ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக 5 நாள் பயணமாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ரஷ்யா சென்ற போது அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## நில நடுக்க உயிரிழப்பு 8 ஆயிரமாக அதிகரிப்பு



காத்மண்டு,மே09

நேபாளத்தில் கடந்த 25 ஆம் திகதி ஏற்பட்ட நில நடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 413 ஆக உயர்ந்தது என நேபாள செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

நேபாள செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நேபாளத்தில் ஏற்பட்ட 7.9 ரிக்டர் நிலநடுக்கத்தால் 8 ஆயிரத்து 413 பேர் உயிரிழந்துள்ளனர். 17 ஆயிரத்து 576 பேர் காயம் அடைந்துள்ளனர். 260 பேரைக் காணவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 1934 ஆம் ஆண்டுக்கு பின்னர் இமாலய நாடான நேபாளத்தில் இந்தப் பேரழிவு நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. நில நடுக்கத்தால் 10 ஆயிரத்து 718 கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 14 ஆயிரத்து 741 கட்டடங்கள் பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளன. (14)

## இராணுவ தாக்குதலில் 21 தீவிரவாதிகள் சாவு

கெய்ரோ,மே09

எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகம்மது முர்சியின் ஆட்சி கடந்த 2013 ஆம் ஆண்டு அகற்றப்பட்டதில் இருந்து பல்வேறு தீவிரவாத அமைப்புகள் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களை ஒடுக்கும் வகையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் எகிப்தில் வடக்கு சினாய் மாகாணத்தின் ரபா எல்லைப்பகுதியில் அல்குவைதா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகளைக் குறி வைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். ஹெலிகொப்டர் மூலமாக சஹல் அல் பாஹர் என்ற பகுதியில் உள்ள ஒரு பண்ணை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

இதேபோன்று தெற்கு மடால்லா நகரில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்த பண்ணை வீடும் அழிக்கப்பட்டுள்ளது. (14)

## மனித கடத்தல் முகாம்களை 10 நாள்களில் அகற்ற உத்தரவு




தாய்லாந்தில் உள்ள மனித கடத்தல் முகாம்கள் அனைத்தையும் பத்து நாள்களுக்குள் அப்புறப்படுத்தும் படி தாய்லாந்தின் பிரதமர் ப்ரயுத் சான் ஓசா உத்தரவிட்டுள்ளார்.

தாய்லாந்த்-மலேஷியா எல்லைப் பகுதியில் இருந்த புதைகுழிகளில் முப்பதுக்கும் அதிகமான சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்து வழியாக கடத்தப்படும் சட்ட விரோத குடியேறிகளில் பெரும்பாலானவர்கள் பர்மாவில் தங்களுக்கு எதிராக நடக்கும் ஒடுக்கு முறைகளில் இருந்து தப்பிவரும் ரோஹிங்கா முஸ்லிம்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (14)

# மீண்டும் பிடித்தார் ஆட்சியை கமரூன்








[illegible],மே09
[illegible]ன் நாடாளுமன்றத் தேர்தலில் [illegible]ட் கமரூன் தலைமையிலான ஆளும் கன்சர்வேடிவ் கட்சி அதிக இடங்களை பிடித்து தொடர்ந்து 2 [illegible]து முறையாக ஆட்சியைக் [illegible]பற்றியுள்ளது.
அ[illegible]குள்ள 650 தொகுதிகளில், இதுவரையில் வெளியான தேர்தல் முடிவுகளின்படி 310 ஆசனங்களைப் பெற்று ஆளும் கன்சர்வேடிவ் கட்சி முன்னிலை பெற்றுள்ளது. தொழில் கட்சி 228 ஆசனங்களைப் பெற்று இரண்டாம் நிலைக்குத் பின்தள்ளப்பட்டுள்ளது. இதனைத் தவிர ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி 56 ஆசனங்களைப் கைப்பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.
பிரிட்டனில் வெளியாகும் பத்திரிகைகள், கன்சர்வேடிவ் கட்சி யின் பிரதம வேட்பாளாரான டேவிட் கமரூன் 329 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாக கருத்து கணிப்பில் தெரிவித்துள்ளன.
தனிபெரும்பான்மையை நிரூபிக்க 326 தொகுதிகளே போதுமான நிலையில், தற்போதைய வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் கமரூன் எதிர்ப்பார்த்ததை விட அதிக தொகுதி எண்ணிக்கையில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாக தெரிகிறது.
கன்சர்வேடிவ் கட்சி தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் செய்தி கிடைத்ததும், தனது மனைவியான சமந்தாவை கட்டியணைத்து முத்தமிட்ட ஒளிப்படத்தை டேவிட் கமரூன் தனது ரூவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். (14)



## ஐ.நா.வுக்கு பெண் தலைமை பான் கீ-மூன் வலியுறுத்தல்

நியூயோர்க்,மே09
ஐ.நா. சபையின் தலைமைப் பதவிக்கு பெண் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என அந்த அமைப்பின் தற்போதைய பொதுச் செயலர் பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.
பான் கீ-மூனின் பதவிக் காலம் அடுத்த வருடத்துடன் முடிவுக்கு வரும் நிலையில், ஐ.நா. அமைப்பின் அடுத்த பொதுச் செயலராக பெண் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு இதுவே மிகச் சரியான தருணம் எனப் பான் கீ-மூன் கருதுகிறார்.
தனது பதவிக் காலத்தில் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஐ.நா. அமைப்பில் முக்கிய பொறுப்பு வகிக்கும் பல பெண்களைப் பான் கீ-மூன் சந்தித்துள்ளார். எனினும், அடுத்த பொதுச் செயலர் பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து அவர் கருத்து தெரிவிக்கப் போவதில்லை.
எனினும், அடுத்த பொதுச் செயலர் ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் அவர் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## மீண்டும் நிலநடுக்கம்

போர்ட் மோர்ஸ்பை,மே09
பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியாவில் நேற்றுமுன்தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
அந்த நிலநடுக்கம் 7.2 ரிக்டர் அளவுகோலில் பதிவாகி இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
நில நடுக்கத்தால் பீதி அடைந்த பொதுமக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அரவா நகரின் தென்மேற்கு பகுதியில் இருந்து 150 கிலோ மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
நிலநடுக்கத்தால் பெரிய அளவில் உயிர்சேதமோ, பொருள்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. மேலும் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்பு தான் பப்புவா நியூ கினியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

# தினமும் 30 ஆயிரம் பேர் அகதிகளாகும் அவலநிலை

### நோர்வே அகதிகள் சபை கணிப்பு

ஜெனிவா,மே09
போர் மற்றும் கலவரம் காரணமாக கடந்த வருடம் மட்டும் ஒவ்வொரு நாளும் 30 ஆயிரம் பேர் தங்களது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியுள்ளது.
நோர்வே அகதிகள் சபையின் செயலாளர் ஜோன் இக்லாண்ட் இது பற்றிக்கூறும்போது; இந்தத் தலைமுறையில் எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரே ஆண்டில் அதிக பட்ச மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். உள்நாட்டுக்குள்ளேயே இடம் பெயரும் மக்களின் எண்ணிக்கை 11 மில்லியனில் இருந்து 38 மில்லியனாக உயர்ந்துள்ளது.



கடந்த வருடம் சராசரியாக ஒவ்வொரு நாளும் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 30 ஆயிரம் பேர் தங்களது வசிப்பிடங்களில் இருந்து வெளியேறி தங்களது நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இதில் அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்துள்ளார்.
முக்கியமாக ஈராக், தெற்கு சூடான், சிரியா, கொங்கோ மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் 10 பேரில் 6 பேர் உள்நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலவரங்கள் அனைத்தும் அரசியல் மற்றும் மதங்களின் பெயரால் இரக்கமற்ற முறையில் கொடூர ஆயுதங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கொடூரத்தைத் தடுத்து நிறுத்த உலக நாடுகளின் கொள்கைகள், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள், சமாதான பேச்சுக்கள் மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் ஆகியவை தவறிவிட்டன என்று நோர்வே அகதிகள் சபை குற்றம் சாட்டியுள்ளது. (14)

## அகதிகள் மீதான தாக்குதல்; கவலையில் ஜேர்மனி அரசு

பெர்லின்,மே09
ஜேர்மனியில் அகதிகள் மீதான தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது. அகதிகள் மற்றும் அவர்களின் வீடுகள் மீதான தாக்குதலின் எண்ணிக்கை கடந்த 2013 ஆம் ஆண்டு 58 ஆக இருந்தது கடந்த வருடம் 203 ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.
இவற்றில் சுமார் 175 தாக்குதலுக்கு அந்த நாட்டின் வலதுசாரி அமைப்பினருக்குத் தொடர்புள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
அகதிகள் மீதான தாக்குதல்களின் எண்ணிக்கை அதிகரிப்பது கவலை அளிக்கும் விதமாக உள்ளது என்றும் சுதந்திரமான ஜேர்மனி நாட்டில் ஒவ்வொருவருக்கும் இடையில் அமைதியை முன்னிறுத்தி வாழ வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இனப்பாகுபாடு குறித்து ஐக்கிய யூனியன் நாடுகள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் ஜேர்மனியின் உள்துறை அமைச்சகம் இந்த ஆய்வுத் தகவலை வெளியிட்டுள்ளது. (14)

# மூவாயிரம் அகதிகள் நைஜரிலிருந்து வெளியேற்றம்

அபுஜா,மே09
நைஜீரியாவில் போகோ ஹராம் பயங்கரவாதத்தாக்குதலுக்கு அஞ்சி அண்டை நாடான நைஜரில் தஞ்சமடைந்த மூவாயிரம் அகதிகள், மீண்டும் தாயகம் திருப்பி அனுப்பப்பட்டதாகதகவல்கள்தெரிவிக்கின்றன.
அகதிகள் முகாம்களிலிருந்து கடுமையான சூழலில் வெளியேற்றப்பட்ட அவர்களில், 12 பேர் நைஜீரியா திரும்பும் வழியில் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகளும், சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் தெரிவித்துள்ள னர்.



நைஜரின் சாட் ஏரி பகுதியிலுள்ள ஒரு தீவில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் கடந்த வாரம் தாக்குதல் நடத்தினர். அதனையடுத்து, நைஜரிலிருந்து வெளியேறுமாறு தங்களுக்கு இராணுவத்தினர் உத்தர விட்டதாக அகதிகள் தெரிவித்துள் ளனர்.
எங்களது துணிமணிகளை எடுத்துக்கொள்ளக்கூட அவர்கள் நேரம் தரவில்லை. அதனால் அனைத்து உடைமைகளையும்அப்படியேவிட்டுவிட்டு வெளியேறும் கட்டாயத்துக்கு உள்ளானோம் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.
அனைத்து அகதிகளும் 3 நாள்கள் நடந்து நைஜீரிய எல்லையை அடைய வேண்டியிருந்தது. குடிநீர் இல்லாமலும், கடுமையான வெப்பத்திலும் மேற்கொள்ளப்பட்ட அந்தப் பயணத்தின்போது, ஒரு பெண், புதிதாகப் பிறந்த அவரது இரட்டைக் குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.
தற்போது வந்தடைந்துள்ள மூவாயிரம் அகதிகள் மட்டுமின்றி, மேலும் பலர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)



# பவள விழாக்காணும் ஆயருக்கு

## மன்னார் சமாதான அமைப்பு வாழ்த்து

**75** ஆண்டுகளை நிறைவு செய்து பவள விழாக் காணும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களை வாழ்த்துவதில் மன்னார் சமாதான அமைப்பு பெருமிதம் அடைகின்றது.

உலகமெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களால் இன்று போற்றப்படும் ஓர் ஆன்மிகத் தலைவர் – மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை என்றால் அது மிகையாகாது.

1992ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்ட ஆயராக திருநிலைப்படுத்துவதற்கு முன்பே ஆயர் அவர்கள் பங்குத் தந்தையாக மன்னாரில் சில கிராமங்களில் சேவையாற்றி சமூக ஆன்மிகத் தொண்டுகளைச் செய்து வந்தார். இவர் மன்னார் மாவட்டத்தில் சேவையை ஆரம்பித்த காலத்திலேயே கொடிய போரும் இனக் கலவரங்களும் உச்சக் கட்டமடைந்து பல உயிர்களைக் காவு கொண்டது. ஆனாலும் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மன்னார் மாவட்டம் பல வழிகளிலும் சாவுகளையும் அழிவுகளிலும் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது. காரணம் ஆபத்து வேளைகளில் இலங்கை அரசுக்கு மன்னார் ஆயர் விடுவித்த அறிக்கைகளும் ஊடகச் செய்திகளுமாகும்.

மன்னார் ஆயரும் அவருடன் சேர்ந்த குருக்களும் போர்க் காலத்திலும் இயற்கை அனர்த்தங்களான சுனாமி, பெருவெள்ளம் போன்ற வேளைகளிலும் இலங்கை முழுவதும் மேற்கொண்ட மீட்புப் பணிகள் எண்ணிறைந்தவையாகும். காணாமல் போனோரைக் கண்டடைவதிலும் சிறையில் உள்ளோரை விடுதலை செய்வதிலும், முள்ளிவாய்க்காலில் உச்சக் கட்டத்தில் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஆயர் மேற்கொண்ட பணிகள் எண்ணி லடங்காதவை. ஆயரின் வேண்டுகோளை ஐ.நா.சபையும் இந்திய அரசும் அமெரிக்க அரசும் செவி சாய்த்திருக்குமாகில் லட்சக் கணக்கான மக்களின் உயிர்களையும் அவர்களின் உடைமைகளையும் காப்பாற்றி இருக்கமுடியும்.

இறுதிக்கட்டப் போரின்போது 146,000 தமிழ் மக்கள் காணாமற்போயுள்ளதை மன்னார் ஆயர் புள்ளிவிபரங்களுடனும் ஆதாரங்களுடனும் தொடர்ச்சியாக வெளிப்படுத்திவருகின்றார். மேலும் தற்போது இலங்கையில் நடந்தது, நடந்துகொண்டிருப்பது இனப்படுகொலைதான் என்று சொல்லும் எந்தவொரு அரசியல்வாதிகளாலும் அதற்குரிய ஆதாரங்களைத் திரட்டமுடியாத நிலையில் மன்னார் ஆயர் அதனைத் திரட்டி பகிரங்கப்படுத்தியிருந்தார்.

போர்க் காலங்களில் எமது மன்னார் சமாதான அமைப்பு தென்பகுதி சிங்கள மக்களையும் பௌத்த பிக்குமார்களையும் கொண்டு வந்து மன்னாரில் நடத்திய பல பேரணிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் ஆயர் பங்குபற்றி போரின் கோரத் தன்மையையும் இலங்கை முழுவதும் அது ஏற்படுத்தியிருக்கும் அழிவுகளையும் விளங்கப்படுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துமாறு அனைத்து மக்களுக்கும் வேண்டுதல்கள் விடுத்தார். மன்னார் பிரஜைகள் குழுவின் போசகராக இருந்து அதன் மூலமும் அத்துடன் வாழ்வுதயம், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மூலமாகவும் – போர்க் காலங்களில் மக்களுக்குச் செய்த சேவைகள் மறக்கவே முடியாதவையாகும். இறந்த உயிர்களை அடக்கம் பண்ணவும் காயமடைந்து உயிருக்காக ஏங்கிக் கொண்டிருந்த மக்களை காப்பாற்றுவதற்கும் அவர் எடுத்த முயற்சிகள் மேலானவை, காணியற்ற ஏழைகள், வீடற்ற மக்களுக்கு காணிகளும் வீடுகளும் கொடுத்து சமய சார்பின்றி சகல மக்களுக்கும் செய்து வரும் சேவைகள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

ஆயர் அவர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள புலம் பெயர் மக்கள் மத்தியிலும் பெரும் மதிப்பு உண்டு. காரணம் இவருடைய பணி மன்னார் மாவட்டத்தில் இருந்து ஆரம்பமாகி வன்னி மாவட்டம், வவுனியா, முல்லைத்தீவையும் தாண்டி கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வரையும் சென்று முழு இலங்கையிலும் பரவி இறுதியாக ஐ.நா. சபையையும் உலகத்தையும் அடைந்துள்ளது. இவர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டுகள் ஊடகச் செய்திகளாக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் வரையும் சென்று தமிழ் பேசும் மக்களின் இனம், மொழி பற்றிய உணர்வை மேம்படுத்தியுள்ளது.

மனித உரிமைகளுக்காகவும் அநீதிகளுக்காகவும் குரல் கொடுக்குமுகமாக திருச்சபையின் சட்டத்துறையில் பெற்ற கலாநிதிப் பட்டம் குறிப்பிட்ட போர்க் காலத்தில் இனச் சுத்திகரிப்பு நடைபெற்ற வேளையிலும் மனித உரிமைகளுக்காகவும் அநீதிகளுக்காகவும் குரல் கொடுத்தது. மேற்படி கல்வியானது ஊடகங்கள் மூலமாக செய்திகளை வெளியிடவும் உந்து சக்தியை கொடுத்தது. முஸ்லிம் பள்ளி வாசல்கள் உடைக்கப்பட்ட போதும் முஸ்லிம் மக்களுக்காக வாதாடினார். ஆயரின் இப்படியான தன்னலமற்ற சேவையை தமிழ் அரசியல் தலைவர்கள் தமது மேடைகளில் பாராட்டிப் பேசியது மட்டுமல்லாது பல சமயங்களைச் சேர்ந்த தலைவர்கள் இருந்தும் மன்னார் ஆயரைப் போல் சேவை செய்ய முன்வரவில்லை என சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆனாலும் போர் முடிந்து 6 வருடங்கள் கடந்து சென்றாலும் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே ஆயரின் பணிகள் தொடர வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம். தமிழ் மக்களுக்கு ஒரு சமஷ்டி ஆட்சி கிடைக்க வேண்டும். இனக் கலவரங்கள் நிறுத்தப்பட்டு சிறிலங்கா நாடு கடவுள் பக்தி நிறைந்த ஓர் புண்ணிய பூமியாக மாற வேண்டும். பூரண சமாதானம் நாட்டில் நிலவ வேண்டும். இந்தத் தேவைகளுக்காக ஆயர் தொடர்ந்து தமது வாழ்வை அர்ப்பணித்து சேவை செய்யக் கூடிய சகல வரங்களையும் இறைவன் கொடுக்க வேண்டும். இதற்காக அனைவரும் ஜெபிக்க வேண்டுமென எமது மன்னார் சமாதான அமைப்பு சகல மக்களையும் வேண்டி நிற்கின்றது.

இதன் மூலமாக சமாதானத்திற்கான சர்வதேச நோபல் பரிசுகளையும் மனித உரிமைக்கான நோபல் பரிசுகளையும் வழங்க ஐ.நா.சபையும் சம்பந்தப்பட்ட உலக ஸ்தாபனங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்களின் தார்மீக கடமையாகும்.


எல்லாம் வல்ல இறைவன் எமது ஆயர் அவர்களுக்கு பூரண சுகத்தைக் கட்டளையிட்டு அதன் மூலமாக தமிழ் பேசும் மக்களுக்கு சகல உரிமைகளும் நீதியும் சாந்தி சமாதானமும் சகவாழ்வும் கிடைக்க அருள் புரிவாராக.

## சிறுவர்களுக்கான றக்பியை முன்னெடுத்தது டி.எச்.எல்

இலங்கையின் இளம் றக்பி வீரரொருவருக்கு இங்கிலாந்தில், நடைபெறவுள்ள 2015 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் உத்தியோகபூர்வ பந்தினை நடுவரிடம் கையளிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் செயற்திட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வரவேற்பைத் தொடர்ந்து, உலகின் முன்னணி சர்வதேச பொருள்கள் விநியோக சேவை வழங்குநரும், 2015 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் உத்தியோக பூர்வ விநியோக சேவை பங்காளருமான டி.எச்.எல் எக்ஸ்பிரஸ் நிறுவனம் கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் சிறுவர்களுக்கான றக்பி களியாட்டத்தினை முன்னெடுத்திருந்தது.

டி.எச்.எல் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் இலங்கை செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி திமித்ரி பெரேரா கருத்து தெரிவிக்கையில், 'உலகக் கிண்ண றக்பி போட்டிகளின் அங்கமாக இருப்பது பெருமையளிப்பதுடன், இதனூடாக மாணவர்கள் மத்தியில் றக்பி விளையாட்டினை மேம்படுத்த முடிந்துள்ளது' என்றார். 'டி.எச்.எல் மூலம் ஒவ்வொரு நாளும் அதன் வாடிக்கையாளருக்கு வழங்கி வரும் மனப்பான்மை, வேகம், ஆர்வம், துல்லியம் மற்றும் வெற்றி நோக்கிய அர்ப்பணிப்பு போன்றவற்றை சான்று பகரும் விளையாட்டாக றக்பி அமைந்துள்ளது' என மேலும் திமித்ரி தெரிவித்தார்.

இதன் போது ஆரம்பத்தில் 'பு' பிரிவு பாடசாலைகளிலிருந்து 36 பிரிவுகளின் கீழ் போட்டியிட்ட 80 பாடசாலை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இந்த தெரிவு முறைகள் இலங்கை றக்பி கால்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டது.




இந் நிகழ்வில் அடுத்த கட்ட சுற்றுப்போட்டிகளுக்கு மாணவர்களை முன்னேற்றும் வகையில் திறன் மதிப்பீட்டு செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. றக்பி பயிற்சி செயலமர்வுக்கு மேலதிகமாக, தேசிய அணி உறுப்பினர்கள் மற்றும் பயிற்சியாளர்களிடமிருந்து விளையாட்டு தொழில்நுட்பங்கள் தொடர்பான குறிப்புகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த செயலமர்வுகளின் இறுதியில் தேசிய அணி உறுப்பினர்களினால் மீளாய்வு செய்யப்பட்டதற்கமைய, 20 மாணவர்கள் தாம் வெளிப்படுத்திய றக்பி திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் மாணவர்கள் தங்கள் றக்பி கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கு அவசியமான ஊட்டச்சத்து தேவைகள் தொடர்பில் விழிப்பூட்டும் வகையிலான ஊட்டச்சத்து செயலமர்வொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தேசிய அணியின் ஊட்டச்சத்து பயிற்றுவிப்பாளரான எது துசித்தல மாணவர்கள் மத்தியில் ஊக்கமளிக்கும் உரையை நிகழ்த்தினார். இந் நிகழ்வினை புகழ்பெற்ற றக்பி வீரரான சந்த்ரிஷன் பெரேரா தலைமைதாங்கி நடத்தினார்.(த)

## வாகனச் சாரதிகள் கவனிப்பார்களா?

நேற்று முன்தினம் யாழ். நகரில் உள்ள காங்கேசன்துறை வீதியில் கால் நடையாகச் சென்று கொண்டிருந்தேன். சிறிது தூரம் சென்றதும் மஞ்சள் கோடு தெரிந்தது. எனக்கும் மறுபக்கத்துக்குச் செல்ல வேண்டிய தேவை இருந்தது. அதனால் மஞ்சள் கோட்டின் வழியே மறுபக்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்பாக ஓட்டோ ஒன்று பயங்கர வேகத்தில் கடந்து சென்றது. என்னை மோதி விடுமோ என்ற அச்சமும் என் னுள் எழுந்தது.

எமது ஆள்கள் விதிமுறைகளை எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இதுவொரு சிறு உதாரணம்தான். மஞ்சள் கோட்டைக் கடக்கும் போது நின்று நிதானமாகச் செல்லவேண்டும் என்பதுகூட அந்த ஓட்டோ சாரதிக்குத்தெரியவில்லையா? தெரிந்து கொண்டுதான்அவ்வாறுசெய்தாரா? என்பது எனக்குப் புரியவில்லை.

தற்போது வீதிகளில் இடம்பெறுகின்ற விபத்துக்களுக்கு வாகனச் சாரதிகளே காரணமெனக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. இதை மெய்ப்பிக்குமாப் போன்று பல வாகன சாரதிகள் நடந்துகொள்கின்றனர். மனித உயிர்களை இவர்கள் துச்சமாக மதிப்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த நிலை மாறும் போது தான் விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடையும்.

*கா.சுதர்சன், தாவடி*




## வீதிகளுக்கு விடிவு கிடைக்கட்டும்

தற்போது பெய்துவரும் மழை காரணமாக ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வலிகாமம் தெற்குப் பிரதேசபைக்குரிய வீதிகளில் பல மோசமான கட்டத்தை எட்டியுள்ளன. மாரி காலம் ஆரம்பிக்கும் போது இவற்றினூடாக மக்கள் ப்யணிக்க முடியாத நிலையே ஏற்படப் போகின்றது.

மக்களுக்குச் சீரான போக்குவரத்து வசதிகளை வழங்குவது பிரதேச சபைகளின் கடமையாகும். அவற்றின் பணிகளில் வீதிப் பராமரிப்பு முக்கியமானது. ஆனால் பிரதேச சபை உறுப்பினர்களோ அல்லது பிரதேச சபையின் அதிகாரிளோ இதனைக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

மக்களும் தமது குறைகளைச் சுட்டிக் காட்டுவதில் அசமந்தமாக இருப்பதும் தெரிகின்றது. நமக்கேன் வீணான வேலை, எவராவது இவற்றைக் கவனிக்கட்டும்" என்ற தவறான சிந்தனையும் அவர்களிடம் குடி கொண்டுள்ளது. இந்த மனப்பான்மை நீடிக்குமானால் சமுதாயம் உருப்படவேமாட்டாது.

மேலும் பிரதேச சபையினரும் தமது சக்திக்கு ஏற்ற வகைகளில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும்.

*ந.தர்மலிங்கம், சுன்னாகம்.*

## நன்றி தெரிவிக்கின்றோம்

மேற்படி எமது சங்கத்தால் நீர்வேலி மாசுவன் வீதியைத் திருத்தித் தருமாறு, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைக் கேட்டுக் கொண்ட மேற்படி வேண்டுகோளை 21.09.2014 இல் உதயன் பத்திரிகை மூலம் பிரசுரித்ததற்கமைய, மிகவும் பழுதடைந்த நிலையிலிருந்த இந்த வீதி நீர்வேலி மாசுவன் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் மூன்று சந்தி வரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக உழைத்த பத்திரிகை நிறுவனத்துக்கும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கும் மேற்படி நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும், குறித்த இந்த வீதி வழியாக 1989 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருந்த பாதை இல.800 இ.போ.ச.பஸ் சேவை இன்று காலையில் ஆரம்பிக்கப்பட் டுள்ளதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*த.பரராசசிங்கம், தலைவர்.*

கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## சமூக விரோதச் செயல்களை கட்டுப்படுத்தவேண்டும்

வடமராட்சியில் வல்லிபுரக் கோயிலை அண்மித்துச் சட்டவிரோதமாக மணல் அள்ளியவர்களைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தடுத்து நிறுத்தியதோடு அதனுடன் தொடர்புடைய ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அதனைத் தடுத்த நிறுத்தப் பொலிஸார் ஆரம்பத்தில் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸாரின் எச்சரிக்கையையும் மீறி அவர்கள் அவ்வாறு மணல் திருட்டில் ஈடுபட்டதனால் அத்தகைய கெடுதல்காரர்களைப் பொலிஸார் சுட்டுப் பிடித்துள்ளனர்.

பொலிஸாரும் முதலில் அவர்களைப் பிடிக்க முற்பட்டபோதே அவர்கள் பொலிஸாரைத் தாக்க முற்பட்டுள்ளனர். அதனாலேயே அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவர் களைப் பிடிக்கவேண்டி ஏற்பட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர். வாகனத்தில் வைத்தே பொலிஸார் தம்மைச் சுட்டனர் என்று காயப்பட்டவருக்குச் சார்பானவர்கள் குற்றம் சாட்டினாலும் இத்தகைய விடயங்களில் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடிக்கும் – சுட்டுத் தடுக்கும் செயற்பாட்டை மேற்கொண்டமை குறித்து விமர்சனங்கள் எழுவது வழமையே.

நாளாந்தம் பல லோட்கள் கொண்ட மணல் திருடப்படுகின்றது. தென்மராட்சி, தீவகம் எனப் பல இடங்களிலும் இன்றும் அது தொடர்கிறது. அதனைத் தடுப்பதில் பொலிஸாரின் செயற்பாடு பூரணமாக இருக்குமா என்பது சந்கேமே. பொலிஸாருக்கே தண்ணி காட்டிவிட்டு தப்பியவர்களும், பணத்தை இறைத்துவிட்டும் சென்றவர்களும் உள்ளனர் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

மணல் திருட்டைத் தடுக்கும் பொலிஸாரின் வழமையான செயற்பாடுகள் பல தடவைகள் வெற்றியளித்திருக்கவில்லை. வல்லிபுரக் கோயிலை அண்மித்த சூட்டுச் சம்பவம் நிச்சயம் பயத்தை, மாற்றத்தை உண்டு பண்ணும்.

மணல் திருட்டைத் தடுக்கப் பொலிஸார் எந்த அளவுக்கு அக்கறையாக இருந்தனர் என்பதற்கப்பால் அதில் சில பொலிஸார் தீவிரமாக இருந்தனர் என்பதனை மறுக்க முடியாது. அதனால் தான் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் மணல் ஏற்றுபவர்கள் முன்னர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றிருந்தனர் என்பதனையும் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த வேண்டும்.

ஆனாலும் சில பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மணல் ஏற்றுபவர்களுக்கு உடந்தையாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. மணல் திருட்டைத் தடுத்த சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தீவகம் போன்ற இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் என்ற கதையும் பொலிஸாரிடையே ஓடிக்கொண்டு தானிருக்கின்றன.

மணல் திருட்டு எமது சமூகம் சார்ந்த பெரியதொரு பிரச்சினையாகிவிட்டது. எமது சமுதாயம் மெழுகுதிரியாக அழிவதனைத் தடுக்கவேண்டும். வரைமுறையற்ற மணல் அகழ்வால் கரையோர வளம் நாசமாக்கப்படுகிறது. எதிர்காலச் சந்ததியினரின் வளம், இருப்பு கேள்விக்குறியாகிறது. ஆதலால்தான் மணல் அகழ்வைத் தடுக்க வேண்டும் என்று கல்விமான்களும் குரல் கொடுத்து வருகிறார்கள். ஆனால் பணத்துக்காக எதிர்கால சமூக அக்கறை எதுவும் அற்று கட்சி ஒன்றும் நிதியம் ஒன்றினூடாக வரைமுறையற்று மணல் அகழ்வில் ஈடுபட்டது.

எனவே சட்டவிரோதமாக மணல் அகழ்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் செய்தாவது பொலிஸார் மணல் திருட்டைத் தடுக்கவேண்டும். மணல் திருட்டுக்குப் போனால் பொலிஸார் துப்பாக்கியால் சுடுவார்கள் என்ற பயம் திருடரிகளிடமும் ஏற்படுத்து மளவுக்கு அதிரடிச் செயற்பாடு பொலிஸாரிடமும் இருக்கவேண்டும்.

உயிர் பிரியுமளவுக்குச் சூட்டுச் சம்பவம் இருக்காது. திருடர்களது தொடைக்குக்கீழ் சுட்டாவது அவர்களைப் பிடித்தே ஆகவேண்டும். பொலிஸாரின் இத்தகைய செயலைப் பலர் விமர்சிக்கலாம். ஆனால் அதனைவிட எமது சமூக விரோதிகளை ஒடுக்க தற்போதைக்கு மாற்று வழியில்லை.

மணல் திருட்டில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரமல்ல ஏனைய திருட்டு, கொள்ளை, கொலை, வன்புணர்வில் ஈடுபடுபவர்களுக்கும், கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருள் சூத்திரதாரிகளுக்கும், முக்கியமாக யாழ்.குடாநாட்டில் பல இடங்களிலும் வாள்வெட்டில் ஈடுபடுபவர்கள் மீதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டாவது தடுத்து நிறுத்த வேண்டும். கோப்பாய் பொலிஸார் வாள்வெட்டில் ஈடுபட்ட ஆவா என்ற ஒருவனுக்கு எதிராக கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டதானது அவனைச் சில மாதங்களாவது சிறையில் அடைக்க வழி வகுத்தது. ஆனால் அவன் பின்னர் வெளியே வந்ததும் பழைய பல்லவியாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

நல்லவர்கள் மீது பொலிஸார் கை வைத்தால் மக்கள் பொலிஸாருக்கு எதிராகப் பொங்கி எழுவார் கள். எனவே இத்தகைய சமூக விரோ திகளுக்கு எதிராகப் பொலி ஸார் இனியாவது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களும் அதற்கு உதவியாக இருப்பர். புலிகள் இருந்த காலத்தில் அதிரடிச் செயல்களே சமூகத்தைக் காத்தது. தற்போது அது இல்லாததன் வலி நன்றாகவே உணரப்படுகிறது. வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமூக விரோதிகளை ஒழித்துக் கட்டும் விடயத்தில் கொண்டுள்ள அக்கறை தீவிரமடையட்டும். அதற்கேற்ற நடவடிக்கை எடுக் கட்டும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க் குற்ற விசாரணையை மழுங்கடிக்க புதிய வியூகம்

இந்த நாட்டில் நடைபெற்ற -- நடத்தப்பட்ட -- போரின் இறுதிக் கட்டத்தின் போது, இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதத்தைய அமர்வுக்கு முன்னர் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் --

எமது உள்நாட்டுப் பொறிமுறை, இலங்கைக்கு எதிரான நடவடிக்கையைத் தடுக்கும் திட்டமாகவே அமையும் --

அத்தோடு, எங்கள் நாட்டில் இடம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு பதில் அளிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் -- என்று விளாசி உள்ளார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

போரின்போது ஆயிரம் பேரோ அல்லது நாற்பதாயிரம் பேரோ இறந்தார்கள் என்பது குறித்து எமக்குத் தெரியாது. ஆனால் இலங்கை மீதான குற்றச்சாட்டுக் குறித்து, உள்நாட்டு விசாரணையை நடத்தி, அனைத்துலகத்துக்குப் பதில் வழங்க வேண்டும் -- என்றும் உறுக்கிக் கூறப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கடந்த மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட இருந்த, இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த, நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளிவராமல் தடுப் பதில், இலங்கையின் புதிய அரசு தந்திரமாக வெற்றி கண்டமை உலகு அறிந்த உண்மை.

இலங்கைத்தமிழ் மக்கள், பல்லாயிரக் கணக்கில், போர் என்ற போர்வைக்குக் கீழ் கொன்று ஒழிக்கப்பட்டமை அனைத்துலகமும் அறிந்த ஒன்று.

அது குறித்து, ஐ.நா. சபை நேர்மையுடனும், நடுவுநிலைமையுடனும் விசாரணை நடத்தும் என்ற எதிர்பார்ப்பு, உலகளாவிய ரீதியில் நிலவியது. ஆனால் கொழும்பில் பதவிக்கு வந்த புதிய அரசு, அதனை நரித்தந்திரத்துடன் பின் தள்ளியது. தனது தரப்பின் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்குக் கங்கணம் கட்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் ஆராயப்பட இருந்த போர்க் குற்ற விவகாரம், ஏதேதோ சுத்துமாத்துகள் முன்னெடுக்கப்பட்டு, வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின் தள்ளப்பட்டிருக்கிறது அதன் விளைவு --

இந்த நாட்டின் புதிய அரசு, தனது தந்திரோபாயம் வெற்றி அளித்ததாகக் கருதி, கர்வத்துடன் செயற்படும் நிலைக்கு களமிறங்கிச் செயற்படுகிறது.

ராஜபக்ஷ அரசைவிடக் கர்வம் நிறைந்த போக்கில், புதிய அரசு, போர் என்ற போர்வையில் தமிழ் மக்களைக் கொன்று ஒழித்ததை நியாயப்படுத்தும் வகையில் --

உள்நாட்டுப் பொறிமுறை என்ற போர்வையின்கீழ் செயற்பட முனைகிறது என்பது மிக வெளிச்சமாக மின்னுகிறது.

மனிதாபிமானம் என்றால் துட்டுக்கு எத்தனை என்று கேட்கும் அளவுக்கு, இந்த நாட்டில் ஆட்சிக்கட்டில் ஏறும் சகல சிங்கள அரசுகளது உடம்புகளில், வெளியே ஒரேவித தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், உள்ளூர கறுத்துத் தடித்துப்போன, வெறித்துப் புளித்துப்போன குரோத இரத்தமே ஓடுகிறது என்பதையே இது புலப்படுத்துகிறது.



# சூறையாடப்பட்டது நாட்டின் பொருளாதாரம்

## மைத்திரி அரசின் நடவடிக்கை என்ன?

■ ராஜராஜன்

ஊழல், மோசடி செய்து பதுக்கி வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் சொத்து மதிப்பு 2லட்சத்து 40ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாக அரசின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் நான்கில் ஒருபங்கு எனவும், 100 தலைமுறைகளுக்குப் போதுமானது எனவும், அமெரிக்காவில் கூட இந்த அளவுக்குச் சொத்துக்களைக் கொண்டுள்ளவர்கள் ஒரு சிலரே எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை தலையைச் சுற்ற வைக்கும் அளவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை போன்றதொரு சிறிய நாடு இந்தப் பெரிய ஊழல், மோசடிகளைத் தாங்கிக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. சுமார் 10 ஆண்டு காலம் ஆட்சியில் அமர்ந்திருந்த மஹிந்த ராஜபக்ஷ, நாட்டைப் பற்றியோ அல்லது அங்கு வாழுகின்ற சாதாரண மக்களைப் பற்றியோ கிஞ்சித்தும் தமது மனதில் கொள்ளாமல் தமது இஷ்டத்துக்கு ஏற்ப நாட்டைச் சூறையாடியுள்ளமை, இந்தச் சொத்து விவரங்களின் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. நாட்டில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் அப்போதைய ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டதால் அவர்கள் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

தென்பகுதி மக்களுக்கு மஹிந்தவைப் போரை வென்று காட்டிய சூரன், சிங்கள மக்களைப் புலிகளிடமிருந்து காத்த பெருவீரன் என்று புகழ்வதற்குத் தெரிந்ததே தவிர அவரது உண்மையான முகத்தைக் காண முடியவில்லை.

இலங்கை, உலகின் ஏழ்மையான நாடுகளின் பட்டியலில்தான் இன்றும் உள்ளது. இங்கு வாழ்கின்ற மக்களில் அதிக சதவீதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ்தான் உளளனர். இதனால்தான் சமுர்த்தி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் நாட்டுக்குப் பொருத்தமில்லாத பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றினால் நாட்டுக்குப் பொருளாதார பின்னடைவுகள் ஏற்பட்டனவே தவிர, பயன்ஒன்றும் கிடைக்கவில்லை. அம்பாந்தோட்டைத்துறைமுகம், மத்தள விமான நிலையம், கொழும்பு – அம்பாந்தோட்டை அதிவேக நெடுஞ்சாலை ஆகியவை இவற்றுள் சில வாகும். தற்போதைய அரசின் தகவல்களின் பிரகாரம் இந்த வேலைத் திட்டங்கள் மூலமாகப் பெருந்தொகையான நிதி சுருட்டப்பட்ட தாகத் தெரிய வருகின்றது." பாட்டும் நானே பாவமும் நானே" என்ற வகையில் நிதி அமைச்சராக மஹிந்த ராஜபக்ஷவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக அவரது இளவலான பஸில் ராஜபக்ஷவும் பதவிகளில் அமர்ந்திருந்ததால், அங்கு என்ன நடந்தது என்பது எவருக்குமே தெரியாமல் போய்விட்டது. அப் படித் தெரிந்தாலும் அதை வெளியிட முடியாத பயங்கரமான சூழ் நிலைதான் அப்போது காணப் பட்டது. மஹிந்தவின் ஒட்டுமொத்தக் குடும்பமுமே ஊழல், மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, தற்போது கட்டம் கட்டமாக விசார ணைகளும் இடம்பெற்றுவருகின்றன.


மஹிந்த ஒரு தந்திரசாலி என்பதால் தமது குடும்பத்தினரால் சுருட்டப்பட்ட பெருந்தொகையான சொத்துக்களை வெளிநாடுகளில் உள்ள வெவ்வேறு நிறுவனங்களில் போலியான பெயர்களில் பதுக்கி வைத்துவிட்டு, தாம் ஒன்றுமே இல்லாத ஒரு ஏழை பங்காளர் என்ற தோற்றத்தை நாட்டு மக்களிடம் ஏற்படுத்தி வருகின்றார். தமக்குக் கொழும்பில் வசிப்பதற்கு ஒரு வீடுகூட இல்லையெனவும் கூறி அவர் பிறரை ஏமாற்றி வருகிறார். அவர் இன்னமும் சில ஆண்டுகள் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்பாராயின் இன்னொரு சோமாலியாவாகவே இந்த நாடு மாறியிருக்கும். நல்ல வேளையாக மஹிந்தவுக்குத் தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு ஆலோசனை கூறிய சோதிடர்கள் நாட்டைக் காப்பாற்றி விட்டார்கள்.

அண்மையில் இடம்பெற்ற மைத்திரி–மஹிந்த சந்திப்பின்போது தமக்கும், தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை விலக்கிக் கொள்ளுமாறும் விசாரணைகளை நிறுத்தி வைக்குமாறும் மஹிந்த கோரிக்கை விடுத்ததாகச் செய்திகள் கசிந்துள்ளன. மேலும் தற்போதைய மைத்திரி–ரணில் ஆட்சியை சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியுடன் ஒப்பிட்டும் பேசியுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ என்ற ஆரம்ப கால மனித உரிமைகள் செயற்பாட்டாளர், பதவிக்கு வந்ததும் மனித உரிமைகளை எவ்வாறு மதித்துச் செயற்பட்டு வந்தார் என்பதை இந்த முழு உலகமும் நன்கு புரிந்து கொண்டுள்ளது. இறுதிப் போரின்போது தமிழ் மக்களை அவர் நடத்திய விதம் ஹிட்லரின் செயல்களையே பின்னுக்குத் தள்ளிவிட்டது. இந்த நிலையில் அவர் தம்மையாரு புனிதராக இனி மேலும் காட்டிக்கொண்டிருக்க முடியாது. அவர் ஒரு சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்தார் என்பதைவிட ஊழல் வாதியாகத் திகழ்ந்தார் என்பதே பெரும் அவமானச்சின்னமாக உருவெடுத்துள்ளது. இதற்கு முன்னர் பதவி வகித்த ஜனாதிபதிகள் தமது ஆட்சியின்போது தவறுகள் செய்திருக்கலாம். ஆனால் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டார்களென எவரும் குற்றம் சுமத்தவில்லை. ஆனால் மஹிந்தவைப் பொறுத்த வரையில் அவ்வாறில்லை.

மஹிந்த குடும்பத்தினரால் பதுக்கி வைக்கப்பட்ட பெருந்தொகையான பணத்தை வெளிக்கொணர்வதன் மூலமாக இந்த நாட்டின் பொருளாதார நிலையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர முடியும். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களின் தராதரங்கள் பார்க்கப்படாது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் மைத்திரி அரசின் தலையாய கடமையாகும்.

சிங்கள மூலம் – சந்துன் ஜீவந்த (மவ்பிம)
தமிழில் – வீ. எஸ். ரீ.







# 19 அது ஒரு புஷ்வாணம்

மலையைக்கல்லி எலியைப் பிடித்த கதையாக, அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் என்ற குழந்தை கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு ஒருவாறு இந்த மண்ணில் ஜனனித்தது.


பூரண ஆரோக்கியம் மிக்க குழந்தையாக அது பிறக்கும் என முன்னர் கூறப்பட்டபோதிலும், செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பிறந்த அந்த 19 ஆவது திருத்தம் என்ற குழந்தை எதிர்பார்க்கப்பட்டமைபோன்று பூரண ஆரோக்கியம் கொண்ட குழந்தையாக அல்லாமல், உடல் ஊனமுற்றதொரு குழந்தையாகப் பிறந்துள்ளதாகவே கருத முடிகிறது. அந்த ஊனமுற்ற குழந்தையைப் பெற்றெடுத்த அந்தக் குழந்தையின் தாய் அதனைப் பிரசவிக்க எந்த அளவுக்குச் சிரமப்பட்டிருப்பார் என்பதைத் தெரிந்து கொள்ள எவராவது விரும்பியிருந்தால், அவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் இருந்திருக்கவேண்டும்.

**நோக்கத்தைப் பூர்த்தி செய்த திருத்தமல்ல - 19**

உண்மையில் ஏப்ரல் 28 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச் சட்டமூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருப்பினும், அது உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை இல்லாதொழிக்கும் அரசமைப்புத் திருத்தமல்ல. அது உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கான அதிகாரங்களில் சிலவற்றை நீக்கும் விதத்திலான அரசமைப்புத் திருத்தமேயாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் வேளையில் மைத்திரிபால சிறிசேன, ரணில், அனுரகுமார திஸாநாயக்க, சோபித தேர் ஆகியோர் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை ஒழிக்கவிருப்பதாகவே நாட்டின் வாக்காளர்களுக்கு வாக்குறுதி வழங்கினர். அந்த நடைமுறையை ஒழித்துவிட்டு நாடாளுமன்றத்தைப் பலம் மிக்கதாக ஆக்கும் புதிய நடைமுறையயான்றுக்காகவே நாட்டு மக்கள் மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்கி அவரை ஜனாதிபதி ஆக்கி வைத்தனர்.

உண்மையில் கூறுவதானால், அன்று நாடாளுமன்றத்தில் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து, 17 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடே நிறைவேற்றப்பட்டுள்ளது. அது உண்மையில் "இதோ பார், பத்துக்கிலோ மரவள்ளிக் கிழங்கு வாங்கித் தோளில் காவிக்கொண்டு வந்து தருகிறேன்" என்று வீட்டில் மனைவியிடம் வாயடித்து விட்டு சந்தைக்குச் சென்ற குடும்பஸ்தரொருவர், 250 கிராம் நிறையுள்ள மரவள்ளிக்கிழங்கை சிலு சிலு' பை ஒன்றில் போட்டுக்கொண்டு வீடு சென்ற கதையை ஒத்ததொன்றே. சந்தைக்கு மரவள்ளிக்கிழங்கு வாங்கப்போய், வாங்க இயலாமல் வெறும் கையுடன் வீடு திரும்புவதை விட, பத்துக் கிலோ வாங்க முடியாவிட்டாலும் கால் கிலோவாவது வாங்க முடிந்தமை மனதுக்கு ஆறுதல் தருமொன்றே. அந்த வகையில் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடிந்தமை குறித்து நாம் ஒரு வகையில் திருப்தியடைய இயலும்.





**சட்டமூல விதிகளுக்கு மாற்றம் கோரிப் பிரேரணைகள்**

குறித்த தினத்தன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் கையே ஓங்கியிருந்தது. 19 ஆவது திருத்தச்சட்டமூலம் குழு நிலை ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனைத் தெளிவாக உணர முடிந்தது. 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவ தற்கு முன்னர் அதில் மாற்றங்கள் குறித்துப் பிரேரணைகளை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கும் நடைமுறையே அதுவாகும். அரசு முன்வைக்கும் சட்டமூலத்தின் விதிகள் குறித்து எதிர்ப்பு வெளியிடுவதாயின் அதற்கான வாக்கெடுப்பைக் கோரும் உரிமையும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது. அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது அத்தகைய விதிகள் மாற்றப் பிரேரணைகளை ஏற்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. தமது எதிர்கால அரசியல் பலத்தை கருத்தில் கொண்டு, ரணிலும், ஐ.தே.கட்சியும் இந்த 19ஆவது திருத்தத்தை வடிவமைத்திருந்தமையே அதற்கான காரணம்.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலம் அற்ற அரசின் பிரதமர் என்ற பின்னடைவு நிலையில், தமது தரப்பின் வாய்ப்பைக் கருத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பல விதிகளை மாற்றியமைக்க வேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டது. அவற்றில் ஒரு விதி தேர்தல் வேளையில் செயற்படும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக உரிமையாளர்களுக்கு அவர்களது செயற்பாடு குறித்த குற்றச் சாட்டின் கீழ் 3 ஆண் டுகள் காலம் சிறைத்தண்டனை விதிக்க முடியுமென்ற விதியாகும். ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த செயற்படுவதாகக்கூறி பதவிக்கு வந்த நல்லாட்சி அரசின் இந்த ஊடக சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான முயற்சி எதிர்க்கட்சிகள் முன்வைத்த திருத்தப் பிரேரணை மூலம் முறியடிக்கப்பட்டது. அதே போன்று புதிதாக நியமிக்கப்படும் அரசமைப்புச் சபை உறுப்பினர்கள் பத்துப் பேரில் ஏழு பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருத்தல் வேண்டுமென்ற விதிக்கான திருத்தப் பிரேரணையையும் விரும்பாத போதிலும்கூட ரணில் ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

**கையாலாகாத்தனத்தில் ரணில்**

குறித்த தினத்தன்று பகல் வேளை முழுவதும் ரணில் நாடாளுமன்றத்தில் குழப்பமானதொரு நிலையிலேயே காலம்கழிக்க நேர்ந்தது. தாம் நினைத்த விதத்தில் 19 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விதிகளுடன் அதனை நிறைவேற்றிக்கொள்ள ரணிலால் இயலாது போய்விட்டது. வாலில்லாத எருது போன்று நாடாளுமன்றப் பெரும்பான்மை கொண்டிராத ரணிலின் அரசு, 19 ஆவது திருத்தத்தில் தான் உள்ளடக்கியிருந்த பல விதிகளை கைவிடவோ அல்லது மாற்றத்துக்கு உள்ளாக்கவோ வேண்டிய இக்கட்டு நிலைக்கு உள்ளாக நேர்ந்தது.





19 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, அதில் உள்ளடக்கியிருந்த சில விதிகளை தினேஷ்குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரின் எதிர்ப்புக்கள் காரணமாக கைவிட நேர்ந்தது. 19 ஆவது திருத்தம் குறித்த குழுநிலை ஆய்வின் போது, எதிர்க் கட்சித் தலைவர் நிமல் ஸ்ரீபால டி சில்வா, எந்தவொரு கருத்தையும் வெளியிடாது மௌனம் காத்தமை பலரது கவனத்தை ஈர்த்ததொன்றாகக் காணப்பட்டது.

புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆணைக் குழுக்கள் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறவேண்டியதில்லை என்ற விதியை ரணில் உள்ளடக்க முயன்றபோதிலும், வாசுதேச, தினேஸ், விமல் வீரவன்ச போன்றோரின் எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட நேர்ந்தது.

ரணில் முன்வைத்த மற்றொரு திருத்தமாக அமைந்தது நாடாளுமன்ற உறுப்பினரொருவர் தாம் சார்ந்துள்ள கட்சியால் தமக்கு ஏதாவது நியாயவீனம் இழைக்கப்பட்டால் அது குறித்து உயர் நீதிமன்றத்தை மட்டுமேயொழிய வேறெந்த கீழ் மட்ட நீதிமன்றங்களை நாட இயலாதென்ற திருத்தமாகும். அத்தகைய நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் எந்த மட்டத்தைச் சேர்ந்த நீதிமன்றமாயினும் அதன் உதவியை நாட வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற எதிர்த்தரப்பினரின் கடும் வற்புறுத்தல் காரணமாகக் கடைசியில் ரணில் அவர்களது நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக நேர்ந்தது. இந்த வகையில்தான் 19 ஆவது திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் ரணில், எதிர்க்கட்சியினரின் சகல நெருக்குவாரங்களுக்கும் விட்டுக்கொடுத்து, ஒத்துப்போய் அந்தத் திருத்தத்தை அன்று அரைகுறையாக, ஒருவாறு நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய நிலைக்கு உட்பட நேர்ந்தது. வீட்டு மாப்பிள்ளையாக நேர்ந்தால் பெண்டாட்டி சொல்வதற்கெல்லாம் தலையாட்டி, சம்மதித்தே வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை போன்றதொரு நிலையே அன்று ரணிலுக்கு ஏற்பட்டிருந்தது.

எவ்வாறோ, கடைசியில் எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த பல திருத்தங்களுடன் அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இது விடயத்தில் ரணிலால் தாம் நினைத்த விதத்தில் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள இயலாது போய்விட்டது. ஏனெனில் அந்த அளவுக்கு அதற்குப் பெருமளவிலான விதிகளில் திருத்தம் முன்வைக்கப்பட்டது மட்டுமன்றி அவை ஏற்றுக் கொள்ளவும்பட்டிருந்தன.

மொத்தத்தில் மரவள்ளிக்கிழங்கு பத்துக் கிலோ கொண்டுவரமுடியாவிட்டாலும், கொண்டு வரப்பட்ட 250 கிராம் கிழங்கை சமைப்பதற்கு எந்தச் சமையல்காரரிடம் அதனை ஒப்படைத்து எனத் தீர்மானிக்கும் சந்தர்ப் பத்தை நாட்டு மக்கள் கையில் ஒப்படைப்பதே பொருத்தமானதாகும்.

மைத்திரிபாலவும் ரணிலும் தாம் அரசை நிறுவியவேளையில் நல்லாட்சி அரசின் ஆதரவாளர்களுக்கு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். தம்மீது தமக்கே நம்பிக்கை இருக்குமானால், அவர்கள் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதே நியாயமாகும்.

அந்தவகையில், நல்லாட்சி அரசின் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாது காலம் தள்ளிப்போய்க் கொண்டிருக்கிறது. நூறு நாள்களைத் தாண்டி ஆட்சியில் நீடிக்க ரணிலுக்கு மக்கள் ஆணை கிட்டியிருக்கவில்லை. ஆதலால், பதவியில் தொடர்ந்து நீடித்திருக்க முயலாது, ரணில், மக்களது ஆணை கோரி மக்கள் முன் சென்றாக வேண்டியது அவசியமான ஒன்றாகும். அதைத் தவிர்த்து பிரதமர் பதவியில் நீடித்திருக்க குறுக்குவழி எதனையும் ரணில் தேட முயல்வாரானால், அதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட நாட்டு மக்கள் இரு தடவைகள் சிந்திக்கப் போவதில்லை என்பதே நாட்டின் இன்றைய யதார்த்த நிலை.

# தழும்புகளை மறைய வைப்பது எப்படி?



உடல் அழகைக் கெடுப்பதில் தழும்புகள் முக்கிய பங்கினை வகிக்கின்ற. அத்தகைய தழும்புகள் விபத்து அல்லது அலர்ஜியின் காரணமாக ஏற்படும். இவ்வாறு ஏற்படும் தழும்புகளை நீக்குவ்து மிகவும் கடினமான ஒரு செயல். நிறைய பெண்கள் வேலை செய்யும் போது இந்த மாதிரியான தழும்புகளைப் பெறுவார்கள். அதிலும் சமைக்கும் போது சூடான எண்ணெய், படுவது துணியை இஸ்திரி போடும் போது சூடு வைத்துக் கொள்வது போன்றவற்றால் தான் தழும்புகளைப் பெறுகிறார்கள். இத்தகைய தழும்புகள் நன்கு தெளிவாகத் தெரியும். இதனைப் போக்க எத்தனை க்ரீம்கள் கடைகளில் விற்றாலும் அதைப் பயன்படுத்தினால் எந்த ஒரு பயனும் இருக்காது. ஆனால் அத்தகைய தழும்புகளைப் போக்க சில இயற்கை முறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தினால் தெளிவாகத் தெரியும் தழும்புகளை சற்று மங்க வைப்பதோடு மறையவும் வைக்கலாம்.

எலுமிச்சைச் சாற்றை தினமும் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் தடவி 2 நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும். முக்கியமாக எலு மிச்சைச் சாற்றை தீக்காயம் நன்கு காய்ந் தப் பின்னர் தடவ வேண்டும்.

தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உள்ள தழும்புகளை நீக்க பாதாம் அல்லது ஒலிவ் ஒயிலை தடவி மசாஜ் செய்ய வேண்டும். அதிலும் ஒரு நாளைக்கு இரு முறை தடவி வந்தால் நன்கு பளிச்சென்று தெரியும் தழும்புகள் மங்கிவிடும்.

கற்றாழையில் உள்ள ஜெல்லானது மிகவும் சிறந்த ஒரு பொருள். அந்த ஜெல்லை தழும்புகள் உள்ள இடத்தில் தொடர்ந்து தடவி வந்தால் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உள்ள தழும்பானது மறைய ஆரம்பிக்கும். அதுமட்டுமின்றி, சருமமும் மென்மையாகும்.

பாலில் உள்ள சத்துக்களை சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லை. தினமும் குளிக்கும் முன்பு பாலை தழும்புகள் உள்ள இடத்தில் தடவி மசாஜ் செய்து 10 நிமிடம் ஊறியபின் குளிக்க வேண்டும். வேண்டுமெனில் அதில் சிறிது எலுமிச்சைச் சாற்றை விட்டும் செய்யலாம்.

ஒலிவ் ஒயில் பல நன்மைகளை உள்ளடக்கியது. அத்தகைய ஆலிவ் ஒயில் தழும்புகளை நீக்கவும் பயன்படுகிறது. எனவே இந்த ஒயிலை தீக் காயம் ஏற்பட்ட இடத்தில் தினமும் காலையும் மாலையும் தடவி மசாஜ் செய்து வந்தால் ஒலிவ் ஒயிலில் உள்ள பொருளானது தழும்புகளை மறைய வைக்கும்.

தக்காளியில் அதிகமான விற்றமின்கள் இருப்பதால், அவை சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கித் தழும்புகளை மறைய வைக்கும். அதற்கு தக்காளித் துண்டுகளை வெட்டியோ அல்லது அதன் சாற்றையோ பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி தினமும் மசாஜ் செய்து வந்தால் தழும்புகள் போய்விடும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அன்பே நமது அடிப்படை

எமது ஆராய்ச்சி என்னும் வலைக்குள், கடவுள் ஒருபோதும் அகப்படமாட்டார். அன்பு தான் வாழ்வின் அடிப்படை. ஆனால், எல்லோர்ரயும் வெறுக்கும் ஒருவன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான்.

கடவுள் சொர்க்கத்தைப் படைத்தார். மனிதன் தனக்குத் தானே நரகத்தைப் படைத்துக் கொண்டான். மற்றவர்களுக்கு வழிகாட்டும் போது ஒரு வேலைக்காரனைப் போல நடந்து கொள். மனிதனுக்கு கடவுள் நம்பிக்கை மட்டும் போதாது. தன்னம்பிக்கை அதை விட அவசியமானது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 9 | 7 | 4 | 2 | 8 | 6 | 1 |
| 2 | 8 | 6 | 5 | 3 | 1 | 4 | 9 | 7 |
| 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 2 | 3 | 5 |
| 8 | 9 | 2 | 4 | 6 | 5 | 7 | 1 | 3 |
| 3 | 1 | 5 | 2 | 8 | 7 | 6 | 4 | 9 |
| 4 | 6 | 7 | 3 | 1 | 9 | 5 | 2 | 8 |
| 7 | 2 | 3 | 9 | 5 | 4 | 1 | 8 | 6 |
| 9 | 4 | 1 | 6 | 7 | 8 | 3 | 5 | 2 |
| 6 | 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 7 | 4 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 3 | 5 | | | | 6 |
| | | | 9 | 4 | 7 | 1 | | |
| | | 8 | | 2 | | 9 | | 3 |
| 1 | 8 | | | | 4 | 6 | | |
| | 2 | | | | | | 1 | |
| | | 4 | 7 | | | | 8 | 2 |
| 2 | | 5 | | 1 | | 8 | | |
| | | 3 | 4 | 9 | 5 | | | |
| 9 | | | | 7 | 2 | | 3 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 9X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

### சித்திரை-27
### ஞாயிற்றுக்கிழமை
### 10.05.2015

திதி: ஸப்தமி பி.இ. 03.29 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப.10.44 வரை
சுபநேரம்: 08.54-10.24 வரை
இராகுகாலம்: 04.24-05.54 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 60 | 60 | 30 | 60 | 50 | – |
| கத்தரி | 50 | 50 | 70 | 100 | 50–60 | 80 | 80 | 35–40 |
| கரட் | 80 | 100 | 120–140 | 120 | 100–120 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 30–40 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 80 | 60 | 60–80 | 40 | 70–80 | 60 | 100 | 40–50 |
| பாகல் | 100 | 100 | 120 | 100 | 80–100 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 90 | 80 | 40– 50 | 120 | 100 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 100 | 100–110 | 120 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 60 | 60–100 | 60–100 | 80 | 70–80 | 100 | 80 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 20–30 | 40 | 40 | 20 |
| தக்காளி | 80 | 80 | 70–100 | 80 | 80–90 | 100 | 60 | 50–60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 | 50–60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 50 | 30 | 10 | 20–30 | 50 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 40 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 50 | 40 | 60 | 80 | 40 |
| புடோல் | 70 | 40 | 60 | 60 | 40–50 | 40 | 60 | 45 |
| கோவா | 40 | 60 | 30–50 | 50 | 35–40 | 80 | 80 | 35–40 |
| வெண்டி | 80 | 50 | 60–100 | 80 | 80–100 | 40 | 60 | 25–30 |
| போஞ்சி | 130 | – | 160 | 160 | 120 | 160 | 140 | 100 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 | 160 | 200 | 120 | 140 |
| தேங்காய் | 60 | 35–45 | 60 | 50 | 40–50 | 60–70 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 90–100 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 200 | 160 | 170 | 250 | 180–200 | 200 | 120 | 130 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 10 |
| கரிமிளகாய் | 40 | 60 | 60 | 80 | 50–60 | 120 | 80 | 40 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 100–120 | – | 160 | 100 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 700 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 550 | 500 | 500 | 600 | 450 |
| பாரை | 550 | 500 | 500 | 450 | 600 | 360 |
| சுறா | 500 | 450 | 500 | 650 | – | 400 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 450 | 320 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 500 | 350 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 350 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| கிழாக்கன் | 550 | 650 | 350 | 400 | – | – |
| ஒரா | 400 | 300 | 350 | 350 | – | – |
| திரளி | 150 | 250 | 250 | 300 | 300 | – |
| நகரை | 150 | 250 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 400 | 120 | 150 | 140 |
| ஒட்டி | 300 | 150 | 250 | 300 | 400 | 150 |
| திருக்கை | 150 | 300 | 300 | 250 | 200 | 140 |
| பாலை | 350 | 300 | 280 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | 350 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 200 | 250 |

# கண்டிப்பில்லாத பெற்றோர்களில் ஒருவரா?



தங்களுடைய பிள்ளைகள் எதைக் கேட்டாலும் அல்லது. செய்தாலும் கண்டிக்காமல் அனுமதி கொடுக்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் பெரும்பாலும், எந்தவித ஒழுங்கையும் கடைப்பிடிக்காதவர்களாகவும், அடக்கமில்லாதவர்களாகவும், உடை விஷயத்தில் கவனம் இல்லாதவர்களாகவும் மற்றும் பண்பில்லாதவர்களாகவுமே இருப்பார்கள். இது உண்மைதான், என்ற போதிலும், இவர்கள் இப்படிப்பட்டவர்கள் மட்டுமே அல்ல! 'பெற்றோர்கள் எந்த விஷயத்திலும், 8 முதல் 12 வயது குழந்தைகளிடமும், வளர் இளம் குழந்தைகளிடமும் மிகவும் சரியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது, சில குணாதிசயங்கள் மிகவும் கண்டிப்பில்லாத பெற்றோராக தோன்றச் செய்வதை உணரும் போது, அது பெற்றோர்களுக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்' என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஒழுங்கு மற்றும் வரைமுறை இல்லாமல் பல பெற்றோர்கள் சில வேலைகளைச் செய்து, தங்கள் பிள்ளைகளை ஒரு வழிக்கு கொண்டு வரும் முயற்சியை மிகவும் தலைவலியான விஷயமாகவே கருதுகின்றனர். இப்படிப்பட்ட சூழலில், வளரும் சிறுவர்கள் மற்றும் வளர் இளைஞர்கள் நாளடைவில் கட்டுப்பாடுகளோ அல்லது பொறுப்புகளோ இல்லாதவர்களாக சிறுகச் சிறுக மாறி விடுவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாக உள்ளன. எனவே, தங்கள் குழந்தையின் நேர்மறை வளர்ச்சிக்கு பெற்றோர்கள் சற்று உழைக்க வேண்டுமென்று உணர்வதற்கு, இதுதான் சரியான தருணம்! சச்சரவுகளைத் தவிர்த்தல் பல பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் கேட்கும் அல்லது முன் வைக்கும் விஷயங்களை வேண்டாம் என்று சொல்லாமல், உடனே 'சரி' என்று சொல்வார்கள். இது போன்ற செயல்பாடுகள், மிகவும் கட்டுப்பாட்டுடன் இல்லாத பெற்றோர்களிடம் இருக்கும் குணாதிசயமாகும். ஆகவே எதையும் எடுத்ததும் சரி என்று சொல்லாமல், அவர்கள் கேட்பது நல்லதா, கெட்டதா என்பதை அலசி, ஆராய்ந்து பின் முடிவை சொல்ல வேண்டும். இதுவே மிகவும் நல்லது. பள்ளியை ஒரு காரணமாக வைத்திருத்தல். புத்திசாலித்தனமாக வளர்ந்துள்ள குழந்தைகள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பள்ளியை அல்லது படிப்பை ஒரு காரணமாகக் காட்டி, தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதை வழக்கமாக கொண்டிருப்பார்கள். இது போன்ற சம்பவங்கள், படிப்புக்காக எதையும் தள்ளி வைக்கும் பெற்றோர்கள் இருக்கும் வீடுகளில் அடிக்கடி நடக்கும். குழந்தைகளுடன் நண்பர் போல பழகுதல். சில கட்டாயப்படுத்தாத பெற்றோர்கள், தங்களுடைய குழந்தைகள் தங்களை அதிகாரத் தோரணையுடையவராக பார்ப்பதை விட, அவர்களின் வயதையொத்தவரைப் போல பார்ப்பதையே நலம் என்று நினைப்பார்கள். இவ்வாறு இருப்பது நல்லதாக இருந்தாலும், சில சமயங்களில் கெட்டதாக முடியும். ஆகவே உரிய நேரத்தில் பெற்றோராக நடப்பது மிகவும் சிறந்ததாக இருக்கும். குழந்தைகளுக்கு புதிய தொழில் நுட்பங்களை வழங்குதல். தங்கள் பெற்றோர்களிடம் அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளைக் கொண்ட வீடுகளில், இளம் மற்றும் மிகவும் இளம் வயதுகளிலேயே சிறுவர்கள் (8-12 வயது) கூட ஸ்மார்ட் கைபேசிகளை பெறும் வாய்ப்புக் கிடைக்கிறது. அவ்வாறு வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்கள் குழந்தைகள் ஏதேனும் அவசரத்திற்கு தங்களிடம் பேச வேண்டி வரும், ஆகவே தான் என்று காரணம் கூறுவார்கள். அவ்வாறு கைபேசிகளை அவர்கள் கேட்டதும், சிறு வயதிலேயே வாங்கிக் கொடுப்பது நல்ல விஷயமல்ல! சில சமயங்களில் அது அவர்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்லும்.



# மே மாத ராசி பலன்கள்

## கன்னி

(உத்தரம் 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதம்)
புத்தி கூர்மையுடன் செயற்பட்டு எந்த சிக்கலையும் தீர்க்கும் கன்னிராசியினரே. இந்த காலகட்டத்தில் எந்த ஒரு விடயத்தையும் கவனமுடன் கையாள்வது நல்லது. முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை ஏற்படும். எந்த ஒரு காரியத்தையும் துணிச்சலாகச் செய்து வெற்றி பெறுவீர்கள்.
குடும்பத்தில் கலகலப்பு இருக்கும். கூடவே மனதில் ஒரு வித கவலையும் இருந்து வரும். வாழ்க்கைத் துணையுடன் எதையும் பேசித் தீர ஆலோசித்து செய்வது நன்மை தரும். பிள்ளைகள் அன்பு செலுத்துவார்கள்.



ஆனால் அவர்களுக்காக செலவு செய்ய நேரிடும். தொழில் வியாபாரம் விறுவிறுப்படையும். கடந்த காலங்களில் இருந்த மந்தநிலை மாறும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

### உத்தியோகத்தர்களுக்கு

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு குறையும். உங்கள் மேலதிகாரிகளின் மன நிலையை அறிந்து சமயோசிதமாக நடந்து கொள்வீர்கள். அதே சமயம் உங்கள் வேலைகளை முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்தால் குழப்பங்களிலிருந்து தப்பிக்கலாம். மற்றபடி சிறியளவு முயற்சிகளில் நிறைவான வெற்றிகளை அடைவீர்கள். அதேசமயம் சக ஊழியர்கள் உங்களிடம் சற்று பாராமுகமாகவே இருந்து வருவார்கள். அதனால் சக ஊழியர்களை அதிகம் நம்ப வேண்டாம்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் ஆற்றல் அதிகரிக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். உங்களுக்கென்று தனி இடத்தைப் பிடிப்பதில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் படைப்புகள் மக்களிடம் சரியான முறையில் சென்றடைந்து வரவேற்புகளைப் பெறும்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு பணவரவு நன்றாக இருப்பதால் ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். அதேசமயம் கணவரோடு ஒற்றுமையுடன் நடந்து கொள்ளவும்.

### மாணவர்களுக்கு

மாணவமணிகள் கல்வியில் முன்னேற்றத்தைக் காண்பார்கள். விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றியடைவார்கள். சோம்பேறித்தனத்தை விட்டொழித்து சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். அனைத்து இடையூறுகளையும் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆதரவினால் தாண்டி வந்து விடுவீர்கள்.

### அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி உத்தரம் 2, 3, 4

இந்த மாதம் பெரியவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதும் நன்மை தரும். மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டா கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகளும் தீரும். எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்வதன் மூலம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார்.

### அத்தம்

இந்த மாதம் சுப பலன் உண்டாகும். எந்த ஒரு வேலையையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

### சித்திரை 1, 2

இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகள் வசூலாகும். வாகனங்கள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான துணி போன்றவைகளை வாங்குவீர்கள். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

# தொழிலுக்கு அதிக நேரம் ஒதுக்கி விடுவது சரியா?

பலர் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தொழில்புரியும் இடங்களில் கடுமையாக உழைப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருப்பதால் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு போதிய முக்கியத்துவம் வழங்க மறுத்துவிடுகின்றனர். வாழ்க்கைக்கு பணம் தேவைதான் என்றாலும், பணத்திலேயே அல்லது தொழில்ரீதியான பணியிலேயே குறியாக இருந்தால் அவர்களின் குடும்ப, சமூக வாழ்க்கை ஆட்டம் காணலாம். ஒருவர் உழைக்கக்கூடிய பருவத்தில் குடும்ப வாழ்க்கைக்காக அல்லது உழைப்புக்காக அதிகம் முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பது குறித்து வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. 'குறிப்பிட்ட வயதிலேயே உழைக்க முடியும். அதனால் உழைக்கும் பருவத்தில் உழைப்புக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்' என சிலர் கூறுகின்றனர். ஆனால் மற்றொரு தரப்பினர் வேலையைவிட குடும்ப சமூக வாழ்க்கை முக்கியம் என்கின்றனர். தமது கருத்தை வலுப்படுத்துவதற்கு அவர்கள் சுட்டிக்காட்டும் விடயங்கள் சில வருமாறு:-
வேலையென்பது ஒருபோதும் முடிவுறும் செயன்முறை அல்ல. உங்களால் ஒருபோதுமே உங்களது வேலைகளைச் செய்து முடிக்க முடியாது. உங்கள் வாடிக்கையாளரின் நலன் என்பது உங்கள் குடும்பத்தின் நலன்களைவிட முக்கியமானதல்ல.
நீங்கள் வாழ்க்கையில் தோல்வியை தழுவும்போது உங்களுக்குக் கைகொடுக்கப்போவது உங்களது முதலாளியோ தொழிலாளியோ அல்ல. ஆனால், குடும்பத்தினரும் நண்பர்களும் உதவு வார்கள்.
வாழ்க்கை என்பது அலுவலகத்துக்குத் தினம் வருவதும், வீட்டுக்கு செல்வதும் நித்திரை கொள்வதும் அல்ல. ஒரு வாழ்க்கையில் இதைவிட அதிகமான விடயங்கள் உள்ளன. சமூகமயமாகுவதற்கு, கேளிக்கை பொழுது போக்குகளில் ஈடுபடுவதற்கு, உடற் பயிற்சிக்கு, ஓய்வுக்கு என உங்களுக்கு நேரம் வேண்டும். உங்கள் வாழ்க்கையை அர்த்தமற்றதாக மாற்றிக்கொள்ளாதீர்கள்.
ஒரு நபர் கண்விழித்து இரவு முழுதும் வேலை செய்பவராக இருந்தால் அவர் கடுமையாக உழைப்பவரென்று அர்த்தமில்லை. அவருக்குத் தனது வேலையை குறிப்பிட்ட நேர வரையறையில் திட்டமிட்டு சரியாக நிர்வகித்துக் கொள்ளத் தெரியவில்லை என்று அர்த்தம். அவர் சொந்த மற்றும் சமூக வாழ்க்கை என்று எதுவுமில்லாத தோல்வியடைந்த ஒருவரென்று அர்த்தம்.
நீங்கள் கடுமையாகப் படித்ததும் வாழ்க்கையில் போராடியதும், இயந்திரமயமான அர்த்தமற்ற ஒரு வாழ்க்கைக்காக அல்ல.
நாம் அதிகம் நேரத்தை ஒதுக்க வேண்டியது [illegible]புக்கா அல்லது குடும்பத்துக்கா?





# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# நம்பினால் நம்புங்கள்!

பூமியின் ஒட்டுமொத்த மக்கள்தொகைக்குச் சமமான அளவு பூச்சிகள், பூமியின் ஒருசில இடங்களில் ஒரு சதுர மைல் பரப்புக்கு உள்ளேயே இருக்கின்றன.

பூமி முழுவதிலும் 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கையை விட, இன்று சீனாவில் வாழ்வோர் அதிகம்.

ஒரு குதிரையையே அதிர்ச்சியடைய வைக்கும் அளவு மின்சாரத்தை எலெக்ட்ரிக் ஈல்கள் உருவாக்குகின்றன.


'மனிதனின் ஆத்மா இதயத்துக்குள் அடைக்கப்பட்டிருக்கிறது' என்பது பண்டைய எகிப்தியர்களின் நம்பிக்கை.

ஜப்பானின் ஒசாகாவிலுள்ள ஒரு அலுவலகக் கட்டடத்தின் நடுப்பகுதியூடாக நெடுஞ்சாலை செல்கிறது!

எருமை அளவு எடை கொண்ட ஆமைகள் கூட கடலில் உண்டு!

ஒட்டகத்தைக் காட்டிலும் சில எலிகளால் அதிக நாள்கள் நீரின்றி வாழ முடியும்.

# பேசும் மாய விளக்கு



ஓர் ஊரில் ஒரு வயதான பாட்டி தனியாக வசித்து வந்தார். அந்த ஊரில் கொஞ்ச நாள்களாக திருடர்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. ஒரு நாள் பாட்டி வெளியே போய்விட்டு வந்து பார்த்த போது, வீட்டுக் கதவு திறந்திருந்தது. உள்ளே போன பாட்டிக்கு வீட்டுக்குள் ஒரு திருடன் திரைச் சீலைக்குப் பின்னால் மறைந்து இருப்பது தெரிந்து விட்டது. அவனை எப்படியும் தப்பிக்க விடாமல் புத்திசாலித்தனமாக பிடிக்க வேண்டும் என்று நினைத்த பாட்டி உடனே ஒரு தந்திரம் செய்தாள். அங்கிருந்த விளக்கின் முன் நின்று கொண்டு மாய விளக்கே என் மீது கோபமா? நான் வெளியே போய் வந்ததும் என்ன நடந்தது என்று கேட்பாயே இன்று ஏன் கேட்கவில்லை' என்றாள். இதைக் கேட்டதும் திருடனுக்கு ஆச்சரியம். பேசும் விளக்கா என்று எட்டிப் பார்த்தான். விளக்கு திரைச்சீலையின் அசைவில் லேசாக ஆட பாட்டி, 'கோபமில்லையா? அப்படியானால் என்ன நடந்தது, சொல்கிறேன் கேள். பக்கத்து வீட்டு ஜூலி இன்று கடைத் தெருவுக்குப் போகும் போது ஒரு நாய் அவளைத் துரத்தியது. அவள் சத்தம் போட்டுக் கத்தினாள்.' மீண்டும் விளக்கு காற்றில் அசைய ,'ஓ எப்படிக் கத்தினாள் என்று கேட்கிறாயா' என பாட்டி கேட்டாள். திருடனுக்கோ ஒன்றும் புரியவில்லை. நமக்கு மட்டும் ஒன்றும் கேட்கவில்லை. விளக்கு ஆடுவது தெரிகிறது. ஆனால் கிழவி பேசுகிறாளே என்று குழம்பினான். 'மாய விளக்கே ஜூலி எப்படிக் கத்தினாள் என்று சொல்கிறேன்' என்றபடி பாட்டி உதவி, உதவி என்று உரக்கக் கத்த அக்கம் பக்கம் வீட்டுக்காரர்கள் பாட்டிக்கு ஏதோ ஆபத்து என்று ஓடி வந்தவர்கள் திருடனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். பாட்டியிடம் உங்களுக்கு துணைக்கு ஆள் வேண்டுமா என்று கேட்டபோது,'வேண்டாம் எனக்குத்தான் மாய விளக்குத் துணை இருக்கிறதே என்று சிரித்தாள். பாட்டியின் சமயோசித புத்தியைப் பாராட்டிச் சென்றனர். ஆபத்துக் காலத்தில் சிந்தித்து செயல் பட்டால் அதிலிருந்து நல்லபடியாக நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

# கரப்பான் பூச்சி




கரப்பான் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர் வீச்சை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. மனிதனின் அழிவின் பின்னும் வாழப் போகும் இவை மனித இனம் தோன்றுவதற்கு முன். அதாவது 350 மில்லியன் வருடங்களுக்கு முன், தோன்றியவை. உலகின் துருவப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பகுதிகளிலும் வாழும் கரப்பான் பூச்சியின் தாயகம் ஜேர்மனி நாடாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பாகும். தற்போது உலகில் சுமார் 3490 கரப்பான் இனங்கள் வாழ்வதாகக் கணக் கிடப்பட்டுள்ளது. இவை ஆறு குடும்பங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. கரப்பான் பூச்சி தலை நெஞ்சு வயிறு எனும் மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு மூன்று சோடி கால்களும் ஒரு சோடி உணர்கொம்பும் உண்டு.கரப்பான் பூச்சிக்கு முதுகெலும்பு கிடையாது. இரண்டு சோடி அல்லது ஒரு சோடி சிறகுகள் காணப்பட்டாலும் சில கரப்பான் பூச்சிக்கு சிறகுகள் கிடையாது.கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறமுடையது! இவற்றால் தலை துண்டிக்கப் பட்டாலும் சுவாசிக்க முடியும்!! (சில கரப்பான் பூச்சிகளால் வளி இல்லாமல் 45 நிமிடங்கள் வாழமுடியும்).

# நீங்களும் பிரச்சினை இல்லாத மனிதன் ஆகலாம்

பிரச்சினை இல்லாத மனிதன் எவர் தான் உலகத்தில் இருக்கிறார்கள்? ஒருவேளை 'எனக்கு பிரச்சினை ஒன்றுமில்லை' என்று எவராவது சொன்னால் அது சுத்த பொய் தான் என்பதில்லை. அவர் உண்மையைத் தான் சொல்கிறார். ஏனென்றால் அவர் தனக்கு வரும் எல்லாவித பிரச்சினைகளையும் தைரியமாக எதிர்கொண்டு அவ்வப்போது தாமதமில்லாமல் தீர்த்துவருவதால் அவர் பிரச்சினை இல்லாத மனிதராகிறார். அதேபோல் தன்னால் முடியாத பிரச்சினைகளை தகுந்த நபரிடம் தகுந்த நேரத்தில் ஒப்படைத்து அதன் மூலம் தீர்வு காணும் திறமை பெற்றவர். அப்படி நடந்து கொண்டால் உங்கள் பிரச்சினைகளை எளிதாக தீர்த்துவிடலாம். அதைவிட்டு விட்டு பிரச்சினையான அனைவரிடமிருந்து நீங்கள் விலகி விட்டால் உலகில் அனைவருமே தனித் தனி மனிதனாகி விடுவார்கள்.



ஆகவே நீங்கள் பிரச்சினைகளிருந்து மட்டும் விலகப்பாருங்கள். பிரச்சினைக் குரியவரிடமிருந்து விலகாதீர்கள். அதுபோல பிரச்சினையை எதிர்த்துப் போராடுபவர்களையும், அதை வாதாடுபவர்களையும் எதிர்கொள்ளுங்கள். ஏனென்றால் அதன் தீர்வு அவர்களிடமிருந்து கூடக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அவர்களே உங்களது வெற்றிக்கு உதவுபவர்களாகவும் இருப்பார்கள்



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 9

அண்ணா விளையாட்டுக் கழகத்தின் 35 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மாவத்தை மைதானத்தில் தலைவர் மல்லிகானந்த பரகுலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கௌரவ மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக ஆ.சே.தவநாயகம், இ.ஆனோல்ட், நாகரஞ்சினி ஐங்கரன், ஐயலிங்கம் ஆகியோரும் கௌரவிருந்தினராக ச.சிவரூபன், ர.செல்வக்குமார், சி.விக்னேஸ்வரர், சிவஞானபோதலிங்கம் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பிப்பார்கள்.

## மோசடிக் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றார் கோத்தா

கொழும்பு, மே 9

அம்பாறையில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடிகளை தான் நிராகரிப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள குறித்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அரசியல் பழிவாங்கல்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மீது மக்கள் விடுதலை முன்னணி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் அண்மையில் பதிவு செய்த முறைப்பாடு தொடர்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் கணக்காய்வாளர் உள்ளிட்டோரிடம் கேட்டறிந்து ஒரே நாளில் இதனை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். குறித்த நிதிக்கு என்ன நடந்தது என்று விசாரித்து அறிந்து கொள்ளமுடியும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் எனது கையொப்பங்கள் எதுவும் இல்லை என கோத்தபாய தெரிவித்துள்ளார். (த)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.05.1978 — உதிர்வு 21.04.2011

அமரர் கனகலிங்கம் இலக்குணதேவி

(ஆசிரியை B.A வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

நிலவைக் காட்டித்
தமிழைக் காட்டியவள்
நிலத்தை அளந்தவள்,
குழியில் வீழ்ந்தாள்

கனகலிங்கம் - கணவர்.

## ஏனைய கைதிகளுடன் ஜோன்ஸ்டன் சிறையில்

கொழும்பு, மே 9

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஏனைய கைதிகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

20 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடமொன்றில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் அவருக்கு எவ்வித சலுகைகளும் சிறையில் வழங்கப்படவில்லை. ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகளைப் போன்று சிறைச்சாலை வைத்தியசாலை வசதிகளையும் ஜோன்ஸ்டன் கோரவில்லை.

ஏனைய கைதிகளைப் போன்றே ஜோன்ஸ்டன் இரவில் சிறைக்கூடத்தில் உறங்குகின்றார் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (த)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கனகசபாபதி ஸ்ரீகரன்**(பரன்)


திதி: சஷ்டி

தோற்றம் 05 . 01 . 1953 — மறைவு 20 . 04 . 2014

நா.மகேஸ்வரன்
21A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சிவமயம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 05 . 08 . 1956 — மறைவு: 10 . 04 . 2015

10.04.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்


**அமரர் சங்கரன் தர்மராசா (தருமு)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 10.05.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.
செட்டிக்கட்டை பிள்ளையார் கோவிலடி,
0772680754, 0771751452

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை துரைஜயா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்)

மாட்டின்லேன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை - துரைஜயா (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்) நேற்று (08.05. 2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான தமோதரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவமணி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், பத்மநாதன், கந்தசாமி, கமலாதேவி மற்றும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இ.போ. சபை, கோண்டாவில்), நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சிவபாலன் (உதவி அஞ்சல் அதிபர், கோப்பாய்), காலஞ்சென்ற சிவரமணி மற்றும் சிவரோகினி (சுவிஸ்), சிவநந்தினி (ஜேர்மனி), அனுசியா, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவமதி, சதீஸ்குமார் (சுவிஸ்), யோகராசா (ஜேர்மனி), சிவகரன் (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி சிவசுப்பிரமணியம்- மங்களேஸ்வரி (மங்களம்-நயினாதீவு), திருமதி சோமநாதன்- பூம்பாவை (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பத்தினிப்பிள்ளை மற்றும் சிவராசா-அன்னலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும், கோபிசாந் (பிரதம தபாலகம்-யாழ்ப்பாணம்), விஷ்ணுகாந் (மாணவன்-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கம்சிகா (மாணவி-யா/இந்துமகளிர் கல்லூரி), கிருத்திகா (ஸ்மாட்ஸ் கிட்ஸ், திரு நெல்வேலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1ஆம், ஒழுங்கை,
விளையாட்டரங்கவீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

தகவல்: **சிவபாலன் (மகன்).**
(உதவி அஞ்சல் அதிபர், கோப்பாய்)
021 223 0429, 071 4416852

## வேலணைப் பிரதேச செயலக பிரிவின் சிவில்பாதுகாப்பு குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 9
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டங்கள் பின்வரும் திகதிகளில் இடம்பெறும் என்றும், கூட்டங்கள் நடைபெறும் நேரங்கள் தொடர்பாக பொலிஸார் அறிவிப்பார்கள் எனவும் வேலணைப் பிரதேச செயலகம் தெரி வித்துள்ளது.
எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செட்டிபுலம் கிராம அலுவலர் பிரிவிலும், 18 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும், 25 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணை தெற்கு, வேலணை மத்தி பிரிவுகளி லும், 28 ஆம் திகதி வியாழக்கிழமை சரவணை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலும் மேற்படி கூட்டங்கள் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ–7)

## மோசடி தடுப்புப் பிரிவினரின் பணிகள் மேலும் விஸ்தரிப்பு

கொழும்பு, மே 09
இலங்கையில் புதிதாகச் செயற்பட்டு வரும் நிதிமோசடி தடுப்புப் பொலிஸ் பிரிவு தமது பணிகளை விஸ்தரிக்கவுள்ளது.
இதன்படி தனிப்பட்டவர்கள் மற்றும் ஒரு கட்சியினர் தமது முறைப்பாடுகளை இந்தப் பிரிவில் மேற்கொள்ள முடியும்.
பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார தலைமையில் செயற்பட்டு வரும் இந்தப் பிரிவு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அமைச்சரவை உப குழுவின் முறைப்பாடுகளை விசாரணை செய்து வருகின்றது.
இந்தநிலையில் அமைச்சரவை உபகுழுவின் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப் படாத நிலையிலேயே தனிப்பட்டவர்களின் முறைப்பாடுகளையும் குறித்த பிரிவு விசாரணை செய்யவிருக்கிறது.
இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய நிபுணர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.
குறித்த நிதி மோசடி தடுப்புப் பிரிவின் பணிகள் விஸ்தரிக்கப்படும்போது அது தற்போது செயற்பாட்டில் உள்ள நிதிக் குற்றங்களை விசாரிக்கும் பிரிவைப் பாதிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் மஹிந்த ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு வருவதால் நிதி மோசடி தடுப்புப் பிரிவு அண்மைக் காலமாக மக்கள் மத்தியில் பேசப்படும் ஒன்றாக – உள்ளது. (த)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 04 . 08 . 1942 — இறப்பு 04 . 05 . 2015

### திருமதி கமலவேணி கந்தசாமி

யாழ். காரைநகர் தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலவேணி கந்தசாமி 04-05-2015 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கமயில் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-பூசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தசாமியின் (போட் ஜாட் படகுதள உரிமையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் உதயதாசன், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, ஆனந்ததாசன், கமலாம்பாள், காந்ததாசன், உதயநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணவேணி மற்றும் மதுரவேணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராஜா, ஸ்ரீகுகன், ஸ்ரீநடராஜமூர்த்தி, சுகந்தி, நின்மதி, அருள்வாணி, வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரன், சிந்துஜா, லக்ஷ்மன், குகநேசன், தேவராஜ், இதயராஜ், சுயன், தினேஸ்குமார், லோசன், ரூபன், திலீபன், சோபியா, தினேஸ், தேனவன், நேகா, தருணிகா, நம்மிகா, தென்னவன், ஜெயஸ்ரீ, டிசான், பிரவினா, றொசான், லெனினா ஆகியோரின் அன்புப் பேத்தியும், லக்ஷயா, மிருதுளா, ஆர்த்தி, பிரதா, சதுர்யன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
077 0659284

(59600)(10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி கார்த்திகேசு



முதலாம் கட்டை, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி கார்த்திகேசு 08.05.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் கார்த்திகேசு - சின்னமோனை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், விசுவலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு (காங்கேசன் சிமெந்துக் கூ.தா) வின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செல்வேந்திரன் மற்றும் செல்வநிதி, செல்வந்தி (அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்), செல்வவதனி, செல்வமனோஜா, துசிதா ஆகியோரின் அன்புத் தாயும், சச்சிதானந்தன், சுந்தரலிங்கம், யோகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும், கௌசிகன், நிதர்சனா, கஜானன், லக்சிகன், சுலக்சன், அபிஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் உருக்குமணிதேவி, கணேசபிள்ளை, காலஞ் சென்ற மகாதேவன் மற்றும் பத்மாவதி, வேதநாயகம், காலஞ்சென்ற பரிமள காந்தி மற்றும் வரதராஜா, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் கட்டை,
கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
கார்த்தி பிறிண்டேர்ஸ்
077 481 4937, 077 241 3481

(சி.15788)
(45.3)

### திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம் (அதிசய மக்கா) நேற்று (08.05.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம்- தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ர புத்திரியும், காலஞ்சென்ற ஜெனார்த்த னன் மற்றும் சிவாணி (நோர்வே), சாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரிவீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
T.P: 0772873312

தகவல்: சி.நிசாகரன்
(பேறாமகன்)

(C 15789)(10)

### திருமதி இராசலட்சுமி (அன்ரி) முருகேசு



பிறப்பு 09.06.1936 — இறப்பு 08.05.2015

பம்பலப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு-இராசலட்சுமி நேற்று (08.05.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் நாகலோஜினி (குஞ்சு), காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரி (சாந்தி- பிரான்ஸ்), குமுதினி (சுவேந்தி), சுரேந்திரன் (சயந்தன்-பிரான்ஸ்), காலஞ் சென்ற உஷந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ் சென்றவர்களான நாகமணி, சிவசிதம்பரம் மற்றும் சண்முகநாதன், காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் அன்னலட்சுமி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதீஸ், பிரதீஸ், வாகீஸ், திலீபா, சோபியா, கஜிதா, ஷாலினி, ஹரிகரன், ஹரிநேசன், இந்துஷன், ஏஞ்சலா, அபிசலா, ஆகாஸ், அபிலாஷ், சைனுயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மோகனதாஸ், சாரதா மற்றும் செல்வம் (பிரான்ஸ்), ஸ்ரான்லி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.
0033605958554
0750404417

### திருமதி குணநாயகி முருகவேள்



வடகோவையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மணல்தறை லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணநாயகி முருகவேள் நேற்று (08.05.2015) வெள்ளிக்கிழமை சிவனடி சேர்ந்தார்.
அன்னார் திரு.திருமதி அப்பாக்குட்டி-சரஸ்வதி (ஆயுள்வேத வைத்தியர்) தம்பதியரின் அன்பு மகளும், கொக்குவிலைச் சேர்ந்த திரு.திருமதி செல்லத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகவேளின் (நல்லூர் பிரதேச சபை வரி மதிப்பீட்டாளர்) பாசமிகு மனைவியும், திருமதி மல்லிகைபுஸ்பம் பாலகிருஷ்ணன் (மலேசியா), காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் கந்தசாமி (ஜேர்மனி), காலஞ்சென்ற சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/4, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(59617)(10)

## நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

தென்மராட்சி, மே 9
எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்று சனிக்கிழமை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்நிலையங்கள் பற்றிய விவரங்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுமெனவும், அந்த நிலையங் களுக்கு தமது வளர்ப்பு நாய்களை அழைத்துச் சென்று தடுப்பூசி மருந்து ஏற்றுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த–9)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய டெல்லி வீரர்கள்



டெல்லி அணி வீரர்கள் சென்ற விமானம் மற்றொரு விமானத்துடன் மோத விருந்த விபத்து அதிர்ஷ்டவசமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். லீக்ஆட்டத்தில் டெல்லி அணி பங்கேற்றது. இதைத் தொடர்ந்து இன்று ராய்ப்பூரில் நடக்கும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணியை எதிர்கொள்வதற்காக டெல்லி வீரர்கள் வந்த கொல்கத்தா விமானம் ராய்ப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்கி நின்றுள்ளது. அதே சமயத்தில் மும்பையில் இருந்து வந்த விமானமும் தரையிறங்க முயற்சித்துள்ளது. இந்த நிலையில் கொல்கத்தா விமானம் ஓடு பாதையில் நிற்பதை கடைசி நேரத்தில் பார்த்த மும்பை விமானத்தின் விமானி சிறப்பாகச் செயற்பட்டு விமான விபத்தை தவிர்த்ததாகக் கூறப்படுகிறது. இதனால் கொல்கத்தா விமானத்தில் இருந்த டெல்லி அணி வீரர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். இந்தச் சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ரி)

# தன்வசம் இருந்த வாய்ப்பை தாரை வார்த்தது சென்னை

சிம்மொன்னஸ், பட்டெலின் ஆரம்ப இணைப்பாட்டமும் ராயிடு, பாண்டியாவின் இறுதிக் கட்ட வாண வேடிக்கைகளும் கைகொடுக்க 6 இலக்குகளால் சென்னையை வீழ்த்தியது மும்பை.

சென்னை எதிர் மும்பை அணிகளுக்கிடையிலான ஆட்டம். நடப்பு ஐ.பி.எல். தொடரில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள மிகப் பலமான அணி சென்னை. ஆரம்பத்தில் முடங்கிக் கிடந்தாலும் திடீர் எழுச்சிபெற்று தொடர்ச்சியாக நான்கு வெற்றிகளைக் குவித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது என்ற முனைப்புடன் உள்ளது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் சிமித்துடன் மக்கலம். வழக்கம் போல அதிரடியில் ஆரம்பித்தார் மக்கலம். வழக்கத்துக்கு மாறாக நிதானிக்கத் தொடங்கினார் சிமித். சிமித் வீணடித்த பந்துகளை சமப்படுத்திக் கொண்டிருந்த மக்கலத்தின் இன்னிங்ஸ் 27 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ரெய்னா பத்தே ஓட்டங்களுடன் அணியைக் கைவிட்டுச் சென்றார். 34 பந்துகளில் 27 ஓட்டங்களை மட்டுமே எடுத்து சிமித்தும் ஆட்டமிழக்க சென்னை பத்தாவது பந்துப்பரிமாற்றத்தில் 65–3. பிளாஸிஸ் பதின்மத்துடன் பவிலியன்திரும்பினார். களத்தில் அணித் தலைவர் டோனியுடன் இளம் வீரர் நெகி. சிக்சரை விளாசி அதிரடியைத் தொடக்கி வைத்தார் டோனி. டோனிக்கு மேலால் அதிரடி காட்டிக் கொண்டிருந்தார் நெகி. நெகியின் சிக்சர் ஒன்று பவிலியனின் இரண்டாம் தளத்தில் இடித்துவிட்டு வந்தது. இருநூறுக்கும் அதிகமான சராசரியில் சென்றுகொண்டிருந்தார் நெகி. டோனியும் விடுவதாக இல்லை. இரண்டாவது இமாலய சிக்சரை விளாசினார். இணைப்பாட்டத்தை பிரிக்க முடியாது திண்டாடினார்கள் மும்பை வீரர்கள். மலிங்கவும் இதற்கு விதிவிலக்கல்ல. இருவரினதும் இறுதிக் கட்ட அதிரடிகளும் கைகொடுக்க முடிவில் 158–5 என்ற ஓட்டங்களை சென்னை எட்டியது.

இவ்வாறான எட்டக்கூடிய இலக்கை நிர்ணயித்துவிட்டு அதற்குள் எதிரணியைச் சுருட்டுவது சென்னைக்கு புதியது அல்ல கைவந்த கலை. ஆனாலும் மும்பையின் துடுப்பாட்ட வரிசையை எளிதாக நினைத்து விட முடியாது. களத்தில் சிம் மொன்ஸிடன் பார்த்திவ் பட்டேல். நிதானத்தில் ஆரம்பித்து படிப்படியாக அதிரடிக்கு மாறி நீண்ட நேரம் இணைப்பாட்டமாகநிலைத்து நின்றனர். நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பையின் சிறந்த ஆரம்பம் நேற்றைய ஆட்டத்தில் அமைந்தது என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு கச்சிதமாக ஆடினார்கள். சிக்சரை விளாசிய சிம்மொன்ஸை விட சிக்சர் அடிக்காமலேயே சிறப்பாகச் சென்றுகொண்டிருந்தார் பட்டேல். இணைப்பாட்டம் ஐம்பதைத் தாண்டிப் பயணித்துக்கொண்டிருந்தது. இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. பதினோராவது பந்துப்பரிமாற்றத்தில் 84 ஓட்டங்களை மும்பை பெற்றிருந்த பொழுது அஸ்வினின் சுழலில் சிக்கினார் பட்டேல். அதே பந்துப்பரிமாற்றத்தில் சிம்மொன்ஸிம் விடைபெற சென்னையின் பக்கமும் வாய்ப்புக்கள் தொடர்ந்தும் இருக்கத்தான் செய்தன. தீவுகளின் பொலார்ட்டை ரண் அவுட் செய்தார் தீவுகளின் பிராவோ. 14ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மும்பை 94–3. ராயிடு சில அதிரடிகளை அவிழ்த்து விட இறுதி 2 பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. சுழலைத் தேர்ந்தெடுத்து நெகியிடம் பந்தை ஒப்படைத்தார். வாரி வழங்கினார் நெகி. நான்கு சிக்சர்கள் ராயிடு இரண்டு சிக்சர்கள் பாண்டியா இரண்டு சிக்சர்களை விளாச இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 5 ஓட்டங்களைப் பெறவேண்டும். முடிவில் மும்பை 6 இலக்குகளால் வெற்றிபெற்று சென்னையை மண் கௌவ வைத்தது.

(ரி)




### வீடு விற்பனைக்கு

சுழிபுரம் மேற்கு, ஐயனார் கோயிலடியில் ஒரு பரப்பில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 657 0596 (59591)(9.3)

### வீடு வாடகைக்குத் தேவை

அரச உயர் பதவியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. பலாலி வீதியை அண்மித்த பகுதிகளில் சகல வசதிகளுடனும் கூடிய நல்லநிலையில் உள்ள வீடு விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 006 0555, 021 222 9364

(59610) (10)

### பதவி வெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் அமைந்திருக்கும் "EVERSHINE AMANA ROOFING" தொழிற்சாலைக்கு கீழ்க்கண்ட பணியாளர்கள் மிகவும் அவசரமாக வேண்டப்படுகின்றார்கள். அனுபவமிக்கவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

MACHINE OPERATORS & HELPERS

தொடர்புகளுக்கு:
நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்
இல.92C ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### வேலை வாய்ப்பு

- ★ வரவேற்பாளர்
- ★ கொம்பியூட்டர் ரைப்பிங்
- ★ புத்தகம் கட்டுநர்
- ★ போட்டோ பிரதியாக்கம்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சுயவிபரத்துடன் நேரில் வரவும் காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை

வடக்கின் முன்னோடி அச்சுப்பதிப்பகம்
தொ.பே : 0771974875-

### மணமகள் தேவை

London இல் பிறந்து Electronic and Electrical Engineering Graduate முடித்து America இல் நிரந்தரமாக Network Power Engineer ஆக கடமை ஆற்றும் UK and US Citizen உள்ள 29 வயதுடைய செவ்வாய் குற்றம் மணமகனுக்கு உயரம் 5,6",5-8" Age 22yrs - 24yrs உட்பட்ட நிறமுள்ள Professionally qualified such as computer science or any medical field உள்ளவராகவும் குறைந்த செவ்வாய்க் குற்றம் உள்ள மணமகள் தேவை.

Contract:
001 410 302 5856 (US)
071 971 3259 (SLK),021 205 1111 (SLK)

(59589)(9.3)

### வேலை ஆள்கள் தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

New Pc Lanka
152, இராமநாதன் றோட், யாழ்ப்பாணம்
(ஆனந்தகுமாரசாமி விடுதி முன்பாக)
தொடர்பு: 077 330 2853

(59598)(9.3)

### அச்சக வேலைக்கு ஆள் தேவை

புத்தக பைண்டிங் வேலை தெரிந்த, பழக ஆர்வமுள்ள பெண் வேலையாள் தேவை.
அலுவலக நேரத்தில், சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

தொடர்பு: மேனகா பிரின்டேர்ஸ்
456, K.K.Sறோட், யாழ்ப்பாணம்.
021 222 9468

(59586)(9.3)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலையில் கனகரட்ணம் வீதி, வேலப்பர் ஒழுங்கையில் அமைதியான சூழலில் 3 பரப்புக் காணி, நல்ல தண்ணீர் கிணறு, 6அடி பாதையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

(59599)(12.7) தொடர்பு: 077 627 2629/077 500 4869

### தவறி விட்டது

பரமசாமி தினேஸ்குமார் ஆகிய எனது 873080701V இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ் என்பன அடங்கிய பேர்ஸ் அரசடி வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும். 0777 385701

### காணி விற்பனைக்கு

வைமன் றோட்டில் உள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். 2 பக்க பாதை உண்டு. (நல்லூர் சுற்றாடலில் அமைந்துள்ளது.)

தொடர்பு:
077 6033259, 0777 286061

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றுக்கு

- சமையலாளர் (ஆண்/பெண்)
- ரொட்டி மேக்கர்
- தேனீர் தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

T.P: 0766244387, 0772095431

### வேலைவாய்ப்பு

1. பணவசூலிப்பாளர்:-
   - ✱ அனுபவம் விரும்பத்தக்கது.
   - ✱ மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.

பணிபுரியும் இடங்கள்:-
யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா

2. அலுவலக பணியாளர்:-
   - ✱ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பம் செய்யலாம்.
   - ✱ சிங்களம், தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பணிபுரியும் இடம்:-
கனகராயன்குளம்
பணிமனை.

(57096)(10)

தொடர்பு: 0777 2180 55, 0753666230
சினேறு என்ரபிறைசஸ்
கனகராயன்குளம்.

### வேலைவாய்ப்பு

வளமான வாழ்வை அமைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் நீங்கள் உங்களது அனுபவம், தலைமைத்துவத்தை வளர்த்துக்கொள்வதற்கு சிறந்த தருணம் இதுவே. சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்துவம் பெற கிடைக்கும் அரியதோர் வாய்ப்பு.

1. வெல்த் பிளானர்கள் (நிதிச்சேவை ஆலோசகர்கள்)
   தகைமை: (i) 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக் இருத்தல் வேண்டும்.
   (ii) G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வெல்த் பிளானர் முகாமையாளர்கள் (நிதிச்சேவை முகாமையாளர்கள்)
   தகைமை: நிதிச்சேவையில் முன்னனுபவம் 2 வருடங்களுக்கு குறையாதது.

நன்மை:
1) எல்லைகளற்ற வருமானம்
2) தற்போதைய வருமானத்தில் ஏற்படும் இழப்பு ஈடுசெய்யப்படும்.
3) உங்களுக்கும் குடும்பத்துக்குமான மருத்துவ செலவுக்கான நிதி
4) ஓய்வூதிய திட்டங்கள்
5) குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன், வாகனக்கடன்
6) வெளிநாட்டுப் பயணங்கள்.

உங்களது உன்னத நோக்கத்துக்கான பயணத்தை எம்முடன் இணைந்து இன்றே ஆரம்பியுங்கள்.

இரண்டு உறவினர் அல்லாத சிபாரிசு செய்பவர்களின் விவரம் உள்ளடங்கலாக சுயவிவரக்கோவை (BioData) விண்ணப்பங்களை 16.05.2015 ஆம் திகதிக்கு முன்னராக கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

விளம்பர இல.5060
மே/பா: உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(59590)(10)

# மஹிந்தவின் கனவு பலிக்கமாட்டாது

## கூறுகிறார் சம்பிக்க

கொழும்பு, மே 9

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பிரதமர் கனவு ஒருபோதும் பலிக்காது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மஹிந்தவைப் பணயம் வைத்து மீண்டும் அரசியலுக்கு வரப் பலர் போராடி வருகின்றனர். எனினும் மக்கள் ஒருபோதும் மஹிந்த கூட்டணியை ஆதரிக்கமாட்டார்கள். மஹிந்தவுக்காக தற்போது குரல் கொடுத்து வரும் கூட்டணியே மஹிந்தவின் ஆட்சியை கவிழ்த்தது.

மஹிந்த ராஜபக்ஷவைக் கட்சியில் இணைத்துக் கொள்வதும் அவரைப் பிரதமர் வேட்பாளராக நிறுத்துவதும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தீர்மானமே. ஆனால் அதையும் தாண்டி மக்களின் விருப்பத்துக்கும் அந்தக் கட்சி முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவே தலைவராக வேண்டும் என மக்கள் நினைத்திருந்தால் இன்றும் அவரே ஜனாதிபதியாக இருந்திருப்பார். எனினும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை மக்கள் தோற்கடித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மஹிந்தவின் தோல்விக்கு அவரது ஆட்சியில் நடந்த ஊழல் மற்றும் அடக்குமுறைகளே காரணம் எனப் பொதுவாக கூறினாலும், அவரை சூழ்ந்திருந்த கூட்டணியினால் தான் அவர் தோல்வியடைந்தார்.

மஹிந்தவைப் பலப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அராஜகச் செயற்பாடுகளில் ஈடுபட்ட மஹிந்த ஆதரவுக் கூட்டணி இன்று அரசியல் அநாதையாக மாறிவிட்டது. மஹிந்தவின் செல்வாக்கில் தான் இவர்கள் இன்றும் அரசியல் நடத்தி வருகின்றார்கள். அவர்களுக்கு மஹிந்த இல்லாது மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே தமது அரசியல் வாழ்க்கையை தக்க வைத்துக்கொள்ள மஹிந்தவை மீண்டும் அரசியலில் இழுத்துவிட முயற்சிக்கின்றனர்.

இந்தத் தரப்பினரால் தான் மஹிந்த மீண்டும் அழிவைச் சந்திக்கப் போகின்றார் என்பதை அவர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் மஹிந்தவுக்கு மீண்டும் அதிகார ஆசை வந்துவிட்டது. ஜனாதிபதியாக இருந்த போது தான் அனுபவித்த சுகபோக வாழ்க்கையை மீண்டும் அனுபவிக்க வேண்டும் எனும் அவா ஏற்பட்டுவிட்டது. அதற்காகவே அதிகாரப் பகிர்வில் இப்போது பலம் கூடிய நபரின் இடத்தைத் தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளார். எனினும் மஹிந்தவினால் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. அத்துடன் அவரால் மீண்டும் ஒருபோதும் பிரதமர் பதவிக்கு வரமுடியாது. அவர் தற்போது கட்டிவரும் மனக்கோட்டை ஒருபோதும் பலிக்காது. யார் அவரை பிரதமராக்க முனைந்தாலும் மக்கள் ஒருபோதும் அதனை விரும்பமாட்டார்கள். மக்களின் நம்பிக்கையை இழந்த தலைவர் மஹிந்த என்பதை அவர் நன்கு உணர்ந்து இருப்பார். கடந்த 10 வருடங்களில் மக்கள் அனுபவித்து வந்த துயரங்களை ஒருபோதும் மறந்திருக்கமாட்டார்கள்.

நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் பலர் கருத்துக்களைத் தெரிவித்தாலும் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரும் வரையில் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. 20ஆவது திருத்தம் இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாம் தேர்தல் திருத்தம் தொடர்பில் கட்சிகளுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

எனவே எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் நாம் தேர்தல் திருத்தம் தொடர்பில் யோசனை ஒன்றையும் முன்வைக்கவுள்ளோம். அதற்கமைய அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தேர்தல் முறைமையை கொண்டு வருவதே எமது நோக்கமாகும். சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறிய கட்சிகள் அனைத்தும் தேர்தல் முறைமை மாற்றத்தில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

அதேபோல் ஜாதிக ஹெல உறுமயவின் ஏற்பாட்டில் ஒரு சில சந்திப்புகள் கடந்த காலங்களில் இடம்பெற்றது. 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படவேண்டுமாயின் அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம்–என்றார். (த)

# நந்த மல்லவராச்சியிடம் நேற்று தீவிர விசாரணை

கொழும்பு, மே 9

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி பொலிஸ் விசேட நிதி மோசடி பிரிவு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அவர் நேற்றுக் காலை 10 மணிக்கு நிதி மோசடி பிரிவுக்கு அழைக்கப்பட்டார்.

மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இருந்தபோது 39 மில்லியன் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளராகவும் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவராகவும் நந்த மல்லவராச்சி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# மீதிப் பணம் வழங்காவிட்டால் பஸ் அனுமதிப் பத்திரம் நீக்கம்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 9

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில், சிற்றூர்திகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கான மீதிப் பணத்தை வழங்காமல் போனால், மிகுதிப் பணம் வழங்காமல் இடை நடுவில் இறக்கிவிட்டால் குறித்த பஸ்ஸின் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் நீக்கப்படும் என வடக்கு மாகாண மீன்பிடிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சங்கத்தினருக்கும், தனியார் போக்குவரத்துச் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்தப் பிரச்சினைகள் குறித்து எழுத்து மூலமாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள சங்கங்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தங்களது சாரதிகள் நடத்துநர்களைக் குறிப்பாகப் பெரியவர்கள், சிறியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என பலர் பிரயாணம் செய்யும் இந்தப் பேரூந்துகளில் தங்களது சேவை சரியாக அமைய வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். சில இடங்களில் பல நடத்துநர்கள் மிகுதிப் பணம் கொடுக்காமல் நடுத் தெருவில் இறக்கிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

ஆகவே இந்த நிலை மாற வேண்டும். அதை மாற்ற வேண்டும் என்பதற்காக ஒரு சில நாள்களில் தயாரிக்கப்படவுள்ள நேர அட்டவணையின் பின்னர் இவ்வாறு மிகுதிப் பணம் பெறப்படாத பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாகத் தங்களது முறைப்பாடுகளை வழங்கும் பட்சத்தில் பேரூந்தின் வீதி அனுமதிப் பத்திரம் நீக்கப்படும். அத்தோடு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட பேரூந்துக் கட்டண விவரங்கள் சில மாவட்டங்களில் சரியாக பின்பற்றப்படுகின்றன.

சில மாவட்டங்களில் அவை பின்பற்றப்படுவதில்லை. எனவே நடத்துநர்கள் அதிகளவான பணத்தைப் பயணிகளிடம் இருந்து பெறுவதாகப் பயணிகளால் வழங்கப்படும் முறைப்பாடுகளை கொண்டும் குறித்த பேரூந்தின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்படும் – என்றார்.

(த–21)

# வலசைப் பறவைகள் குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டல்

யாழ்ப்பாணம்,மே 9

வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வலசைப் பறவைகள் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவூட்டும் கருத்தமர்வும், வெளிக்களப் பயிற்சியும் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக வருடந்தோறும் மே மாதத்தின் இரண்டாவது வார இறுதி நாள்களில் உலக வலசைப் பறவைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதன்படி இன்றும், நாளையும் உலக வலசைப் பறவைகள் தினம் யாழ்ப்பாணத்திலும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக வலசைப் பறவைகள் தொடர்பான கருத்தமர்வு மற்றும் வெளிக்களப் பயிற்சிகள், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ளது. இவர்களுக்கான கருத்தமர்வுகள் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் யாழ் மத்திய கல்லூரியிலும் இடம் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டின் தொண்டைமானாறு ஏரி, வல்லைவெளி, சரசாலை குருவிக்காடு, மண்டைதீவு ஆகிய இடங்களில் வெளிக்களப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களோடு, பறவையியல் ஆய்வாளர்களும் பங்குபற்றி கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

உலக வலசைப் பறவைகள் தினத்தின் இறுதி நிகழ்வு ஞாயிறு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (த–14)

## ஊழியர் சேமலாப மீதியை அறியலாம்

ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் தங்களது கணக்கு மிகுதியை நேற்று முன்தினம் முதல் உடனடியாக அறிந்துகொள்ள முடியும். இதற்காக தன்னியக்க இயந்திரமொன்று தொழிற் செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

தன்னியக்க இயந்திரத்தில் தொழிலாளர்கள் தங்களது கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்வதன் மூலம் தமது கணக்கு மீதியை அறிந்து கொள்ள முடியும்.

இதுதவிர தமது தொழில் வழங்குநரால் தமக்கான ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்து கொள்ளமுடியும்.

இலத்திரனியல் முறைமைக்குப் பதிவு செய்துள்ள அனைத்து ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் தமது கணக்குகளைப் பரிசோதனை செய்து கொள்ளமுடியும். இம் முறைக்கு பதிவு செய்யாதவர்கள் பதிவு செய்வதன் மூலம் இச்சேவையை பெற்றுக் கொள்ளமுடியும். (த)

# வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின்பே தேர்தல்

## அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, மே 9

100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை பேச்சாள[illegible] சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன சிங்கள ஊடகமொன்றிற்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் உயிரைப் பணயம் வைத்து நாங்கள் கடந்த அரசிலிருந்து வெளியேறியது தேர்தல் ஒன்றை நடத்துவதற்கல்ல. நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் மனப்பாங்கிலேயே நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

மேலும் கடந்த அரசு செய்ததைப் போன்று நாமும் செய்வதில் எவ்வித அர்த்தமுமில்லை. மாறாக நாட்டில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகவே எங்களின் ஆட்சி எதிர்பார்க்கின்றது–என்றார்.

(த)

# சமூக விரோதச் செயல்கள் குறித்து கிராம சேவகருக்கு அறிவியுங்கள்

யாழ்ப்பாணம், மே 09

உங்கள் பகுதியில் இடம்பெறும் போதைவஸ்து விற்பனை, போதைவஸ்து பாவனை, கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட குற்றச்செயல்களை உங்கள் பிரிவு கிராம அலுவலருக்கு முறையிடுங்கள். எமது இனத்தின் நன்மை கருதி அதனைச் செய்யுங்கள். அது தொடர்பில் அவர் பிரதேச செயலர், அரச அதிபர் ஊடாகப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நடந்த சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. சில சம்பவங்கள் தொடர்பில் கீழ் மட்டப் பொலிஸாருக்கு அறிவிக்கும் போது அவர்கள் மூலமாகக் குற்றச் செயல்கள், சட்டவிரோதச் செயல்கள் புரிவோருக்குத் தகவல் செல்வதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் நேரடியாகத் தனக்கு அறிவிக்குமாறு வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க கூறியிருந்தார்.

அதனைப் பின்பற்றுங்கள். அதே நேரம், உங்கள் பகுதிகளில் இடம்பெறும் இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பில் கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், நூல்நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், விவசாய சங்கங்கள், மீனவ சங்கங்கள் என்பன கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

இங்கு நடக்கும் சட்டவிரோத செயற்பாடுகள், சமூக விரோதச் செயல்கள், பொது இடங்களில் இடம்பெறும் அநாகரிகச் செயல்கள் தொடர்பில் உங்கள் கிராம அலுவலருக்கு அறிவியுங்கள். அவர்கள் பிரதேச செயலர் ஊடாக அரச அதிபருக்கு அறிவித்து அல்லது நேரடியாகப் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க முடியும். அத்தகையவர்கள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(த–14)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் இடம்பெறஉள்ளதாக கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் சங்கத்தலைவர் இ.ஜெயராஜ் தெரி வித்தார்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தொடர் சேவையில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறும் முக்கியமான பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த–21)

# 6 மாதங்களுக்குள் மக்களிடம் சம்பூர்

## கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

**சம்பூரில் கடற்படை வசம் இருக்கும் 237 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பினராலும் விடுக்கப்பட்டிருந்தன.**

சம்பூர், மே 9

சம்பூர் பகுதியில் கடற்படை வசமிருந்த நிலப்பகுதி இன்னும் ஆறு மாத காலத்துக்குள் விடுவிக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சம்பூர் பகுதியில் இலங்கை முதலீட்டுச் சபை வசம் இருந்த 818 ஏக்கர் பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்ற வர்த்தமானி அறிவித்தலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட்டுள்ளார். இதுதொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

"சம்பூரில் கடற்படை வசம் இருக்கும் 237 ஏக்கர் பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பினராலும் விடுக்கப்பட்டிருந்த[illegible] நிலையில் கடற்படை வசமிருக்கும் 237 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு கடற்படை முகாமை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். கடற்படை முகாமை முழுமையாக நகர்த்துவதற்கு சுமார் ஆறு மாதகாலம் தேவையாக வுள்ளது. அதன் பின்னர் அந்தப்பகுதியில் பொது மக்கள் குடியமர்த்தப்படுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை இராணுவம் செய்து தரும்' என்றார். (வ-10)

# பெண் தலைமைத்துவ இரு குடும்பங்களுக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், மே 9

புங்குடுதீவில் பிறந்து சுவிஸில் வாழ்ந்து வரும் ஐ.தர்மகுலசிங்கத்தால் முன்னாள் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ம.ச.பத்மநாதனின் ஏற்பாட்டில்தமிழ் விருட்சம் சமுக ஆர்வ லர்கள் அமைப்பின் ஊடாக வவுனியா மறவன் குளத்தில் வசிக்கும் இரண்டு பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

மறவன்குளத்தில் 7 பிள்ளைகளுடன் வசித்து வரும் சாந்தியின் கணவர் 2015 பெப்ரவரி மாதம் புற்றுநோயால் உயிரிழந்தார். இந்தநிலையில் அவரது மனைவி வறுமையில் பிள்ளைகளுடன் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தார். அவரின் நிலைமைகளை தமிழ் விருட்சம், ஊடகங்கள் ஊடாக வெளிக் கொண்டு வந்து இருந்தது. அதனை அறிந்த புலம்பெயர் வாழ் தர்மகுலசிங்கம் முன்னாள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு அவர்களின் நிலைகுறித்துக் கேட்க, அவர் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமாரிடம் அந்தக் குடும்பங்களின் நிலையைக் கேட்டறிந்து, சுவிஸில் உள்ள தர்மகுலசிங்கத்துக்கு கூறிய தன் பிரகாரம் அவர்களுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங் கப்பட்டன. கோழிக்கூடு, கோழிக்குஞ்சு, மாஸ், விற்றமின்கள், மருந்துகள் என ரூபா 7 5 ஆயிரம் பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டதுடன் வளர்ப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

உதவிகளை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர், அரச கால்நடை பண்ணை போதனாசிரியர் ஆகியோர் வழங்கி இருந்தனர் ,

கணவர் புற்றுநோயால் உயிரிழந்து 4 பிள்ளைகளுடன் கஷ்டப்படும் மலர்செல்விக்கும் ஒரு தொகை பணம் வழங்கப்பட்டது. மலர் செல்விக்கு சாந்த நாயகி நற்பணி மன்றம் தமிழ் விருட்சம் ஊடாக வாழ்வாதார உதவி யாக பசு மாடு ஒன்றையும் வழங்கி இருந் தமை குறிப்பிடத் தக்கது . (வ)

## 18 இடங்களில் மழையால் மின்தடை

தென்மராட்சி, மே 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையின்போது 18 இடங்களில் மின்தடை ஏற்பட்டதுடன் 4 இடங்களில் மின் கம்பிகள் அறுந்துள்ளன.

வீதியோரங்களில் காணப்படும் மரக்கிளைகள் மற்றும் தென்னோலைகள் போன்றவை மின் கம்பிகளில் சரிந்து நின்றபோது திடீரென மழை பெய்ததால் அவை மின்கம்பிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்ததால் மின்தடை ஏற்பட்டதுடன் 4 இடங்களில் பாரம் அதிகரித்து மின்கம்பிகள் அறுந்துள்ளன.

கொட்டும் மழை மற்றும் இடி மின்னலைப் பொருட்படுத்தாமல் மின்சார சபை ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டதால் அநியாய உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மின்கம்பங்களுக்கு அருகில் உள்ள மரங்களின் கிளைகள் மற்றும் தென்னோலைகள் மின்கம்பிகளில் தொங்கிய நிலையில் காணப்பட்டால் அவற்றை அந்தந்தப் பகுதியில் மின்தடை ஏற்படுத்தப்படும் வேளைகளில் குடியிருப்பாளர்களே மின்சார சபையை எதிர்பாராமல் வெட்டி அகற்றி அதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையின் போது சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் மின்கம்பி அறுந்ததால் அந்தப் பகுதியில் உள்ள சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் பிரதான மின் ஆளி எரிந்து சேதமடைந்தது குறிப்பிடத் தக்கது. (வ-9)



வடமாகாண விவசாய அமைச்சால் பாதீனியம் களை தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வரும் வேளையில் வவுனியா சின்னப் புதுக்குளம் பகுதியில் உள்ள வீடுகளுக்கு அருகில் பாதீனியம் களை செழித்து வளர்ந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

# முன்பள்ளிச் சிறாருக்கு கற்றல் சாதனங்கள்






முன்பள்ளி மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பல உதவித்திட்டங்களை அண்மையில் வழங்கினார். அச்சுவேலி, ஊரெழு, சுதந்திரபுரம் பகுதிகளில் உள்ள பாரதி முன் பள்ளி, வளர்பிறை முன்பள்ளி, சர்வசக் முன்பள்ளி, கலைவாணி முன்பள்ளி ஆகிய பாலர் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் கட்புல உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளார். (வ)

## பாடும்மீன் அதிரடியால் அடங்கியது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், மே 9
இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்ட தொடரில் யாழ் உதைப்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 6:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(த-ரி-23)

## இறுதிக்கு முன்னேறியது ஆவரங்கால் மத்திய வி.க

யாழ்ப்பாணம், மே 9
சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்ட தொடரின் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன.
அதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.
5 செற்களைக்கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆரம்பம் முதல் அபாரமாகச் செயற்பட்ட ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி இறுதி இரண்டு செற்களுக்கும் வேலை வைக்காமல் 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.
(த-ரி-23)

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா இன்று

மாங்குளம், மே 9
கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.
கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவசிறி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன் மற்றும் சுகிர்தன், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராஜா, யாழ்மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்த்தர் எம்.ஆர் மோகனதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
(த-ரி-422)

# வடக்குக்கு நான்கு பதக்கங்கள்



யாழ்ப்பாணம், மே 9
இலங்கை மாஸ்டர் தடகளத் தொடரில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு தங்கப் பதக்கமும் மூன்று வெள்ளிப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.
தியகம மஹிந்த ராஜபக் ஷ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்ற இலங்கை மாஸ்டர் தடகளத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 35 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தண்டல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் நஞ்சித்குமார் 110 மீற்றர் தடை தண்டல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் நீளம்பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். இதே வேளை 50வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் குலரெத்தினம் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். மொத்தத்தில் வடக்கு மாகாணத்துக்கு 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன.
(த-ரி-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்
கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் நடாத்தும் 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
அதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்கந்த ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 1மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது.

■ ■ ■


யாழ்ப்பாணம், மே 9
யாழ்மாவட்ட அணிகளிற்கிடையிலான ஹொக்கி தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.
யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையும் யாழ். பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தும் ஹொக்கித் தொடர் இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
லீக் முறையில் நடைபெறும் இந்தத் தொடரில் இன்று மாலை 4மணிக்கு ஓல்ட்கோல்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர் அணி மோதவுள்ளது.
(த-ரி-422)

**மன்னார்**
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை முருங்கன் மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளது.

**வவுனியா**
வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஒரு பகுதியான இருபாலாருக்குமான எல்லே, கரப்பந்தாட்டம், காரத்தே மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இன்று சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

**கிளிநொச்சி**
பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பூநகரி கலைமகள் விளையாட்டுக்கழகம் பூநகரி வடக்கு அணிகளுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கலையொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி தொடரில் 12 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று.போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
(த-ரி-23)

## கனகரத்தினம் ம.வி. சுமாரான தொடக்கம்





மாங்குளம், மே 9
நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும் இடையிலான இரு நாள்கள் கொண்ட துடுப்பாட்ட தொடர் நேற்றைய தினம் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மகா வித்தியாலய அணியினர் முதலில் துடுப்பொடுத்தாடத் தீர்மானித்தனர். ஆரம்பம் சோதப்பலாக அமைய முன்னிலை வீரர்கள் தொடர்ந்து தடுமாறவே செய்தனர். ஒரு கட்டத்தில் 38-3 என்ற நிலையில் திசைமாறிய கனகரத்தினம் மகா வித்தியாலயத்தைச் சுஜீகரனுடன் கலைச்செல்வன் இணைந்து இணைப்பாட்டமாக 86 ஓட்டங்களைப் பகிர்ந்து கனகரத்தினம் மகா வித்தியாலயத்தை மீண்டும் தலை நிமிரச் செய்தனர். பின்வரிசை வீரர்களும் சுமாரான பங்களிப்பை வழங்க நேற்றைய முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் கனகரத்தினம் மகா வித்தியாலய அணி 7 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அதிகபட்சமாக கலைச்செல்வன் 67 ஓட்டங்களையும், விதுன் 30 ஓட்டங்களையும், சுஜிகரன்26ஓட்டங்களையும்,சுரேஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் வித்தியானந்தா கல்லூரி அணி சார்பாக வினோசன், ஜஞ்சயன், தயாளன் தலா இரண்டு இலக்குகளையும், அருணா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.
ஆட்டத்தின் இரண்டாம் நாளும் இறுதி நாளும் இன்றாகும்.
நண்பர்களின் போருக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் தகுருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜாவும் கலந்து கொண்டனர்.
(த-ரி-422-23-102)

## யங்கம்பன்ஸ் - நவஜீவன் நாளை பலப் பரீட்சை

மாங்குளம், மே 9
கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இந்த இறுதியாட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

## தென்மராட்சி மெய்வன்மை அடுத்த வாரம் ஆரம்பம்

தென்மராட்சி, மே 9
தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்டத் தடகளப் போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி தொடக்கம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. மரதன் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.
(த-ரி-9)

# பாகிஸ்தானின் பிடியில் பங்களாதேஷ்



பங்களாதேஷ் – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் தொடர் தற்பொழுது பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸை 557–8 என்ற நிலையில் இடைநிறுத்தியது.

பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பாக இஸ்லாம் 3 இலக்குகளையும் சஹிட் மற்றும் ஹொசைன் தலா 2 இலக்குகளையும் ஷகிப் அல் ஹசன் ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர்.

558 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 107–5 என்ற நிலையில் இருந்தது. சகிப் அல் ஹசன் 14 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார். பின்வரிசை வீரர்கள் நிலைக்கத்தவற நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து அதிரடியைக் கையிலெடுத்தார் ஹசன். ஒருநாள் ஆட்டத்தின் பாணியில் அடித்தாடிக் கொண்டிருந்தார். சிக்சர்களும் இல்லாமல் இல்லை. பின்வரிசை வீரர்கள் பதின்மத்துக்குள் அடங்கிப் போனாலும் அரைச்சதம் கடந்தார் சகிப் அல் ஹசன். அதிரடியைக் கைவிடாது ஹசன் சென்றாலும் மறுமுனையில் 203 ஓட்டங்களுடன் பங்களாதேஷின் இலக்குகள் சரிந்து முடிந்தது.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய அந்தஸ்தில் பாகிஸ்தான் இருந்தாலும் வியூகம் அமைத்து தானே துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. மிக விரைவாக ஆட்டத்தை இடைநிறுத்தும் நோக்கில் அடித்தாட முற்பட்ட பாகிஸ்தானுக்கு இலக்குகள் சரியவும் செய்தது. மறுமுனையில் நிதானத்தின் நாயகன் மிஷ்பா அதிரடியில் சென்று கொண்டிருந்தார். 52ஆவது பந்திலேயே அரைச்சதமும் கடந்தார். 72 பந்துகளில் 82 ஓட்டங்களை விளாசினார். பின்வரிசை வீரர்களின் ஆட்டம் சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை 195–6 என்ற நிலையில் இருந்த பொழுது பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்தி பங்களாதேஷுக்கு வெற்றியிலக்காக 550 ஓட்டங்களை நிர்ணயித்தது.

கடினமான இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷுக்கு அதன் ஆரம்ப வீரர்கள் சற்று நேரம் தாக்குப் பிடித்தாலும் நீடிக்க முடியவில்லை. கையிஸ் 16 ஓட்டங்களுடன் விடைபெற்றார். இக்பாலுடன் இணைந்தார் ஹக்கியூ மூன்றாம் நாள் முடியும் வரை மேற்கொண்டு சரியவிடாது பாதுகாக்க பங்களாதேஷ் 63–1 என்ற நிலையில் உள்ளது. இரண்டு நாள்கள் மீதமிருக்கும் நிலையில் 9 இலக்குகளை வைத்து இன்னமும் 487 ஓட்டங்களைப் பெற்றால் பங்களாதேஷ் வெற்றி பெறலாம். ஆட்டத்தின் நான்காம் நாள் இன்றாகும் ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)




# யுவராஜ் மீண்டும் வருவார்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் அதிக விலைக்கு ஏலம் போனவர் யுவராஜ். அவரை ரூபா 16 கோடிக்கு (இந்திய மதிப்பில்) டெல்லி அணி எடுத்தது. ஆனால் அவர் அதிரடி ஆட்டத்தை வெளிபடுத்தவில்லை. யுவராஜின் அணியான டெல்லிக்கு தற்போது அடுத்த சுற்று வாய்ப்பு மங்கிவிட்டது. இந்த நிலையில் யுவராஜ் மீண்டு வருவார் என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

யுவராஜ் தொடர்பாக கங்குலி தெரிவித்ததாவது:–

யுவராஜ் கடந்த காலங்களில் விளையாடியது போன்ற நிலையான ஆட்டம் அவரிடம் இருக்கிறது. மும்பை அணிக்கு எதிரான மோதலில் அந்த ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தினார். இதுபோன்ற ஆட்டத்தை மேலும் அவர் தொடர வேண்டும். அவர் விரைவில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறேன். யுவராஜ் சிறந்த சகலதுறை வீரராக களம் திரும்பும் பட்சத்தில் இந்தியாவின் மத்திய வரிசை டோனி தலைமையில் உலகக்கிண்ணம் வென்ற பொழுது இருந்த மத்தியவரிசையைப் போன்று பலம் பெறும்–என்றார். (த–ரி)

# பெங்களூரை யாரும் கட்டுப்படுத்த முடியாது



ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டமொன்றில் கெயிலின் அதிரடி மூலம் பஞ்சாப் அணியை வீழ்த்தி பெங்களூர் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

வெற்றி தொடர்பாகப் பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்ததாவது:–

'கிறிஸ் கெய்லின் அதிரடியான ஆட்டமும் வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சும் அபாரமாக இருந்தது. இந்த இரண்டுமே வெற்றிக்கு காரணமாக இருந்தது. வீரர்களின் ஆட்டம் என்னை மெய் சிலிர்க்க வைத்தது. பெங்களூர் அணியை யாரும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இந்த ஆட்டம் அமைந்தது. நடப்புத் தொடரில் கிண்ணம் வெல்லப்போகும் அணிகளின் தெரிவில் பெங்களூரும் ஒன்று என்பது தற்பொழுது வெளிப்படையாகியிருக்கும். இதே சிறப்பான நிலை தொடர வேண்டும் என்பதை விரும்புகிறேன்–என்றார். (த–ரி)




# இலங்கைக்கு இங்கிலாந்து பயிற்றுவிப்பாளர் மெயின்



இலங்கை கிரிக்கெட் அணியின் உடற்பயிற்சிப் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கல் மெயின் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலங்கைச் சுற்றுப் பயணம் ஆரம்பமாவதற்கு முன்னர் மெயின் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர் இங்கிலாந்துக் கழக அணிகளுக்குப் பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டுள்ளார். மெயின் வீரர்களை வலுவூட்டுதல் பற்றியும், விளையாட்டுக் கற்கைகள் பற்றியும் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# தனது அணியையும் எதிர் அணியையும் மதிப்பவனே வீரன்



தன் அணியினர் மீது நம்பிக்கை வைப்பதும் எதிரணியினரை மதிப்ப[illegible]மே ஒரு நல்ல வீரராக உரு[illegible]டுக்க வழிவகுக்கும் என்று சச்[illegible]ர் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியின் ஆலோசகராகச் செயற்பட்டு வரும் சச்சினிடம் வளர்ந்து வரும் வீரர்களுக்குச் சொல்லும் அறிவுரை என்ன என்று கேட்ட பொழுது அதற்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் விளையாடும்போது அணியாக ஒன்று திரண்டு செயற்படுவது மற்றும் சக வீரரை நம்புவது என்பது அவசியம். நம்முடன் போட்டியிடுவோரை வெல்ல வேண்டும். ஆனால் இதற்காக ஆட்டத்தின் மதிப்பீடுகளை மறக்க வேண்டாம் அல்லது ஆட்டத்தை தவறான உணர்வு நெறியில் கொண்டு செல்ல வேண்டாம். சரியான ஆட்ட உணர்வை நாம் வெளிப்படுத்தவேண்டும். அனைத்துக்கும் மேலாக எதிரணியினரை மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்–என்றார். (த–ரி)

# இயலும்வரை போராடுவோம்

## டுமினி

நடப்பு ஐ.பி.எல். தொடரில் எட்டு தொடர் தோல்விகளைச் சந்தித்த பஞ்சாப் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறமுடியாத பரிதாபத்தில் தொடரைவிட்டு வெளியேறியது. பஞ்சாப்பை தொடர்ந்து தற்பொழுது டெல்லி அணியும் தொடரை விட்டு வெளியேற வேண்டிய பரிதாபத்தில் உள்ளது. கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னரே டெல்லிக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

டெல்லியின் வெளியேற்றம் தொடர்பாக தலைவர் டுமினி தெரிவித்ததாவது 'டெல்லி கிண்ணம் வெல்லக்கூடிய தகுதி உடைய அணிகளுக்குள் ஒன்று. இவ்வாறு அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் பாதியிலேயே வெளியேறுவோம் என்று எதிர்பார்க்கவில்லை. எமது அணியின் பலவீனம் பந்துவீச்சு வரிசை பலமற்று இருப்பதே. ஒவ்வொரு ஆட்டத்திலும் யாரோ ஒருவர் தவறு செய்துவிடுகிறார். மீதமுள்ள ஆட்டங்களில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேற இயலுமானவரை போராடுவோம். அல்லது கௌரவமாக வெளியேறுவோம்–என்றார். (த–ரி)

# பீற்றர்சனே எனது உதாரணம் - கூடா



ராஜஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ள தீபக் கூடா பீற்றர்சன்தான் எனது முன் உதாரணம் என்று தெரிவித்துள்ளார்.

பீற்றர்சன் தொடர்பாக கூடா தெரிவித்ததாவது:–

கெவின் பீற்றர்சன் எனது முன்னுதாரண வீரர். அதிரடி வீரரான அவர் அடிக்கும் நீண்ட விளாசல்களை விரும்புகிறேன். பயிற்சியின்போது பீற்றர்சனின் நீளமான சிக்சர்களை அடித்து பயிற்சி செய்கிறேன். பீற்றர்சன் மீண்டும் இங்கிலாந்து அணியில் இணைய வேண்டும். இங்கிலாந்து மக்களைப் போலவே பீற்றர்சனை இங்கிலாந்து தேசிய உடையில் பார்க்க நானும் ஆர்வமாக உள்ளேன்–என்றார். (த–ரி)

# ரொனால்டோவை பின்பற்றும் கெயில்





உதைபந்தாட்டத்தில் கோலடித்த பின்னர் ரொனால்டோ நடந்து கொண்டதைப் பின்பற்றி சதம் கடந்த பின்னர் அதை அவ்வாறே வெளிப்படுத்தியுள்ளார் கெயில். நடப்பு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் எதிர் பெங்களூர் மோதிய ஆட்டத்தில் தனது அதிரடியின் மூலம் சதத்தைக் கடந்தார் கெயில். சதம் கடந்த கெயில் ஓடிச்சென்று சீருடையில் தனது பெயர் பொறித்திருக்கும் பகுதியை படப்பிடிப்பாளருக்கு காண்பித்து நின்றார். இது கெயிலின் சுயமான சிந்தனை அல்ல மாறாக உதைபந்தாட்ட தொடரில் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வரும் உதைபந்தாட்ட ஜாம்பவான் கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் சிந்தனையை அப்படியே பின்பற்றியுள்ளார் கெயில். சில நாள்களுக்கு முன்னர் ரியல் மட்ரிட் அணிக்காக கோலடித்த ரொனால்டோ நடந்து கொண்ட விதத்தை பார்த்த கெயில் தனது சதத்தின் பின்னர் அதை அவ்வாறு அரங்கேற்றியுள்ளார். இத்துடன்நின்றுவிடாது இதை கெயில் ஒப்புக்கொள்ளவும் செய்துள்ளார். (த-ரி)

## மிர்ஷாவின் வெற்றிப் பயணம் ஸ்பெயினிலும் தொடர்கிறது

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சானியா மிர்சா (இந்தியா)– மார்ட்டினா கிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

மிர்ஷா–மார்டினா ஜோடி ஜானெட் ஷரோவா – ரால்கா ஜோடியை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா–மார்ட்டினா கிங்கிஸ் ஜோடி 6–2, 6–3 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறியது. மிர்ஷாவும் மார்டினாவும் ஜோடி சேர்ந்ததன் பின்னர் தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்து வருவதுடன் இரட்டையர் பிரிவில் முதலிடத்தையும் கைப்பற்றியிருந்தனர். மிர்ஷா–மார்டினா ஜோடி இதுவரை ஒரேயொரு தோல்வியை மட்டுமே சந்தித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த–ரி)



## ஸ்பெயின் ரென்னிஸ் முடிவுகள்



ஆண்டி முர்ரே, ரபேல் நடால் ஆகியோர் மட்ரிட் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர். ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வரும் மட்ரிட் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடந்தன. இதில் பிரிட்டன் வீரர் அண்டி முர்ரே, ஸ்பெயின் நாட்டின் கிரானலோர்ஸை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் அண்டி முர்ரே, 6–2, 6–0 என்ற நேர் செற்களில் எளிதில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் உலகின் மூன்றாம் நிலை வீரரான ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடால், போலேலியுடன் மோதினார். களி மண் தரை ரென்னிஸில் வல்லவரான நடால் இந்த ஆட்டத்தில் 6–2, 6–2 என்ற நேர் செற்களில் போலேலியை வீழ்த்திக் காலிறுதிக்குத் தகுதி பெற்றார். மற்றொரு ஆட்டத்தில் ஜப்பான் வீரர் நிஷா கோரி, ஸ்பெயின் வீரர் பாடிஸ்டா அகுட்டை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் நிஷா கோரி 6–3, 6–3 என்ற நேர் செற்களில் பாடிஸ்டா அகுட்டை வீழ்த்தினார். கனடாவின் மிலாஸ் ரோனிக், ஆர்ஜென்ரீனாவின் லியனார்டோ மேயரை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் ரோனிக் 6–4, 6–3 என்ற நேர் செற் கணக்கில் மேயரை வீழ்த்தினார். (ரி)

## சங்கா எதிர் மஹெல

இங்கிலாந்தின் கழகங்களுக்கிடையில் தற்பொழுது நடைபெற்றுவரும் தொடரில் சசெக்ஸ் அணிக்காக மஹலே ஜெய வர்த்தனேயும் சர்ரே அணிக்காக சங்காவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களான இவர்கள் சமீபத்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரோடு சர்வதேச ஆட்டங்களுக்கு விடை கொடுத்தனர். இதனால் சங்காவையும் மஹெலவையும் களத்தில் மீண்டும் பார்க்க முடியாது என்றிருந்த ரசிகர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் ஒரே சீருடையில் ஒன்றாக விளையாடிய இவர்கள் தற்பொழுது வெவ்வேறு சீருடையில் வெவ்வேறு அணிகளுக்காக விளையாடுகின்றனர். (ரி)



## டோனியின் மாணவன் ஹோக்லி

விராட்ஹோக்லி ஓட்டங்களைக் குவிக்கும் வரையில் அவரது சொந்த நடத்தையைப் பற்றி பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை. ஹோக்லி தலைமைத்துவத்தில் நிச்சயம் கலக்குவார். இவரது தலைமையில் இந்தியா மீண்டும் உலகக் கிண்ணம் வெல்லும் என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார். ஹோக்லி தொடர்பாக கங்குலி தெரிவித்ததாவது:–

விராட் ஹோக்லி ஓர் அபாரமான கிரிக்கெட் வீரர். அவரை நான் அப்படித்தான் பார்க்கிறேன். அவர் இளம் வீரர். 26 வயது தான் ஆகிறது. எனவே கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது. அதிகமாக கற்றுக் கொள்ளும் போது மேலும் சிறப்பாகச் செயல்படுவார் என்றே நான் கருதுகிறேன். அனைத்தையும் விடுத்துப் பார்த்தால் அவர் ஓர் அருமையான வீரர் என்பதே முக்கியம்.

அவர் இப்போது விளையாடும் அதே ஆக்ரோஷ பாணியில் தொடர்வார் என்று நம்புகிறேன். அதையே நானும் விரும்புகிறேன். ஒவ்வொரு வீரரும் வெவ்வேறானவர்கள், அதன்படியே ஒருவரை எடைபோடவேண் டும். அவர் எவ்வளவு ஓட்டங்களை எடுக்கிறார் என்பதை மட்டுமே நான் பார்க்கிறேன். மற்றவை பற்றி அல்ல. ஒரு நாள் அவர் நிச்சயம் இந்திய அணியை உலகக்கிண்ணச் சம்பியனாக மாற்றுவார். ஆனால் டோனியையும் ஹோக்லியையும் ஒப்பிடுவது கூடாது. ஏனெனில் டோனி ஆசிரியர் கோஹ்லி மாணவன்–என்றார், (த–ரி)

A/L ஆசிரியர் தேவை

தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் பாடம் கற் பிப்பதற்கு திறைமையும் விருப்பமும் உள்ள ஆசிரியர் தேவை.

எழுதுவினைஞர் தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு 25 வயதுக்கு மேற்பட்ட யாழ். நகரில் இருந்து 5 Km சுற்றாடலில் வசிக்கும் பெண் எழுதுவினைஞர் தேவை. தொடர்பு:-

077 2487774, 021 221 7860

பணிநிலை வேண்டுகை




நேர்முகத்தேர்வு
11.05.2015 முதல் 16.05.2015 வரை
காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: +94 21 222 2717/ 8
+94 21 222 2737

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.